பகுத்தறிவின் சிகரம்
பெரியார் ஈ.வெ.ரா.

பகுத்தறிவின் சிகரம்

பெரியார் ஈ. வெ. ரா.

ஏ. எஸ். கே.

முதல் பதிப்பு : மே, 1974

மக்கள் பதிப்பு: ரூ. 4 50
நூலகப் பதிப்பு: ரூ. 6-50

நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்
சென்னை-58

பகுத்தறிவின் சிகரம்

பெரியார் ஈ. வெ. ரா.

இந்திய தத்துவஞான விமர்சனம்

பகத் ஹவுஸ் பப்ளிகேஷன்ஸ்
பகத் ஹவுஸ்
1/73 பிராட்வே : : சென்னை-600 001.

ON PERIYAR

A Super-nova blaz'd in the azure sky,
Looked down and saw a world of caste and cant,
Its frown made the Brahmin priest and devil fly,
No more could they give their shibboleth a godly slant.


The poor Harijan, banned from entering Vaikkom,
Curs'd his own Fate and thought it was god-made,
A young handsome Man went there and said : "Come,
We shall walk these streets, till shadows fade !"

He was a Patriot and loved this Great Land,
He loved Man and hated superstition and caste,
He has left his Great Foot-prints on times sand
They shall doubtless for ever last !


A tall, handsome Man, Great and good,
He lived all his Life for the noblest cause,
He sleeps now forever, as you and I should,
We and posterity will rue the loss.

He spoke the Truth that there is no god,
Many were angry for they loved but fraud,
He saw very clearly that god was common sod,
He was laid to rest on Christmas Day, forget not this Lord !

— A. S. K.



அர்ப்பணம்



மா. சிங்காரவேலு

பெரியார் அவர்களின் வலது கரமாக இருந்து ஜாதி மத-மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்துத் தமிழகத்தில் சோஷலிஸத்திற்கு வித்திட்டவர்.

என்னுரை

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைப் பற்றிய இந்த நூலை நான் எழுதியதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றைச் சுருக்கமாக இங்கு விளக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

முதல் காரணம்

பெரியார் ஈ. வெ. ரா. பிராமணதுவேஷி; பிராமணர்கள் அவருக்குப் பிடிக்காது, என்று பெருவாரியான பிராமணர்கள் நினைப்பதோடு, பிரச்சாரமும் செய்து வருகிறார்கள். இந்தக் கருத்து முற்றிலும் தவறு; இது பெரியாரைப் பற்றிய அவதூறு பிரச்சாரமாகும்.

பெரியார் அவர்களே பல கூட்டங்களிலும், நேரடியாகப் பலர் அவருடன் உரையாடிய காலத்திலும் ''பிராமணர்களை அல்ல, பிராமணீயத்தையேதான் நான் எதிர்க்கின்றேன்'' என்று கூறியுள்ளார். **அவர் பிராமணீயத்தை எதிர்த்தது நாத்திகக் கண்ணோட்டத்தால் என்பதில் சிறிதும் ஐயமில்லை.**

இந்து தத்துவமும் சமயமும் வருணாஸ்ரம தருமம் என்ற அடித்தளத்தின் மீது எழுப்பப்பட்ட கட்டடங்கள் என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். பிராமணீயம் வருணாஸ்ரம தர்மத்தின் அடிப்படையாகும். வருணாஸ்ரம தர்மம் ஜாதிப் பிரிவினையையும் அவரவர் ஜாதிக்குரிய வேலையைச் செய்வதும் தான் அவரவர்க்கு ஈசன் விதித்த கட்டளை என்று கூறுவதையும் ஜாதிக் கொடுமைகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை, போன்ற பல சீர்கேடுகளையும் நியாயப்படுத்துகின்றது. இத்

தீமைகளையே பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கடுமையாக வன்மையாக எதிர்த்துச் சாடிவந்தார்.

இந்து தத்துவ சாத்திரம் பிராமணீயத்தைத் தூக்கிப் பிடித்துத் தாங்கிநிற்கின்றது. ஆகவே, இவை எல்லா வற்றையும் எதிர்ப்பது என்றால் கண்டதற்கெல்லாம் கடவுள் என்ற கற்பனைப் பொருளை முன் கொண்டுவந்து நிறுத்துவதை எதிர்ப்பதேயாகும். சுருங்கக் கூறின், கடவுள் நம்பிக்கை, மூடப்பழக்கவழக்கங்கள் முதலியவற்றை எதிர்ப்பது என்றால் அது நாத்திகம் தான். நாத்திகத்தின் அடுத்த உயர்நிலைப்படி—பொருள்முதல் வாதமாகும். விஞ்ஞான ரீதியான பொருள் முதல் வாதமே—தர்க்க இயல் பொருள் முதல்வாதமாகும். இவற்றின் அடிப்படை விஞ்ஞானம் தழுவிய பகுத்தறிவேயாகும்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பகுத்தறிவின் சிகரமாக விளங்கி வந்தார். இதை விளக்கிச் சொல்லவேண்டும் என்பது முதல் காரணம்.

இரண்டாவது காரணம்

1934-1935-ல் இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் நான் உறுப்பினராகச் சேர்ந்தேன்; அன்று முதல் இன்று வரை (என் மூச்சு உள்ளவரை) இந்தக் கட்சியில் இருந்து வருகிறேன்; வருவேன். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பல தடவை என்னிடம் கூறியுள்ளார்.

நீங்கள் செய்யவேண்டிய வேலையை நான் செய்து **வருகிறேனே**, அப்படி இருக்க ஏன் திரு. . என்னைத் தாக்கிக் கொண்டே இருக்கிறார்?''

அதாவது, கடவுள் எதிர்ப்பு, ஜாதிப் பிரிவினை, தீண்டாமை. சமுதாயக் கொடுமை, இவை எல்லா வற்றையும் எதிர்ப்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலை அல்லவா. நான் அந்த வேலையைச் செய்து வருகிறேனே. . அவ்வாறிருக்க கம்யூனிஸ்டுக் கட்சி என்னை எதிர்ப்பதேன்?'' என்று பெரியார் அவர்கள் என்னிடம் விநயமாகவும்,

உருக்கமாகவும் பன்முறை கேட்டு வந்துள்ளார். இது முற்றிலும் உண்மை. **பெரியார் அவர்களைப் பற்றிச் சரியான கணிப்புப் பல தோழர்களுக்கு இல்லை என்பது என் கருத்து.** இந் நூலை எழுதுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

மூன்றாவது காரணம்

இந்திய தத்துவ ஞானத்தைப் பற்றிப் படித்தவர்களும் ஆராய்ச்சி செய்தவர்களும் சிலரே. என்னைப் பொருத்த மட்டிலும், ''யான் கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு'' என்று கூறமுடியும்.

நான் கற்றது சிறிதளவாயினும் அதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற அவா எனக்குத் தோன்றிய போதெல்லாம் நான் அடிக்கடி கண்டு உரையாடி வந்த பெரியார் அவர்கள் நினைவுவரும். என் கருத்து, **பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஒரு பழுத்த தத்துவஞானி என்பதேயாகும்,** அவரை இந்திய தத்துவ பகைப்புலனில்-அடிப்படையில் காணவேண்டும் என்பது என் அவா. இதுவும் இந்நூலை இயற்ற முக்கிய காரணம்.

நான்காவது காரணம்

இந்திய தத்துவத்தை ஆழ்ந்து நோக்கினால் 'மெய்ம்மை' ஒன்றில்லை என்ற உண்மையை நன்கறியலாம். திரை நீக்கிக் ''கடவுளை''க் காண்பித்த அருட்போதகர் எவரையும் இந்திய தத்துவ சாத்திரத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் காண முடியவில்லை. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகளில் காட்டப்படும் ''அவதாரங்கள்'' தாம் ''கடவுள்'(?) என்று கூறப்படுகின்றன.

''தசாவதாரங்களும்'' அவைகளை ஒட்டி எழுந்த புராணக் கதைகளும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை. சுவாமி விவேகானந்தர் அவர்களே கிருஷ்ணாவதாரம் என்பது பொய் என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார். ஆகவே, இவற்

றைச் சுருக்கமாக இந் நூலில் சொல்லவேண்டும் என்பதும் இந் நூலை இயற்ற மற்றொரு காரணம்.

ஐந்தாவது காரணம்

கடவுள் என்பதொன்றில்லை; ஆன்மா என்பதொன்றில்லை; இறந்த பின் மறுபிறப்பு என்பதொன்றில்லை; சுவர்கம் என்பதொன்றில்லை; இவை என் ஆழமான கருத்துகள். ஏதோ இக் கருத்துகள் புதியவை எனவும் இவற்றை எல்லோருக்கும் எடுத்துச் சொல்ல நான்தான் முதலில் முன் வந்துள்ளேன் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது.

என் கருத்துகள் இந்திய தத்துவ சாத்திரங்களில் ஏற்கெனவே எண்ணற்ற சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. **பகுத்தறிவின் இமயமாகிய பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் ஆணித்தரமாக இந்தக் கருத்துகளைக் கூறிவந்துள்ளார்.** ஆகவே, இவற்றைப் பற்றிச் சுருக்கமாக இந் நூலில் விளக்கவேண்டும் என்பதும் ஒரு காரணம்.

நான் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை 1937-38-இல் முதன்முதலில் சந்தித்தேன். முதல் சந்திப்பிலிருந்து தொடர்ந்து பன்முறை அவரைச் சந்தித்துப் பேசும் பேறு எனக்குக் கிடைத்தது.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தொண்டைப் பற்றி நீண்ட நெடுங்காலமாக எனக்கு ஆழ்ந்த நன்மதிப்பு உண்டு. என் நண்பர் காலம் சென்ற தோழர் ப. ஜீவானந்தம் அவர்களுடன் பன்முறை இது பற்றி விவாதித்துள்ளேன். என் கட்சியில் பலருக்கும் என் கருத்துகள் என்ன என்பது தெரிந்திருந்த போதிலும் அவை பற்றிக் கவலைப்படாதவர்கள் பலர். ஆகவே, 1968-ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைப் பற்றி என் கருத்துகளை ஒரு சிறிய நூல் வடிவத்தில் வெளியிட வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. தோழர் கே. முருகேசன் அவர்கள் உதவியைக் கொண்டு ''குடியரசு'' பத்திரிகை பழைய இதழ்களையும், சில கட்டுரைகளையும் திரட்டி, எழுதத் தொடங்கினேன்.

தோழர் முருகேசன் உதவி பெரிய அளவு எனக்குக் கிடைத்தது. தோழர் கே. முருகேசன், தோழர் ப. ஜீவானந்தம் முதலியோர் பல ஆண்டுகள் பெரியார் தொடங்கிய சுயமரியாதைக் கட்சியில் இருந்து பெரியாருடன் நெருங்கிப் பழகினவர்கள். 1936 இல் திருச்சியில் நடைபெற்ற இடதுசாரி சுயமரியாதை மாநாட்டிற்குப் பிறகு, இவ்விரு தோழர்களும், பல தோழர்களுடன் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் வந்து சேர்ந்தனர்.

1963 ஜனவரி 18 ஆம் நாள் தோழர் ஜீவா மறைந்தார். 1970 ஆகஸ்டுக்குப் பிறகு தோழர் கே. முருகேசன் அவர்கள் புது டில்லியிலுள்ள கட்சித் தலைமைச் செயலகத்துக்குப் பணியாற்றச் சென்று விட்டார். பெரியாரைப் பற்றி நான் எழுதத் தொடங்கிய நூல் 70 பக்கங்களுடன் அப்படியே நின்று விட்டது; அதைத் தொடர்ந்து எழுத வாய்ப்பில்லாமலிருந்தது.

இதற்குள் ''தங்கம்மா'' என்ற நாவலை எழுதி முடித்தேன். இந்தப் புத்தகத்தில் ஜாதிக் கொடுமைகள், நாத்திகம், பொருள் முதல் வாதம், உலக உற்பத்தி முதலியவற்றைப் பற்றி எழுதும் போதெல்லாம் பெரியார் அவர்களின் நினைவு வந்து கொண்டிருந்தது. அவர்களுக்கு இந் நாவலை அர்ப்பணிப்பது மிகப் பொருத்தம் என்று முடிவு செய்தேன். அந்த முடிவை நிறைவேற்றும் பேறும் பெரியார் வாழ்நாளிலேயே எனக்குக் கிட்டியது.

பெரியாரைப் பற்றிய நூலை எழுதத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் அடிக்கடி வந்தபோதிலும் தினசரி தொழிற்சங்க வேலைகள் எல்லா நேரத்தையும் விழுங்கி விட்டன.

1973 டிசம்பர் 24 ஆம் தேதி தமிழகத்தை இருள் சூழ்ந்தது.

தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, ''தமிழா! தலை நிமிர்ந்து, நிமிர்ந்து நில்! தன்மானத்தோடு வாழ்!!,, என்று

அறைகூவி அழைத்த ஆசான் பிரிந்தான். தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கி விட்டது; ஆனால், இந்தக் கலையைக் கற்பித்த ஞானி ஆழ்ந்த உறக்கத்தில் அமர்ந்து விட்டான். மூடப்பழக்க வழக்கங்களையும், இல்லாத கடவுளை உண்டு என்ற மூட நம்பிக்கையையும் ஒழித்து, ஜாதிக் கொடுமைகள், குறிப்பாகத் தாழ்த்தப் பட்டோர் படும் சொல்லொணு இன்னல்களைப் போக்கி, மனிதன் மனிதனாக, பகுத்தறிவு படைத்தவனாகத் திகழ வேண்டும் என்று அல்லும் பகலும் பாடுபட்டு வந்த மேதையின் மறைவு ஈடுகட்ட முடியாத இழப்பாகும்.

இச் சிறிய நூலில், பெரியாரின் புகழைப் புகுத்துவது, அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்துவது போல்வதாகும். அச்சக்தியோ, திறனோ, தகுதியோ எனக்கில்லை என்பதை நான் நன்கு உணர்வேன். எனினும், சில விஷயங்களைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

குழந்தைப் பருவத்திலிருந்து சுமார் 13 அல்லது 14 வயது அடையும் வரை நமது பெற்றோர்களின் வழி காட்டுதல் மிகப் பெரிய அளவு நமது எண்ணங்களையும், கருத்தோட்டங்களையும் உருவாக்குகின்றது. பிறகு, கல்வியும், சுற்றுச் சார்பும், எண்ணங்களில், கருத்தோட்டங் களில் மாற்றங்களைக் கொண்டுவந்த போதிலும், ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'',

என்ற பழமொழியின் உண்மையை மாற்றுவது மிக மிகக் கடினமாகிறது; பழைய எண்ணங்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன. கசடறக் கற்றோர், கற்றபின் கற்றவாறு நிற்போர், கோடியில் ஒருவரே. கோடியில் ஒருவர் பெரியார். குழந்தைப் பருவத்தில் கடவுளைப் பற்றி யும், ஜாதியைப் பற்றியும், பெற்றோர் எவ்வளவு சொன்ன போதிலும், தம்பகுத்தறிவைக் கொண்டு, தாமே சிந்திக்கத் தொடங்கும் காலம் வந்ததும், கற்றதும், கேட்டதும். கண்டதும், அவற்றின் படி நின்றதும், பெரியாரைத் தலைவனாக்கின. கடவுள் இல்லை என்பதை இளமையில்

பலர் ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆனால், திருமணம் செய்து கொண்டு, பேரன் பேத்திகளை எடுத்த பிறகு, இவர்கள் சிவக்கொழுந்துகளாகவும். விஷ்ணுபக்தர்களாகவும் மாறி விடுவதைப் பார்க்கலாம். சாகிற காலத்திலாவது ''சங்கரா! சங்கரா!'' என்று சொல்லிக் கொண்டிருந்தால், செய்த பாபமனைத்தும் கழிந்து, சிவலோகத்தையோ, வைகுண்டத்தையோ அடையலாம், அங்குக் கடவுளைக் காணலாம், என்ற மூட நம்பிக்கை ஆட்கொண்டு விடுகிறது. மேலும், குழந்தையாக இருந்த காலத்தில் புகட்டப்படும் கடவுள் நம்பிக்கை. வயது முதிர்ந்த காலத்தில், அப்படியே அவர்களைப் பற்றி நிற்கிறது.

ஆகவே, வேதங்களையும், உபநிஷதுகளையும், சைவ சித்தாந்த நூல்களையும் ஆராய்ந்து, அவற்றில் கூறப்படும் கருத்துகள் எவ்வாறு பகுத்தறிவிற்கு ஒவ்வாதவை என்று உணர்ந்த பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

''கடவுள் இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!!''

என்று அவர் வாழ்ந்த காலமெல்லாம் கூறிவந்தார் என்றால். ''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற.'' என்பதனை நன்கு உணர்ந்தே யாகும்.

எனவே, பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இந்திய தத்துவ ஞானிகளின் வரிசையைச் சேர்ந்தவர், என்பது என் ஆழமான கருத்து.

சுவர்கலோகம் என்றில்லை; நரகலோகம் என்றில்லை; மனித வடிவத்தில் கடவுள் என்றொன்றில்லை, என்பவற்றை ஆதிசங்கரரும், சுவாமி விவேகானந்தரும் மிகத் தெளிவாக. எடுத்துரைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு முன் வாழ்ந்த புத்தருக்கும், மகாவீரருக்கும் கடவுள் என்ற ஒரு பொருள் இல்லை. ஆனால் பெரியார் இவ்வுண்மையை எடுத்துச் சொன்னால் ''சனாதன தர்ம''த்தைக் கடைபிடிப்போர் சீற்றத்துக்கு எல்லையே இல்லை.

இந்திய தத்துவ ஞானத்தை ஆராய்ந்து பார்த்தால், நாத்திகம்தான் மேலோங்கி நிற்கின்றது என்பது தெளிவு.

சனாதன "தர்மம்" என்பது வேதங்கள் கூறும் வருணாஸ்ரம தர்மமேயாகும். வருணாஸ்ரம "தர்மம்" என்றால், வருணங்களான, (ஜாதிகள்) நான்கு, பிராமணன் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்போர் அவரவர் ஜாதிக்கு வகுக்கப்பட்ட தொழில்களைச் செய்ய வேண்டும்; அதுதான் "தர்மம்"; அதுதான் தெய்வ சித்தம் என்பதாகும்.

இந்திய தத்துவ ஞானமும் சமயமும் இரண்டறக் கலந்துள்ளன. ஆகவே, நம் நாட்டில், தத்துவ ஞானிகள் சமய குருக்களாகவும் காட்சி அளிக்கின்றனர். இது வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத விந்தை. தத்துவமும், சமயமும், மூடநம்பிக்கையையுங் மூடப்பழக்க வழக்கங்களையும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும், பகுத்தறிவிற்கும் ஒவ்வாத ஊகங்களையும் வலியுறுத்தி வந்துள்ளன. நிகழ்கால நிலையை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக தங்கள் தலைவிதி என்று நினைத்து, தலை விதியை மாற்ற முடியாது என்ற எண்ணத்துடன், சமுதாயக் கொடுமைகள் அனைத்தையும் மக்கள் அப்படியே பொறுத்து வருகின்றனர்.

ஆகவே, மக்கள் இருதலைக் கொள்ளி எறும்புபோல் உள்ளனர். சமுதாயக் கொடுமை, பொருளாதார அடிமைத்தனம், இவ்விரண்டையும் ஒழித்தாலொழிய மனிதன் மனிதனாகவாழ இயலாது, மக்கள் மக்களாக வாழ முடியாது.

இந்தப் பெரும் பணியில் பெரியார் **ஈ. வெ. ரா.** அவர்கள் முழுக்க முழுக்க ஈடுபட்டுத் தன் வாழ்நாள் முழுவதையும், இதற்கே அர்ப்பணம் செய்தவர், அவர் ஆற்றிய பணியை இதுவரை இந்திய மக்கள் சரிவர கணிக்கவில்லை என்பது என் திடமான கருத்து. அவர் பணி தொழிலாளி வர்க்கப் புரட்சிக்கு மிக மிக இன்றியமையாத அடித்தளம்-வழித்தடம் அமைத்துத் தந்துள்ளது என்பது என் வலிமையான கருத்து.

சுயமரியாதை இயக்கம் சோஷலிஸ கருத்துக்களைப் பரப்பிய காலத்தில் அக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு அந்த இயக்கத்தில் பங்கு பெற்றவர்களும் உண்டு.

நாத்திகத்தையும், பகுத்தறிவையும், பொருள்முதல் வாதத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் நம் நாட்டில் பலர் சோஷலிஸ்டு கட்சிகள் என்று நிறுவிக்கொண்டு தங்களைச் சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். பகுத்தறிவு என்றால் நாத்திகம். நாத்திகமில்லாமல் சோஷலிஸம் என்பது ஆகாயத்தில் தாமரை பூத்தது என்று சொல்வது போலாகும்.

இது ஒரு புறமிருக்க, கடவுளைப் பற்றிச் சமய ஆசாரியர்கள் கூறுவதை எடுத்துக் கொள்வோம், **சங்கராச்சாரியார்** ''அத்வைதி''; **இராமானுஜாச்சாரியார்** ''விசிஷ்டாத்வைதி''; ''**மாத்துவாசார்ரியாரோ**'' ''துவைதி''; ''அத்வைத'' தத்துவம் எல்லா உபநிஷத்துகளிலும் வலியுறுத்தப்படுகிறது. உதாரணமாக, **சாந்தோக்கிய உபநிஷதத்தில்** பிரமம் எது, அது எப்படி உள்ளது, அதன் இலக்கணம் என்ன என்ற விஷயங்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

சாந்தோக்கிய உபநிஷதம் கூறுவதாவது ''ஆன்மாவும், ஆகாசமும் பிரமத்தின் சின்னம். ஆரம்பத்தில் பிரபஞ்சம், ''சத்''தாக, ஈடு இணையற்றதாக இருந்தது. சிலர் இது ''அசத்''தாக இருந்தது என்றும் கூறுகிறார்கள்.''

சங்கரார்ச்சாரியார் ''சத்'' என்பதற்கு விளக்கம் கூறுகிறார்;-

''சத்'' என்றால் அப்பழுக்கற்றது; மிக மிக சூட்சுமமானது; இலக்கணங் கூற முடியாதது; எங்கும் வியாபித்துள்ளது; மாசற்றது; அது அப்பழுக்கற்ற பிரிக்க முடியாத புலன் உணர்வேயாகும்.''

''இதுதான் பிரமம்''.

பிரமம் நினைத்தார்: ''நான் பலக வேண்டும். நான் வளர வேண்டும்''.

உடனே, அக்னி, நெருப்பு உண்டாயிற்று.

அக்னி நினைத்தது: ''நான் பலக வேண்டும்: நான் வளர வேண்டும்.''

உடனே நீர் ஏற்பட்டது. நீர் நினைத்தது: நான் பலக வேண்டும். நான் வளர வேண்டும்.

உடனே உணவு (பூமி) ஏற்பட்டது. இவ்வாறு பல வடிவங்களும், பல பெயர்களும் தொடர்ந்து ஏற்பட்டன.

''ஆகவே, 'சொல்' பிரமமாகும்''.

''புலன் உணர்வு பிரமமாகும்''.

''ஆராய்ச்சி அல்லது சிந்தனை பிரமமாகும்''.

''தியானம் பிரமமாகும்''.

''உணர்தல் பிரமமாகும்''.

''பலம் அல்லது உறுதி பிரமமாகும்.''

''உணவு பிரமமாகும்''

''நீர் பிரமமாகும்''.

''நெருப்பு பிரமமாகும்''.

''வானம் பிரமமாகும்''.

''நினைவாற்றல் பிரமமாகும்''.

''ஆர்வ நம்பிக்கை பிரமமாகும்''.

இவ்வாறு கூறுவதோடு, மேலும் பிரமம் (கடவுள்) என்றால்

> ''கழிவு நீக்காததும், நுட்பமானதும், இறப்பதும், இறவாமலிருப்பதும், எல்லைக்கடங்கியதும், எல்லையற்றதும், குறிப்பிடத்தக்கதும், குறிப்பிட இயலாததும்''.

என்று உபநிஷதங்கள் கூறுகின்றன;

மயக்கந்தரத்தக்க இக்கூற்றுக்கள் அனைத்தையும் அலசிப் பார்த்தால் கடவுள் என்பது கற்பனையே தவிர வேறு ஒன்று மில்லை என்பது தெளிவு.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் இவை யாவையும் உணர்ந்து, இதற்காக விடாது, ஓய்வு ஒழிவின்றி, பட்டி தொட்டிகளிலெல்லாம் ஆண்டாண்டாக ஓடோடிப் பிரசாரம் செய்து வந்ததைக்கண்டு அவர்பால் எனக்கு நீண்ட நெடுங்காலமாகப் பற்றுதலும் அன்பும் வளர்ந்து வந்துள்ளன,

நம்நாட்டில் பகுத்தறிவுப் பிரசாரமும், நாத்திகப் பிரசாரமும் மிக மிகக்குறைவு, அல்லது இல்லை என்றே கூற வேண்டும்.

1961-ம் ஆண்டுக் கணக்குப்படி நம்நாட்டின் ஜனத் தொகை 43 கோடியே 84 லட்சமாகும். இதில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 33 கோடியே 31 லட்சமாகும். அதாவது, முக்கால்வாசிக்குமேல் தற்குறிகள். இப் பாமரமக்கள் கடவுள் நம்பிக்கை, மூடப்பழக்க வழக்கங்கள், அர்த்தமற்ற சடங்கு சம்பிரதாயங்கள் முதலியவற்றிற்கு இரையாகி யுள்ளனர். ஜாதிக் கொடுமைகள் அத்தனையும் தாங்கிக் கொண்டு, எல்லாம் ஈசன் செயல் என்று நம்பி வருகிறார்கள்.

ஆனால் இவர்களிடம் மதிப்பிட முடியாத செல்வம் ஒன்றுண்டு. அதுதான் செவிச்செல்வமாகும். திருவள்ளுவர் கூறுவதாவது,

''செல்வத்துள் செல்வஞ்செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

இச்செல்வத்தை மட்டுமே நம்பிவரும் மக்களுக்கு, தமிழக மக்களுக்கு அறிவை வாரி வழங்கி அவர்களைச் சிந்திக்கச் செய்த ஆசான் பெரியார் ஈ. வெ. ரா. அவர் களின் திருப்பெயர் தமிழகத்தில் என்றென்றைக்கும் இறவாப் புகழுடன் வாழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

என்னுரையை முடிக்குமுன் இநநூலைப் பெரியார் ஈ. வெ. ரா. வின் வலது கரமாக இருந்து அவருக்குத் துணைபுரிந்த என் அன்பிற்குரிய ஆசான், அறிஞர், காலம் சென்ற, தோழர் மா. சிங்காரவேலு அவர்களுக்கு அர்ப்பணம் செய்துள்ள காரணத்தை விளக்குவதும் என் கடமை.

அவ்வாறு விளக்க வேண்டுமாயின் யான் யார் என்பதனைச் சுருக்கமாகச் சொன்னால் அது இந்நூலைப் படிப்பவர்களுக்குத் துணையாக இருக்கும் என்று எண்ணி என் கதையை இங்குக் கூறுகிறேன்.

இதற்கு என்னை மன்னிக்கவும்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் ஆவியூர் என்ற ஊரிலிருந்து சென்னை சென்று படித்து முடித்துவிட்டு, அன்றைய நிஜாமின் ஹைதராபாத்திற்குச் சென்றான் ஒருவன். அவன் மனைவியின் பெயர் **தங்கம்மா**. இவர்கள் தான் முதன் முதலாக அன்று வெகு தூரமுள்ள நாடு என்று கருதப்பட்டிருந்த நிஜாமின் ஹைதாரபாத்திற்குச் சென்றவர்கள். அதற்குப் பிறகுதான் தமிழகத்திலிருந்து ஒருவர்பின் ஒருவராகச் சிலர் சென்று அங்கு வேலைதேடிக் கொண்டனர். அவர்கள் ''தென் இந்தியர் அசோசியேஷன்'' என்று ஒரு மன்றத்தைத் தொடங்கினர். இதற்கு, முதன் முதல் அங்குச் சென்றவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் பெயர் **சீனிவாச அய்யங்கார்**.

சீனிவாச அய்யங்காருக்கும், அவர் மனைவி தங்கம்மாவுக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தன. முதல் குழந்தை, **இராஜம்மாள்** என்ற பெண்; அடுத்தது, **ராமு** என்று அழைக்கப்படும், **ராமசாமி**; மூன்றாவது, **துரை** என்று என்று அழைக்கப்பட்ட **துரைசாமி**; நான்காவது, **பங்கஜம்** என்று அழைக்கப்பட்ட பெண்; ஐந்தாவது **பாச்சா** என்று அழைக்கப்படும் **பார்த்தசாரதி**; ஆறாவது, **கிட்டா** என்று அழைக்கப்படும் **கிருஷ்ணன்**; ஏழாவது, **ரங்கா** என்று அழைக்கப்பட்ட **ரங்கநாதன்**. ரங்கா 9 மாத குழந்தையாகவும், கிட்டா மூன்று வயது குழந்தையாகவும் இருக்கும்

போது அவர்கள் தாயார் தங்கம்மா காலமானுர். தங்கம்மா வின் அக்காவாகிய பொன்னம்மா என்பர் இக் குழந்தை களைத் தன் குழந்தைகள் போலவே அன்புடன் வளர்த்து வரலானுர். பொன்னம்மாவுக்கு ஒரே ஒரு மகன்—குப்புசாமி குழந்தைகள் ஐந்து வயது ஆக, பள்ளியில் சேர்க்கப்பட் டனர். பள்ளியில் சேர்ந்தபோது கிட்டாவின் பெயர், கிருஷ்ணமாச்சாரி என்றும் ரங்காவின் பெயர் ரங்காச்சாரி என்றும் கொடுக்கப்பட்டன.

ரங்கா பட்டம் பெற்றபின் பம்பாய் மாநகரம் சென்ருன். கிட்டா பட்டம் பெற்றபின் ஹைதராபாத்தில் பாதிரிகள் நடத்தி வந்த ஒரு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தேவை என்று கேட்டு அங்கு வேலை தேடிச் சென்ருன். வேலைக்காகச் சென்ற முதல்நாள், அந்தப் பள்ளியின் தலைவரான பாதிரி கேட்டார்:-

''உன் பெயர் என்ன?''

''என் பெயர் ஏ. எஸ். கிருஷ்ணமாச்சாரி

''கிருஷ்ணமாச்சாரியா? இங்கு ஏற்கெனவே ஒரு கிருஷ்ணமாச்சாரி இருக்கிருர். ஆகவே உன்னை அய்யங்கார் என்று அழைப்பேன். உனக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா?'' என்ருர்.

''எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை,'. என்ருன் அச் சிறுவன்.

''அதுதான் சரி!'' என்ருர் பாதிரி. அன்று முதல் ஏ. எஸ். கிருஷ்ணமாசாரி ஏ எஸ். கே. அய்யங்கார் என்று அழைக்கப்பட்டான். மாணவர்களாக இருந்த காலத்தி லேயே ரங்காவும், கிட்டாவும் அரசியலில் மெத்த ஆர்வம் காட்டி வந்தனர்.

1935-31 காங்கிரஸ் விடுதலை இயக்கத்தில் பம்பாய் மாநகரில் ''வார்டு கவுன்ஸில்'',கள் அமைக்கப்பட்டு அவற்றின் உறுப்பினர் பெயர்கள் வெளிவந்தவுடன்

*

பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டு அவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ரங்கா என்ற **ஏ. எஸ். ரங்காசாரி** (பிறகு **ஏ. எஸ். ஆர். சாரி** என்று புகழ்பெற்ற கம்யூனிஸ்டு வழக்கறிஞர்)யும் ஒருவர். நாசிக் சிறைக்குக் கவி **ஹிரீந்திரநாத் சட்டோபாத்தியா**வுடன் அனுப்பப்பட்டார்.

ஏ. எஸ். கே. அய்யங்கார் ஒரு சில மாதங்கள் மட்டுமே விஞ்ஞான ஆசிரியர் வேலை பார்த்து, பிறகு அதை விட்டு, சென்னைக்கு 1934-இல் சென்று அன்று சட்டவிரோதமாயிருந்த இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். இந்த ஐந்து சகோதரர்களில் இராமசாமிக்கு அவர் தாயார் இருக்கும் சமயத்திலேயே, திருமணமாகிவிட்டது. அவர் நீங்கலாக மற்றவர் சாதியை விட்டுத் திருமணம் செய்து கொண்டனர். துரைசாமி முதலியார் ஜாதியைச் சேர்ந்த அம்மையார் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். அவருக்குப் பிறகு **பார்த்தசாரதி** ஓர் ''ஆங்லோ இந்திய'' மாதை (கிருஸ்தவ மதத்தைச் சார்ந்த வரை)த் திருமணம் செய்து கொண்டார். **ஏ. எஸ். ஆர். சாரி** பம்பாய் மாநகர காங்கிரஸ், தேசிய முஸ்லிம் பிரமுகர் **ஜனுப்சையத்** என்பவரின் மூத்த மகளாகிய **தில்ஷாத் சையத்**'' என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

ஏ. எஸ். கே. அய்யங்கார் திருமணமே செய்துகொள்ளவில்லை. காரணம் கேட்டபோது அவர் கூறினர்:

''நான் 25 வயதிலேயே முதன் முறையாகச் சிறை சென்றேன். வெளிவந்ததும் கட்சிவேலை. உடனடியாக மீண்டும் சிறைவாழ்க்கை. கட்சி வாழ்க்கையும், சிறை வாழ்க்கையும் மாறிமாறி வந்தன. நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் இதே நிலைதான். மொத்தம் $15\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு மேல் சிறைவாழ்க்கை. இந்நிலையில் திருமணம் பற்றிய நினைவே என் எண்ணத்தில் எழவில்லை. அது மட்டுமல்லாமல், ஒரு குடும்பஸ்தன் குடும்பத்துக்காகச் செலவிடும் தன் சக்தியை ஆக்கவேலைகளுக்குப் பயன் படுத்தி

ஞல் (Sublimate) அவை நல்ல முறையில் நடைபெறும் என்ற நம்பிக்கை கொண்டவன்''

தமிழகம் வந்த பிறகு அய்யங்கார் என்று ஒரு சாதிப் பெயர் இருப்பது சரி அல்ல என்ற முடிவிற்கு வந்தார். அவர் விட்டாலும், கட்சித் தோழர்கள் உட்பட பலர் அதைவிடவில்லை. ஆகவே, வியப்படைந்து.

"Fort St. George Gazette
No : 23 Dated Wednesday
Joue 11-1969 (Jyaishtazi-1891)
Part III-Notificatlons of interest
To the Public"
Page 692-7 th line :
"I, A. S. K. Iyengar Shall
Hence Forth BE Known
AS "A. S. K." — A. S. K. Iyengar.',

என்று தமிழக அரசு கெஜெட்டில் வெளியிட்டார்.

ஏ.எஸ்.கே. யும், அவர் சகோதரர் ஏ. எஸ். ஆர். அவர்களும் மாட்டுக்கறி ''(Beef), ''பன்றிக்கறி (Pork) உட்பட எல்லா உணவு வகைகளையும் உண்பவர்கள். மேலும் அவர்கள் குடும்பத்தினர் ஆணும் பெண்ணும் பெருவாரியாக கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் நாத்திகர்கள் மட்டுமல்ல, நடைமுறையில் வருணஸ்ரம ''தர்மத்தை''யே வெறுத்துப் பகுத்தறிவுக்கு முக்கிய இடத்தைக் கொடுத்து வாழ்பவர்கள்.

ஆகவே, ஏ. எஸ். கே. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை முதல் முதல் 1937-ல் சந்தித்ததுமே, ஒருவரை ஒருவர் நேசிக்கத் தொடங்கினர் என்றால் ஆச்சரியமில்லை.

பிறகு பன்முறை பெரியார் அவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளேன். **அவரை நன்கு புரிந்து கொண்டவர்களில் நானும் ஒருவன் என்று கருதுகிறேன்.** இக் கருத்து இந்நூலை இயற்ற ஊக்கம் தந்தது.

நிற்க. மாணவனாக இருந்த காலத்திலேயே **மீரத் கம்யூனிஸ்டு சதி வழக்கைப்** பற்றிய செய்திகளைத் தினசரி

பத்திரிகைகளில் படித்து, கம்யூனிஸ்டு தலைவர்கள் எவ்வாறு அச்சமின்றிப் பிரிடிஷ் ஆட்சியைப் புரட்சியின் மூலம் ஒழிப்பதற்காகவும், சோஷலிஸ்டு சமுதாயத்தை ஏற்படுத்துவதற்காகவும் பாடுபட்டு வந்தனர் என்று அறிந்தேன். இது எனக்குத் தூண்டுதலாக இருந்ததால் பள்ளிப் பருவத்திலேயே மார்க்ஸ் எழுதிய பல நூல்களை ஆர்வமுடன் படித்தேன். சென்னை 1934 இறுதியில் என்னை அழைத்தது. வந்த சில நாட்களிலேயே 1935-இல் தோழர் **மா. சிங்காரவேலு** அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. முதல் சந்திப்பிலேயே எனக்கு மட்டிலா மகிழ்ச்சி உண்டாயிற்று. அவரது பெரும் புகழைக் காதால் கேட்டிருந்தேனே ஒழிய அவரை நேரில் கண்டதில்லை. ஹைதராபாத்தில் இருந்தவரை புரட்சியின் ஆசான் ஆன அவரைக் காண வேண்டும் என்றிருந்தேன். சென்னை வருகையால் அச்சிந்தனையாளனை, புரட்சியாளனை நேரில் காணும் பேறு கிட்டியது,

தோழர் எஸ். வி. காட்டே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதல் பொதுச் செயலாளர். அவர் 1937-அல் சென்னை வந்து, தொழிற்சங்க இயக்கத்திற்கும், கம்யூனிஸ்டு கட்சிக்கும் வழிகாட்டத் தொடங்கினர்.

தோழர் காட்டே சென்னை வந்தபிறகு தோழர் மா. சிங்காரவேலு அவர்கள் தினசரி மாலை எங்களை 2/65 பிராட்வே அலுவலகத்தில் (அன்று நாங்கள் தங்கி இருந்ததும், சாப்பாடு ஓட்டலிருந்து கொண்டுவந்து சாப்பிடும் இடமும் அதுவே) கண்டு உரையாடி அறிவுரை வழங்கிச் செல்வது வ்ழக்கம். என்மீது அவருக்குத் தனி அன்பு. ஒரு நாள் சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சில அச்சுத் தொழிலாளிகளுடன் (அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தேன்) சென்றேன். தோழர் மா. சிங்காரவேலு அவர்கள் வழக்கறிஞர் உடையோடு குறுக்கிட்டார். அவரை அணுகி ''வணக்கம்!'' என்றேன். உடனே என்னைக் கட்டி அணைத்து, வலது கன்னத்தைக் கடித்துவிட்டு, ''இங்கு

எதற்கடா வந்தாய்?'' என்று வினவினார். எனக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சம் அல்ல. நோய் ஒரு புறம், அச்சுத் தொழிலாளர்களுக்குத் தலைவனான என்னைத் தொழிலாளர் முன்னிலையில் அவமானப்படுத்தினரே என்ற எண்ணம் ஒரு புறம்.

அன்று மாலை தோழர் **காட்டே**விடம் புகார் செய்தேன். அவர் சொன்னார்;

> ''நீ இவ்வளவு சிறு வயதிலேயே உனக்குக் கட்சிமேல் உள்ள பிடிப்பையும், உணர்வையும் கண்டு **சிங்காரவேலுக்கு உ**ன்மேல் தனி அன்பு''

என்றார்.

இந்நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடுவது தமிழக கம்யூனிஸ்டுகளில், ஏன் இந்திய கம்யூனிஸ்டு தலைவர்களில் என் இதயம் கவர்ந்த நல்லவர்களில் ஒருவரும், தலைசிறந்த வருமான தோழர் **மா. சிங்காரவேலர்** என்பால் கொண்ட அன்பை வலியுறுத்தவே. அவர் அன்புக்கு நான் எதைச் செய்தாலும் ஈடாகாது. என்றாலும், இச் சிறுநூல் அம் மாபெரும் சிந்தனையாளனுக்கு ஒரு சிறு காணிக்கையாக இருக்கவேண்டும் என்று அர்ப்பணிக்கின்றேன்.

தோழர் **மா. சிங்காரவேலர்** அவர்களின் பெயர் நெடுங் காலமாகப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பெயருடன் பொருத்தமாகவே இணைக்கப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் மூடப்பழக்க வழக்கங்கள், கடவுள் நம்பிக்கை, ஜாதிக் கொடுமைகள், இவை அனைத்தையும், இவ்விரு மேதைகளும் ஒன்றாக நின்று எதிர்த்தவர்கள். தோழர் **மா. சிங்காரவேலர்** அவர்கள் 1946 பிப்ரவரி 11-ம் நாள் மறைந்தார். அவர் இறுதி யாத்திரையில் செந்தொண்டர்களுடன் நானும் **கே. முருகேசனும்** கலந்து கொண்டு எங்கள் அஞ்சலியைச் செலுத்தினோம். அதேபோல், பெரியார் அவர்களின் இறுதியாத்திரையில் நானும், செந்தொண்டர்களின் அணி வகுப்பும் கலந்து கொண்டு எங்கள் வணக்கத்தைச்

செலுத்தினோம். இந்த நூலை இவ்விரு மேதைகளுக்கும் யான் செலுத்தும் மிகச் சிறு காணிக்கையாகக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நூல் வெளிவரப் பல்லாற்றானும் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துதவிய **திரு. ஆர். பார்த்தசாரதி** அவர்களுக்கும், **திரு. பி. ஈ. பாலகிருஷ்ணன்** அவர்களுக்கும் **திரு. த. கோவேந்தன்** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

பகத் ஹவுஸ்
31-3-1974

ஏ. எஸ். கே.

பதிப்புரை

நாடு நன்கறிந்த தொழிற்சங்கத் தலைவர்களில் ஏ. எஸ். கே. ஒருவர்.

தமிழகப் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் சிறந்தவர். தொழிற்சங்க இயக்கத்துக்கும் பொதுவுடைமை இயக்கத்துக்கும் பல இளைஞர்களை ஈர்த்து அவர்கள் அவ்வியக்கங்களில் ஈடுபாடு கொள்ளச் செய்த பெருமை அவரைச் சாரும்.

ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்றவர்; ஆங்கிலக் கவிஞரும் கூட.

தாய் மொழியான தமிழில் ஈடுபாடும் ஆர்வமும் உடையவர். திருக்குறளில் ஆழ்ந்த பயிற்சி உண்டு.

அரசியலிலும் தொழிற்சங்க இயக்கத்திலும் நாற்பதாண்டுக் காலமாகத் தாம் பெற்ற அனுபவத்தைக் கடந்த சில ஆண்டுகளாக நூல்களாக ஆங்கிலத்திலும் தமிழிலும் வடித்துத் தந்து வருகின்றார்.

''கம்யூனிஸம் என்றால் என்ன?'' ''கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படை'', ''கடவுள் கற்பனையே - புரட்சிகர மனித வரலாறு'' என்னும் தத்துவ நூல்களும் பாமரரும் விரும்பும் வண்ணம் எளிய நடையில் ''தொழிற்சங்கம்'' என்ற நூலும் தரத்தப்பட்ட

மக்கள் துன்ப துயரங்களைத் தெள்ளிதின் எடுத்துக் காட்டும் ''தங்கம்மா'' என்ற புதினமும் இவர் எழுதிய சிறந்த தமிழ் நூல்கள்.

ஏ.எஸ்.கே. எழுதிய ''பகுத்தறிவின் சிகரம் பெரியார்ஈ. வெ.ரா.'' என்ற நூலைப் பெருமிதத்துடன் வெளியிடுகின்றோம்.

முதல் பாகத்தில் பெரியார் அவர்களின் பெருந் தொண்டில் ஒரு கூறு மட்டுமே சொல்லப்படுகின்றது. பெரியாரின் எல்லாப் பணிகளையும் ஒரு சிறு நூலில் எழுதி முடிப்பது என்பது ஏ.எஸ்.கே. அவர்கள் இந் நூலில் கூறியுள்ளதுபோல அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்துவது போன்றது.

இரண்டாம் பாகத்தில் இந்திய தத்துவங்களில் எவ்வாறு நாத்திகக் கருத்துகள் மேலோங்கி நின்று வந்துள்ளன, இத்தத்துவங்களின் மரபுகளை எவ்வாறு பெரியார் அவர்கள் வளர்த்து வளப்படுத்தி வந்துள்ளார், எதிர்கால இந்தியாவுக்கு பொதுவுடைமை இயக்கத்துக்கு அவர் ஆற்றிய பணி எவ்வாறு துணை செய்யும், என்பவற்றை எடுத்துச் சொல்லியுள்ளார்.

தோழர். டாங்கே இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளில் முதல்வர். அவர் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், அரசியல், தொழிற் சங்கத் தலைவர்.

ஒரு சிலர் அவர்பால் அழுக்காறு கொண்டு பல முனைகளிலிருந்தும் அவரைத் தூற்ற - தாக்க முயல் வதற்கு இச்சிறப்புக்களே காரணம்.

பெருந்தகைப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களிடமும் தோழர். டாங்கே அவர்களிடமும் பெரு மதிப்பு உள்ளவர் ஏ.எஸ்.கே.

ஆகவே, இந்நூலில் இப்பெரியார் இருவரின் கருத்துக்களும் எவ்வாறு ஒன்றுக்கொன்று துணை செய்கின்றன என்பதனைத் தெளிவாக வரைந்துள்ளார்.

ஏ.எஸ்.கே. அவர்களின் மார்க்ஸிஸ புலமை ஆங்காங்கே ஒளி விடுகின்றது.

பெரியார் ஈ.வெ.ரா. பெருங்கடல். அவர் தம் தொண்டு, அதனால் உண்டான பலன் இவை முழுதும் ஆராயப்படுதல் வேண்டும். இப்பணிக்காக ஆர்வலர் சிந்தனையைத் தூண்டும் ஆரம்ப நூல் இது.

இந்நூலில் பெரும் அச்சுப் பிழைகள் நேர்ந்துள்ளன. குறிப்பாக ஈ. வெ. ரா. ஈ. வே. ரா. என்று அச்சாகியுள்ளது. பிழைகளின்றி நூல் இலங்க வேண்டும் என்று பலவாறு முயன்றும், இயலவில்லை. பிழை திருத்தப் பட்டியல் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அதன் துணையோடு பிழைகளைத் திருத்திய பிறகு நூலைப் படிக்கவும். வரும் பதிப்புகளில் இப்பிழைகளை நீக்க ஆவன செய்யப்படும். பிழைகளுக்கு மன்னிக்க.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை அச்சிட்டுத் தந்த நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ் நிறுவனத்தார்க்கு, பணியாளர்களுக்கு, குறிப்பாகத் திரு. J. M. கலியாணம் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி. வணக்கம்.

சென்னை-1
31-5-1974

பகத் ஹவுஸ் பப்ளிகேஷன்ஸ்

பொருளடக்கம்

நூல்

முதல் பாகம்—வாழ்வும் வழியும்

இரண்டாம் பாகம்
இந்திய தத்துவத்தில் நாத்திகமரபு

பிழைதிருத்தப் பட்டியல்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	21	மது. மரங்களை	மது மரங்களை
7	2	பங்கெடுத்து, சிறை	பங்கெடுத்துச் சிறை
	11	வாலிபர்கள்	வாலிபர்கள்
	17	முறையை,	முறையைப்
	26	பரிசாக, தண்டனை	பரிசாகத் தண்டனை
8	12	ஏற்பட எற்பட	ஏற்பட ஏற்பட
	18	வழக்கு போடப் பட்டது	வழக்குப் போடப் பட்டது
	91	கம்யூனிஸ்டு தலைவர்களை	கம்யூனிஸ்டுத் தலைவர் களை
9	21	வழக்கு தொடங்கிற்று	வழக்குத் தொடங் கிற்று
	3	பூதகேஸ்வரதத்'	பூதகேஸ்வரதத்
	17	வலதுகரமாக	வலதுகரமாக,
13	13	எழுதியதனல் ஈ. வே. ரா. சிறை	எழுதியதனல் சிறை
14	9	குடியரசு கலம்பகம்	குடியரசுக் கலம்பகம்
	11	குடியரசு பதிப்பகம்	குடியரசுப் பதிப்பகம்
15	3	தயாரித்தார்	தயாரித்தனர்
	3—6	சுயமரியாதை இயக்கம் பயன்தர ஈரோடு திட் டத்தை ஈவேராவுடன் சேர்ந்து வேலை செய்	இதுவே புகழ்பெற்ற ஈரோட்டுத் திட்டம். இதனைப் பெரியார் ஈ. வெ. ரா. காங்கிரஸ் நீதிக் கட்சிகளுக்கு

		வதாக இத் திட்டத்ஹைதக் காங்கிரஸ் நீதிக் கட்சிகளுக்கு அனுப்பி ஹைவத்தார். இதன் விளைவே ஈரோட்டுத் திட்டம்.	அனுப்பி வைத்தார்:
	8	காந்தி இத் திட்டத்தை ஏற்க	காந்தி ஏற்க
	17	காலமாக பாமர மக்களிடையே	காலமாகப் பாமர மக்களிடையே
	21	பற்றிபும்	பற்றியும்
17	22	எதையுப்	எதையும்
		இன் நிலையை	இந் நிலையை
23	12	அதற்காகக்	அதற்காக
	15	மாசிலான்	மாசிலன்
24	4	எவ்விதச் சந்தேகமும்	எவ்வித சந்தேகமும்
	13	நடந்தப் பெறும்	நடத்தப் பெறும்
27	30	கே. முருகேசன்	(நீக்குக)
28	8	சி. ராஜகோபாலாச் சாரியார்	பி. ராஜகோபாலச் சாரியார்.
31	1	இரண்டாவதாகப்	இரண்டாவதாக,
33	21	தொட்கிஙனன்	தொடங்கினன்
	24	பொது உடமை	பொது உடைமை.
34	19,	பிரம்மம்	பிரமம்
	21,	,,	,,
	23-	,,	,,
35	4	,,	,,
	5	என்றும். கற்பனை	என்றும் கற்பனை
36	15	மனைவியயர்களுமம	மனைவியர்களும்
	16	பிளளையார்	பிள்ளையார்
37	24	என்னும	என்னும்
49	17	9. பெரியாரும் நாத்தி கமும்	10. பெரியாரும்நாத்திகமும்.
52	20	இராது	இரா

62	22	சூத்திரகாரரான	சூத்திரக்காரரான
64	9	அவர் அவர்கள்	அவரவர்கள்
	26	தைத்தரியும்	கைத்தறியும்
65	8	1500ல்	1500இல்
66	7	18	13
	8	6ம் நூற்றுண்டு	6ஆம் நூற்றுண்டு
	15	பிரம்மம்	பிரமம்
69	3	பிரம்ம சூத்திரம்	பிரமசூத்திரம்
	5	பிரம்மம்	பிரமம்
7,8,10		பிரம்மசூத்திர	பிரமசூத்திர
73	17	யாகங்க செய்வது	யாகங்களைச் செய்வது
74	10	ஏற்படும	ஏற்படும்
	12	ஏதே	ஏதோ
	24	என்பதற்கு	என்பதற்கு
79	12	பறறி	பற்றி
80	13	பெரியப் பிரச்னை	பெரிய பிரச்னை
	17	படித்தான்	படிதான்
81	14	இயற்றி	இயற்றிய
82	6	காரணம்	காரணம்,
85	16	இருக்கும்படிச்	இருக்கும்படி
100	14	உணர்ந்தன்	உணர்ந்தபின்
104	20	பிரம்மம்	பிரமம்
109	16	,,	,,
111	9	அவைக்கு	அவற்றுக்கு
113	18	பிரமம	பிரமம்

நூலில் ஈ. வே. ரா எனவரும் இடங்களில் ஈ. வெ. ரா. என்று படிக்க.

ஏ. எஸ். கே. எழுதிய நூல்கள்

கம்யூனிசம் என்றால் என்ன?

கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படை

கடவுள் கற்பனையே

தங்கம்மா—ஒரு நாவல்

தொழிற் சங்கம்

உலக கம்யூனிஸ்டு இயக்க வரலாறு

The Great Revolution & Other Poems

In the Land of Dimitrov

A Study in the Co-operative Movement in India.

Israel-A Poem.

Me Lud !-A Poem.

முதல் பாகம்

வாழ்வும் வழியும்

[வாழ்வாங்கு வாழ்ந்த வெண்தாடி வேந்தர்]

1. தொடக்க உரை

தமிழ் நாட்டின் அரசியல் உலகில் சென்ற 70 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் கவனத்தைப் பல்வேறு முறைகளில் ஈர்த்து வந்துள்ள பெருமை பெற்றவர் **பெரியார் ஈ. வே. ரா.** இந்த 70 ஆண்டுகளில் அவரைத் தூற்றியவர் பலர்; கண்டு அஞ்சியவர் பலர்; போற்றிப் புகழ்ந்து, பின்பற்றி நன்மை அடைந்தவர் பல்லாயிரக் கணக்கான பாமர மக்கள்.

சிறந்த தேசபக்தர், சமுதாயக் கொடுமைகளை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடிய அறப்போர் வீரர். மூட நம்பிக்கை, கடவுள் வழிபாடு, சமய சாத்திரங்களுக்கு அடிமை, ஜாதிப்பற்று, மதப்பற்று இவை அனைத்தும் மக்களை மாக்களாக்கி வைத்திருப்பதைக் கண்டுணர்ந்த ஈ வே. ரா. தம் இளமைப் பருவத்திலேயே இவற்றைக் கடுமையாக எதிர்த்துப் போர் தொடுத்தார். அவர் வைதிகத்தின் பெரிய வைரி. வேதங்களும், வேதியர்களும் ஓதி வந்த மடைமையைப் போக்கித் தமிழனுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டி, அறிவையும் ஆற்றலையும் அள்ளி அள்ளித் தந்தவர் பெரியார் ஈ. வே. ரா.

தொல்லைகளைத் தொலைத்து, அடிமைத் தனத்தை அறவே ஒழித்து புதியதொரு சமுதாயத்தைச் சமைத்து ஆட்சியில் அமர்ந்த ரஷ்யத் தொழிலாளி வர்க்கத்தைப்

போற்றிப் புகழ்ந்தவர் பெரியார் ஈ. வே. ரா. 1932ஆம் ஆண்டில் சோவியத் நாடு சென்று அந் நாட்டின் சாதனை களைக் கண்டு வந்து தமிழக மக்களுக்குச் சோவியத் கம்யூ னிசத்தின் சிறப்பை எடுத்துரைத்தவர் பெரியார் ஈ. வே. ரா. பொருள்முதல் வாதந்தான் உண்மையை உள்ளவாறே எடுத்துக் கூறுகிறது என்பதை நன்கு உணர்ந்து மக்களின் மூட நம்பிக்கைகளைக் கண்டு ஆத்திரமடைந்தார்; மடமை யைப் போக்க, எளிதில் மக்களைப் புரிய வைக்கப் பிள்ளையார் பொம்மையை உடைத்தார். இதைக் கண்டு பலர் கோபா வேசம் கொண்டனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதும், பொய், புனைசுருட்டு, ஏமாற்று, லஞ்சம், ஊழல், குடிகெடுப்பது இவை அனைத்தையும் உரிய பண்புகளாகக் கொண்ட ஆஸ்திகர்கள் தங்கள் இழி செயல்களை மறைக் கவே கடவுள் வழிபாட்டையும், சமய நம்பிக்கையையும் போர்வையாகக் கொண்டுள்ளனர் என்பதை ஈ. வே. ரா. அம்பலப்படுத்தினார்.

ஈ. வே. ராவின் வாழ்க்கை வரலாறு ஓர் அழகிய வானவில்; அது பிரமாண்டமானது; தமிழக வானத் தின் இரு கோடிகளையும் எட்டிப் பிடித்து இணைப்பது. பல வண்ணங்கள் அழகு ஊட்ட அனைவர் உள்ளத்தை யும் கவர்வது.

2. வாழ்க்கை வரலாறு.

பெரியார் ஈ. வே. ராவைப் பற்றியும், அவர் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் பலர் நல்ல புத்தகங்கள் எழுதி யுள்ளனர்.

செப்டம்பர் 17, 1879இல் ஈரோட்டில் வேங்கடப்ப நாய்க்கருக்கும் சின்னத் தாய் அம்மையாருக்கும் பிறந்த

குழந்தைக்கு இடப்பட்ட பெயர் ராமன். குழந்தை ராமன் செல்லப் பிள்ளையாக நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது என்ருலும் பெற்ருேர் அக்காலத் திலே வறிய நிலையில் இருந்ததனுல் குழந்தைப் பருவத்தில் துன்ப நிலையைக் கடக்க வேண்டி இருந்தது. இத்துன்பத்தின் சாயல், இயல்பாகவே, இக் குழந்தை வளர்ந்த பிறகும் தீயினுற் சுட்ட வடுப்போல் இருந்ததைக் காணலாம்.

குழந்தை ராமன் 6 ஆவது வயதில் ஒரு திண்ணைப் பள்ளிக்கு அனுப்பப் பட்டான். அக்காலத்தில், 87 ஆண்டுகட்டு முன் எப்படி இந்து சமுதாயம் இருந்தது என்பதை அவர் வாழ்க்கை வரலாறே பளிங்கு போல் எடுத்துக் காட்டுகின்றது. வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் வீட்டில் தண்ணீர் குடிப்பதே பெருந்தவருகக் கருதப் பட்ட காலம் அது.

இளமைப் பருவத்தில்தாம் ஒரு மூர்க்கனுகவும் முரடனுகவும் இருந்ததாகவும், ஆகவே தம் பெற்ருேர் தம் இரு கால்களிலும் விலங்கிட்டுத் தம்மைப் பணிய வைக்க முயன்றதாகவும், ஆனுல் அதே சமயத்தில் விலங்குகளைத் தம் தோள் மீது தூக்கிப் போட்டுக் கொண்டு தெருக்களில் சுற்றித் திரிந்ததாகவும் ஈ. வே. ரா. வே தம் வாழ்க்கைக் குறிப்பில் கூறுகிருர்.

இளமைப் பருவத்திலேயே தொழிலில் ஈடுபடத் தொடங்கினுர். பல சரக்கு வியாபாரத்தில் அவர் ஈடு பட்டார் என்று வரலாற்ருசிரியர்கள் கூறுகிருர்கள். இத் தொழிலில் திறமைசாலி என்ற பெயர் பெற்ருர் என்றும் கூறப்படுகிறது. அவருக்கு 19ஆம் வயதிலேயே திருமணம் நடை பெற்றது; அவர் வாழ்க்கைத் துணைவியார் நாகம்மையார் இல்லற வாழ்க்கையில் மட்டு

மன்றி ஈ.வெ. ராவின் பொது வாழ்விலும் துணைவியாக இலங்கினர். 1933இல் நாகம்மையார் மறைந்தார். சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு மணியம்மையாரை மணம் செய்து கொண்டார். இது பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயலாகவும் பெரிய தவருகவும் கருதப்பட்டதனுல் திரு. சி. என். ஏ வும் மற்றும் சிலரும் தி. க. விலிருந்து பிரிந்து தி. மு. க. வை நிறுவினர்.

பிரிட்டிஷ் தத்துவஞானி பெர்ட்ரண்டு ரசல் தம் 80ஆவது வயதில் நான்காவது முறையாகப் பதினெட்டே வயதான தன் செயலாளரைத் திருமணம் செய்துக்கொண்டதை உலகில் யாருமே தவறு என்று கூறவில்லே. அவரை யாரும் பகிஷ்கரித்தும் கிடையாது.

ஏதோ காலச் சூழ்நிலேதான் திரு. சி. என். ஏ வும் பிறரும் பெரியார்-மணியம்மை திருமணத்தைத் தவறு என்று கருதியது எனலாம்.

பெரியார் 1919இல் காங்கிரசில் சேர்ந்து, 1920இல் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். தாம் கதர் உடுத்தியதுமல்லாமல் தம் குடும்பத்தார் அனேவருமே கதர் உடுத்தும்படிச் செய்தார்.

நல்ல வருமானமுள்ள வாணிபத்தை விட்டதுமன்றி, மது. மரங்களே வெட்ட வேண்டும் என்று மகாத்மா காந்தி கொடுத்த கோஷத்திற்கிணங்கத் தம் தோட்டத்திலிருந்த தென்னே மரங்கள் எல்லாவற்றையும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் வெட்டி எறிந்தார். கள்ளுக் கடை மறியலில் தம் குடும்பத்தோடு ஈடுபட்டார். 1921ஆம் ஆண்டிலும், 1922ஆம் ஆண்டிலும் சிறைசென்ருர்.

மகாத்மா காந்தி ஈ. வே. ராவையும், அவர் குடும்பத்தையும் போற்றிப் புகழ்ந்த காலம் அது. வைக்கம் சத்தியா

கிரகம் தீண்டாமையை ஒழிக்க நடைபெற்ற போராட்ட மாகும். அதில் பெரியார் பங்கெடுத்து, சிறை சென்றார். இதனால் வைக்கம் வீரர் என்று பெயர் பெற்றார்.

காங்கிரசிலிருந்து வெளியேறி 1925இல், 'குடியரசு' பத்திரிகையைத் தொடங்கினர். சுயமரியாதை இயக்கம் கண்டார். இந்தப் பத்திரிகை அந்தக் காலத்தில் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்தது. ஜாதி ஒழிப்பு, சுய மரியாதை, மூடப்பழக்க வழக்கங்களை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்துவது, இப் பத்திரிகையின் தலையாய கடமை களாக இருந்தன. பெரியாரின் கருத்துகள் எண்ணற்ற வாலிபர்கள் தொழிலாளர்கள் உள்ளங்களைக் கவர்ந்தன.

1928ஆம் ஆண்டில் தென் இந்திய ரயில்வே தொழி லாளர் மாபெரும் பொது வேலை நிறுத்தம் ஒன்று தலைவர்கள் ம. சிங்காரவேலர், டி. கிருஷ்ணசாமிப்பிள்ளை, முகுந்தலால் சர்க்கார் (ஏஐடியுசி பொதுச் செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. பிரிட்டிஷ் ஆட்சியாளர் கோர அடக்கு முறையை, போராடிய தொழிலாளர் மீது கட்டவிழ்த்து ஏவிவிட்டனர். பெரியார் ஈ. வே. ரா. தொழிலாளர் போராட்டத்தை ஆதரிக்க முன் வந்ததற்காக அவரைப் பிரிட்டிஷ் சர்க்கார் கைது செய்து சிறையி லடைத்தது; தலைவர்கள் ம. சிங்காரவேலர், டி. கிருஷ்ண சாமிப்பிள்ளை, முகுந்தலால் சர்க்கார், இரயில்வே தொழிற் சங்க நிர்வாகிகள் அனைவரையும் பிரிட்டிஷ் சர்க்கார் கைது செய்து திருச்சி மத்திய சிறையில் அடைத்து இரயில்வே சதி வழக்கை ஜோடித்து, கொடிய தண்டனையை அளித் தது. இதற்குப் பரிசாக தண்டனை வழங்கிய திருச்சி செஷன்ஸ் ஜட்ஜை பிரிட்டிஷ் சர்க்கார் சென்னை மாகாண உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமித்தது. இந்தப் பின்னணி யில் பெரியார் எழுதினர்:

"எந்த ஒரு காரியத்தையும், மனிதன் அவனுடைய வெகுநாளைய பழக்க வழக்கம் நம்பிக்கை ஆகியவைகளுக்கு

விரோதமாக ஆக்க முயற்சித்தால் அதைப் புரட்சி என்று தான் சொல்லுவார்கள். ஆனால், அதனால் அனுகூலமடைகின்றவர்கள் அதை நன்மையான காரியம் என்று சொல்லிப் புகழவும், அதனால் தீமையடைகின்றவர்கள் அதைக் கெட்ட காரியம் என்று சொல்லி இகழவும், சரியான முறையில் எதிர்க்கச் சக்தி இல்லாதவர்கள் தப்பர்த்தம் கற்பித்தும் மக்களுக்குள் புகுத்தி அதன் மூலம் எதிர்ப்பு ஏற்படச் செய்வார்கள். ஆனால் மனித சமூகத்தில் புரட்சி என்பது மிகச் சாதாரணமாய் இருந்து, காரியத்தில் நடைபெற்று தான் வருகின்றது.

"மனிதனுக்கு முற்போக்கு அறிவும் அக்கறையும் ஏற்பட ஏற்பட புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றத் தோன்ற மாறுதல்கள் என்ற புரட்சிகள் உண்டாகிக் தான் இருக்கும்."

விடுதலைப் போராட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துக் கம்யூனிஸ்டு கட்சியும், காங்கிரஸ் கட்சியும் போராடி வந்தன. 1929இல் மீரத் சதி வழக்கு போடப்பட்டது. பிரிட்டிஷ் அரசு நாடெங்கும் இருந்த பிரபல கம்யூனிஸ்டு தலைவர்களைக் கைது செய்து "ராஜத்துவேஷம்" என்று குற்றம் சாட்டி அவர்கள் மேல் சதி வழக்கு தொடங்கிற்று. பிரிட்டிஷ் சர்க்கார் கம்யூனிஸ்டு இயக்கத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்று கோர அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டு வந்த காலம் அது. காங்கிரஸ் மிதவாதப் போக்கைக் கண்ட வாலிபர்கள் தீவிர இயக்கத்தில் ஈடுபட முன் வந்தனர்; 'ஹிந்துஸ்தான் குடி அரசுக் கட்சி' பாஞ்சாலம், ஐக்கிய மாகாணம், பீகார், வங்கம் முதலிய மாநிலங்களில் ஆரம்பித்துச் செயல் பட்டனர். பயங்கரவாதச் செயல்களின் மூலம்தான், அதாவது, குண்டுகள், ரிவால்வர்கள் கொண்டுதான்

பிரிட்டிஷ் அந்நிய ஆட்சியை ஒழிக்கமுடியும் என்ற எண்ணம் உந்த இவர்கள் செயல்பட்டனர். இதன் முக்கியத் தலைவர்கள் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு, பூதகேஸ்வரதத், அஜாய்கோஷ் (பிறகு இவர் இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்து, சுமார் 10 ஆண்டுகள் பொதுச் செயலாளராக இருந்து தொண்டாற்றி 1962இல் காலமானார்.)

பகத்சிங், சாண்டர்ஸ் என்ற வெள்ளைப் போலீஸ் அதிகாரியைச் சுட்டுக் கொன்றார் என்று குற்றம் சாட்டப் பட்டு, 1931இல் தூக்கிலிடப்பட்டார். அவர் எழுதிய, "நான் ஏன் நாஸ்திகனானேன்'' என்ற நூலைத் தோழர் ப. ஜீவானந்தம் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட வுடன் பிரிட்டிஷ் சர்க்கார் அதைச் சட்ட விரோதமாக்கித் தடை செய்து பறிமுதல் செய்தது. தோழர் ப. ஜீவானந்தத் தையும் இந்நூலை அச்சடித்துக் கொடுத்த பெரியாரின் சகோதரி திருமதி கண்ணம்மாள் அவர்களையும் கைதுசெய்து சிறையில் அடைத்தது. அன்று தோழர் ப. ஜீவானந்தம் பெரியார் ஈ. வே. ராவின் வலதுகரமாக சுயமரியாதை இயக் கத்தின் முக்கிய தலைவராக விளங்கினார்.

3. முற்போக்குப் பாதை

பெரியார் ஈ. வே. ரா. 1931-32இல் பல மேல் நாடுகளுக் குச் சென்று வந்ததனால் ஆழ்ந்த அரசியல் அனுபவம் பெற் றார். குறிப்பாக, சோவியத் ரஷ்யாவிற்குச் சென்று அங்கு அரசாங்க விருந்தினராக இருந்து, நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து ரஷ்யப் புரட்சியின் மகத்தான சாதனைகளை நேரடி யாகக் கண்டு களித்தார்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் இங்கிலாந்துக்குச் சென்ற போது, அங்குக் கம்யூனிஸ்ட் தலைவரும் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் சக்லத்வாலாவைக்

கண்டு, அவருடன் உரையாடினர். அவர் பெரியாருக்கு அன்பளிப்பாகக் கொடுத்த சோவியத் யூனியன் 5 ஆண்டு திட்ட ஆங்கிலப் புத்தகத்தைப் பெரியார் தமிழில் வெளியிட்டார். தமிழ் நாட்டில் நவம்பர் புரட்சியால் ஆகர்ஷிக்கப்பட்டோர் அனைவரும் வாசித்தறிய வேண்டிய அரிய புத்தகம் இது.

நாடு திரும்பி வந்த பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் அன்று முதல் மறையும் வரை சோவியத் ருஷ்யாவின் உண்மையான நண்பராக விளங்கி வந்துள்ளார்.

"குடி அரசு" பத்திரிகை சோஷலிஸ்ட் கருத்துகளை அன்று அள்ளி அள்ளி வீசியது. கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான தோழர் ம. சிங்காரவேலர் அன்று "குடி அரசு" பத்திரிகையில் சரளமாக சோஷலிசம் பற்றி எழுதி வந்தார். அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் முதன் முதலாக சோஷலிஸ்ட் கொள்கையைப் பரப்பி வந்த பெருமை தோழர் ம. சிங்காரவேலர் அவர்களையும் பெரியார் ஈ. வே. ரா. அவர்களையும் தோழர் ஜீவா அவர்களையும் சாரும். இக் கருத்துகள் எண்ணற்ற வாலிபர்களையும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களையும் ஈர்த்தன.

4. பெரியாரும் சுயமரியாதை இயக்கமும்

1932இல் பெரியார் ஈ. வே.ரா. அவர்கள் ஈரோட்டில் தம் இல்லத்தில் நடத்திய ஒரு கூட்டத்தில் தோழர் ம. சிங்காரவேலர் அவர்கள் சுயமரியாதை—சமதர்மத் திட்டத்தை விளக்கிப் பேசினர். இதைச் சிலர் எதிர்த்து, சுயமரியாதை இயக்கம் சமூகச் சீர்திருத்த இயக்கமாகத் தான் இருக்க வேண்டுமென்று பேசினர். முடிவில் தோழர் ம. சிங்காரவேலர் அவர்கள் வெற்றி பெற்றார்.

"எந்தச் சீர்த்திருத்தங்களையும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் வழியாக நிறைவேற்றிக் கொள்ளலாம். அரசியலில் நுழைய விரும்புவோருக்கும் நமது இயக்கத்தில் இடம் இருக்க வேண்டும். சுயமரியாதை இயக்கம் எப்பொழுதும் போல் சமூக இயக்கமாக இருந்து வரலாம். அரசியலுக்காக சமதர்மக் கட்சி என்ற ஒரு தனிப் பிரிவை அதற்குள் அமைத்துக் கொள்ளலாம்" என்று பெரும்பான்மையோரால் முடிவு செய்யப்பட்டது.

இம் முடிவுகள் வெளியிடப்பட்டன. சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்த ஒரு சில "பெரிய மனிதர்கள்" உடனே பெரியார் ஈ. வே. ரா. அவர்களைத் தாக்கத் தொடங்கினர்.

"சுயமரியாதை இயக்கம் பொதுவுடைமை இயக்கமாகி விட்டது. அதை அடக்காவிட்டால் நாட்டிற்கு இன்னல்கள் நேரும் என்று காங்கிரஸ்காரர்களும் ஈ. வெ. ரா. அவர்களைத் தாக்கத் தொடங்கினர்.

பெரியார் கூறினார்: "பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்திற்குப் பொருளாதாரமும் அரசியலும் அவசியமானதா? அல்லவா? இந்த இரண்டையும் விட்டு விட்டுச் செய்யும் முற்போக்கிற்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையே இல்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாகப் புராண முட்டாள் தனத்தையும், பார்ப்பனச் சூழ்ச்சியையும் பேசிக் காலங் கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால், அது அழிந்து போவதே மேலான காரியம் என்று சொல்லுவேன்.

"வருணாசிரமம் இருக்க வேண்டும்; சாதி இருக்க வேண்டும்; ராஜாக்கள் இருக்க வேண்டும்; முதலாளிகள்

இருக்க வேண்டும்; மதம் இருக்க வேண்டும். வேதம் புராணம், இதிகாசம் இருக்க வேண்டும்; இன்றைக்கு இருக்கிறவை எல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இவைகளை எல்லாம் பலப்படுத்த, நிலைக்க வைக்க வேண்டி வெள்ளைக்காரன் மாத்திரம் போக வேண்டுமென்கிற காங்கிரசோ, சுயராஜ்யமோ, தேசியமோ காந்தீயமோ சுயமரியாதை இயக்கத்திற்கு வைரியே ஆகும். ஆகையால் சுயமரியாதை இயக்கத்தாரால் அழிக்க வேண்டியவைகளுள் இந்தக் காங்கிரசும் காந்தீயமும் முதன்மையாகும்" என்று ஆணித்தரமாகவும், அஞ்சாநெஞ்சத்துடனும் பெரியார் ஈ. வே. ரா. காங்கிரஸ்காரர்களின் அவதூறு பிரச்சாரத்திற்குப் பதிலிறுத்தார்.

"குடி அரசு" பத்திரிகை தமிழ் நாட்டில் தீவிர அரசியல் பத்திரிகையாக விளங்கிற்று. ஈ. வே. ரா. பயமின்றி எழுதிய பல கட்டுரைகள் வெள்ளையர் ஆட்சியின் கண்களை உறுத்தின.

வெள்ளையன் ஆட்சி சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. வாள்ஏந்திச் சிங்கத்தின் குகையில் ஈ. வே. ரா. புகுந்தார். "இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்" என்ற தலையங்கத்தை ஈ. வே. ரா. "குடி அரசி"ல் தீட்டினார். உடனே வெள்ளையன் ஆட்சி "குடி அரசு" பத்திரிகை மீது பாய்ந்தது, இதனால் "குடி அரசு" நிறுத்தப்பட வேண்டியதாயிற்று.

ஈ. வே. ரா. அஞ்சாநெஞ்சம் படைத்தவரல்லவா? "குடி அரசு" நின்றதும், "புரட்சி" என்ற பெயரில் புதிய வாரப்பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார். "குடி அரசு" விட்டுச் சென்ற வேலையைப் "புரட்சி" செய்யத் தொடங்கிற்று.

1933இல் கோவை ஜில்லா சுயமரியாதை—சமதர்ம மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் திரு. வி. க. லெனின் படத்தைத் திறந்து வைத்துப் பின்வருமாறு கூறினர் :

"சுயமரியாதை இயக்கத்திற்கு நாயக்கர் அவர்கள் தந்தை ஆவார்; நான்தாய் ஆவேன். நாங்கள் இருவரும் மாயவரம் சமரச சன்மார்க்கக் கூட்டத்தில் சேர்ந்து பெற்ற பிள்ளையே சுயமரியாதையாகும். அக் குழந்தை தாயுடன் வாழாது இதுகாறும் தந்தையுடன் சேர்ந்து வாழ்கிறது. அதன் வளர்ச்சியைக் கண்டு யான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்."

இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும் என்று தலையங்கம் எழுதியதனுல் ஈ. வே. ரா. சிறை ஏகும் முன் வழக்கு மன்றத்தில் ஈ. வே. ரா. முழக்கினர்:

"நான் 7, 8, வருட காலமாய்ச் சுயமரியாதை—சமதர்மப் பிரச்சாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழ வேண்டும் என்பது அப் பிரச்சாரத்தின் முக்கிய தத்துவமாகும்.

"இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப் படுவதும், அதற்காகப் பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவைகள் இல்லாமல் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகாது.

"இந் நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தாலும் சரி, அல்லது இந்தப் பிராதுக்குப் போதிய ஆதாரமில்லை என்று நியாயத்தையும் சட்டத்தையும் லட்சியம் செய்து வழக்கைத் தள்ளி விட்டாலும் சரி, இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்குமாறு என் தோழர்களுக்கு வழிகாட்ட

எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்."

இதற்கு வெள்ளையன் ஆட்சி கொடுத்த பரிசு, ஈ. வே. ரா, வுக்கு 9 மாத சிறைத் தண்டனையும், ரூ. 300 அபராதமும்; கட்டத் தவறினால் மீண்டும் 1 மாதம் சிறைத் தண்டனை.

வெள்ளை அரசினருக்கு ஈ. வே. ரா. ஒரு சிம்ம சொப்பன மானார். "குடி அரசு" பத்திரிகையில் ஈ. வே. ரா. எழுதிய மிகச் சிறந்த முற்போக்குக் கட்டுரைகள் "குடி அரசு கலம்பகம்" என்ற பெயரில் இரு பாகங்களாகப் புத்தக வடிவத்தில் "குடி அரசு பதிப்பகத்தாரால்" வெளியிடப் பட்டன. அவற்றை வெள்ளை ஆட்சியாளர் பறிமுதல் செய்தனர்.

ஈ. வே. ரா.வின் பத்திரிகையாகிய "புரட்சி"யும், வெள்ளை ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு இரையாயிற்று.

ஈ. வே. ரா. வின் பெயரும் புகழும் வானை எட்டின. மக்களின் ஆதரவிற்கு எல்லையே இல்லை. காங்கிரஸ்காரர் களும், நீதிக்கட்சியினரும் ஈ. வே. ரா. வைத் தங்கள் சொத்தாக்கிக் கொள்ள முயன்றனர்.

5. ஈரோட்டுத் திட்டம்

சுயமரியாதை இயக்கம்

பெரியார் ஈ. வே. ரா. சோவியத் யூனியன், இங்கி லாந்து, ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வந்த பின்னர், 1932ஆம் ஆண்டு இறுதியில் தோழர் ம. சிங்காரவேலர் அவர்களிடம் கலந்து பேசினார்.

தோழர் சிங்காரவேலர், பெரியார் ஈ.வெ.ரா. இருவரும் சுயமரியாதைச் சமதர்மத் திட்டமென்று ஒன்றைத் தயாரித்து, சுயமரியாதை இயக்கம் பயன்தர ஈரோடு திட்டத்தை ஈ. வெ. ரா.யுடன் சேர்ந்து வேலை செய்வதாகக் இத் திட்டத்தைக் காங்கிரஸ் நீதிக்கட்சிகளுக்கு அனுப்பி வைத்தார். இதன் விளைவே ஈரோட்டுத் திட்டம்; இத் திட்டத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் மகாத்மா காந்திக்கு அனுப்பி வைத்தது, காந்தி இத் திட்டத்தை ஏற்க மறுத்து விட்டார்.

நீதிக் கட்சி இத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறிற்று. எனவே, ஈ. வே. ரா. அவர்கள் நீதிக் கட்சியை ஆதரிக்கத் தொடங்கினர்.

இதுகாறும் சமூகச் சீர்த்திருத்த இயக்கமாக இருந்த சுயமரியாதை இயக்கத்தை அரசியல் இயக்கமாக மாற்றியது ஈரோட்டுத் திட்டமாகும்.

“சுயமரியாதை இயக்கமானது, தென் இந்தியாவில் 7, 8 ஆண்டுக் காலமாக பாமர மக்களிடையே ஏராளமாய்ப் புதைந்து கிடந்த ஜாதி, மதம் முதலியவைகளைப் பற்றிய குருட்டுநம்பிக்கைகள், மூடப் பழக்கவழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றியும், பொருளாதாரத் தன்மையின் கீழ் நிலையைப் பற்றியும் செய்து வந்த புரட்சிப் பிரச்சாரத்தின் பலனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருப்பதாலும், பகுத்தறிவுக்கு ஏற்காத முறையில் நடைபெற்று வரும் மேற்கண்ட பழக்க வழக்க முறைகளைச் சட்ட மூலமாக வன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாலும், பாமர மக்களைப் பல அரசியல் ஸ்தாபனங்களும் மத ஸ்தாபனங்களும், சமூகக் கட்டுப்பாடுகளும் அங்

தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத் துறையில் ஒடுக்கியும் வைப்பதற்குச் சாதனமாக அரசியல் ஸ்தாபனங்களே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பது ஆக்ஷேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும், வட்ட மேஜை மகாநாட்டின் பயனுகவும் இந்து முஸ்லிம் மாநாடுகளாலும் செய்யப்பட்ட முடிவுகளானவை பொது நன்மைக்கு என்று ஏற்படுத்தப்படுகின்ற வசதிகள் தொழில் முறைகள் ஆகியவற்றின் பயன் எல்லாம் தனிப்பட்ட நபர்களே அடையும்படியான வழிக்கே ஆதாரமாயிருப்பதோடு மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு நாசத்தை உண்டாக்கும் கொடுமையான மதக்கோட்பாடுகளுக்கும் மனிதத் தன்மைக்கு முரணுன ஜாதி வித்தியாசங்களுக்கும் ஆக்கமளிப்பதாய் இருந்தன.

சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்மக் கட்சி (Socialist Party) என்பதாக ஓர் அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற் கண்ட திட்டத்தை வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப் பட்டது.

1. பொது ஜன சவுகரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களைத் தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்பதற்கும், ஜாதி மத சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வாத முறைகளை ரத்து செய்ய வேண்டும்.

பாமர மக்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், மூடப் பழக்கங்களில் இருந்தும், ஜாதி மதக் கொள்கையில் இருந்தும் விடுவித்து சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொதுஜன அவசியத்திற்கு என்று ஏற்படுத்தப்படுகிற தொழில் முறைகள் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவைகளின் நிர்வாகத்தையும் அதன் இலாபத்தை

தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்ய வேண்டும்.

2. எல்லாச் சட்ட சபை, முனிசிபல் தாலுக்கா ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயது வந்த யாவருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படிச் செய்ய வேண்டும். தனிப்பட்ட தொழிற்சாலைகள், ரயில், கப்பல் முதலியவைகளில் தொழிலாளிகளுக்கு எப்பொழுதும் தொழில் இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரித்தனத்தையும் அவர்களுடைய நல்வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிர்ணயப்படுத்தி அதற்கு ஓர் உறுதிப்பாட்டையும் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. நிலச் சொந்தக்காரர்களாயில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு நியாயமான பங்கு விகிதம் கிடைக்க வேண்டும்.

4. கோவிலில் பிரார்த்தனை இடங்கள் முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துகள், வரும்படிகள் ஆகியவைகளைப் பொதுமக்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, அனாதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவைகளுக்குப் பயன்படுத்த அனுமதி பெறவேண்டும்.

5. இந்திய சமூகத்தில் சாதி மதப் பிரிவு முதலியவைகளைக் குறிக்கக் கூடிய குறிப்புகள் எதையுப் பொது ஆதாரங்களில் (ரிக்கார்டுகளிலிருந்து) எடுத்து விடுவதற்கும் அம்மாதிரிப் பட்டம் உடையவர்களைப் பொது வேலைகளில் இடம் பெறாமல் இருக்கும்படிச் செய்வதற்கும் அனுமதி பெறுதல்.

6. முனிசிபாலிட்டி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் மூலமாகவே போக்குவரவுச் சாதனவசதி, வீட்டுவசதி, பால்

வசதி வைத்தியவசதி முதலியவைகள் நடைபெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

7. இவைகளை நிறைவேற்ற சட்டசபை முனிசிபாலிட்டி முதலிய ஜனப் பிரதி ஸ்தாபனங்களுக்கு மேல் கண்ட கட்சியினர் பேரால் அபேட்சகர்களை நிறுத்த வேண்டும்.

8. கட்சி அபேட்சகர்கள் மேல்கண்ட திட்டங்களுக்கு உறுதி கூறி கையெழுத்திட வேண்டும்.

9. மேல்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவைகளை எல்லாம் சட்டசபைப் பிரவேசம் மூலம், பிரசங்க மூலம் சொல்லுவதன் மூலம் பத்திரிகைத் துண்டுப் பிரசுரம் முதலியவைகள் மூலம் சட்டத்தை அனுசரித்துச் செய்ய வேண்டியது.

II

1. பிரிட்டிஷ் முதலிய எந்த வித முதலாளித்தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்வது.

2. தேசத்தின் பேரால் கொடுக்கப்பட வேண்டிய கடன்களை யெல்லாம் ரத்து செய்வது.

3. எல்லாத்தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், பாங்கிகளையும் கப்பல் படகு நீர்வழி போக்குவரத்துச் சாதனங்களையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.

4. எந்த விதமான பிரதி பிரயோஜனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும் காடுகளையும் மற்ற ஸ்தாவர சொத்துகளையும் பொது ஜனங்களுக்கு உரிமையாக்குவது.

5. குடியானவர்களும் தொழிலாளிகளும் லேவாதேவிக் காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் (கான்சல்) செல்லுபடியற்றதாக ஆக்கி ரத்து செய்து விடுவது.

6. சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளையெல்லாம் கலைத்து, இந்தியா முழுவதையும் தொழிலாளிகள் குடியான வர்கள், கூலி வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடி யான ஆட்சிக்குக் கொண்டுவருவது.

7. தொழில் செய்பவர்கள் 7 மணி நேரத்திற்குமேல் வேலை செய்யக்கூடாது என்பதுடன், அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது. தொழிலாளிகளுக்குக் கூலியை உயர்த்தித் தொழில் இல்லாமல் இருக்கின்றவர் களைச் சர்க்கார் போஷிக்கும்படிச் செய்வது."

ஈரோட்டுத் திட்டத்தைப் பற்றித் தோழர் சாமி. சிதம் பரனார் "தமிழர் தலைவர்" என்ற புகழ் பெற்ற வரலாற்று நூலில் பின்வருமாறு கூறுகிறார் :

"ஈரோட்டில் செய்த முடிவுகளை ஒரு மாகாண மாநாடு கூட்டி, இதன் மூலம் நடவடிக்கைக்குக் கொண்டு வர வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இம் முடிவுகள் பத்திரிகைகளில் வெளியானவுடன் பிற்போக்கான அரசியல் வாதிகள் அனைவரும் அஞ்சினார்கள். சுயமரியாதை இயக்கம் பொதுவுடைமை இயக்கமாகி விட்டதென்று கூச்சலிட் டனர். "ஈ. வே. ரா. ரஷ்யா சென்று வந்ததன் பலன் இது. இத்திட்டம் ரஷ்ய அரசாங்கத்தின் தூண்டுதலினாலேயே முளைத்தது" என்று திரித்துக்கூறினர். ஆனால், இத்திட்டம் பொதுமககள் மனத்தைக் கவர்ந்தது. பழைய சுயமரியாதைக் காரர்கள் பலர் கட்சியின் போக்குப் பிடிக்கவில்லையென்று கூறி ஒதுங்கினர். அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஆளா வோம என்று சிலர் அஞ்சி மறைந்தனர். ஆனால், புதியவர்

கள் பலர் இயக்கத்தில் சேர்ந்து கொண்டே இருந்தனர். காங்கிரசின் பலம் குன்றியது. தென்னுட்டுக் காங்கிரசைச் சுயமரியாதை இயக்கம் விழுங்கி விட்டது. 'சுயமரியாதைச் சமதர்ம சங்கம்' என்னும் பேரால் தமிழ்நாட்டிலும் மலையாளத்திலும் பல நூற்றுக்கணக்கான சங்கங்கள் ஏற்பட்டுவிட்டன; வாரந்தோறும் மாநாடுகள் நடந்தன. இதனுல், காங்கிரஸ்காரர்கள் இவ்வியக்கத்தைப் பற்றித் தவருமல் பொது மக்களிடம் கூற முன்வந்தனர். "சுயமரியாதை இயக்கம் பொதுவுடைமை இயக்கமாகிவிட்டது. அதை அடக்சாவிட்டால் நாட்டிற்கு இன்னல்கள் நேரும்" என்று கூறி வந்தனர். அரசாங்கத்தார்க்கும் அடக்குமுறைத் துப்பாக்கியை நீட்டும்படி அறிவுறுத்தினர்."

ஈ. வே. ரா. அவர்கள் எதற்கும் அஞ்சாது ஈரோட்டு திட்டத்தை நகரங்களிலும் பட்டிதொட்டிகளிலும் தீவிரமாக முழங்கி வந்தார்.

ஈ. வே, ரா. அவர்கள் 'குடி அரசில்' வெள்ளையன் ஆட்சியை எதிர்த்து எழுதியதற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். தன் கொள்கையை விடாப்பிடியாகப் பின்பற்றிவந்த பெரியார் ஈ. வே.ரா. சிறை வாசத்திற்கா அஞ்சுவார்? நீதிமன்றத்தில் அவர் முழங்கினுர்:

"நான் ஏழெட்டு வருடகாலமாய், சுயமரியாதைச் சமதர்மப் பிரசாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும், பொருளாதாரத்திலும், மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழவேண்டும் என்பது அப்பிரச்சாரத்தின் முக்கியத்துவமாகும்.

"இப்படிப்பட்ட ஒருமாறுதல் உண்டாக ஆசைப்படுவதும், அதற்காகப் பலாத்காரம், துவேஷம், இம்சை

ஆகியவைகள் இல்லாமல் பிரச்சாரம் செய்வதும் குற்ற மாகாது."

ஈ. வே. ரா. அவர்கள் தண்டிக்கப்பட்டுச் சிறையிலடைக் கப்பட்டார். ஆனால் அவர்கள் மனம் தளரவில்லை.

1934இல் நடைபெற்ற மத்திய சட்டசபைத் தேர்தலில் நீதிக் கட்சி தோல்வி அடைந்தது.

1937இல் தமிழகத்தில் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்டது. இதைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

1933இல் நீதிக்கட்சியின் மாநாடு சென்னையில் நடை பெற்றது. ஈ. வே. ரா. அவர்கள் இக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிக் கட்சியின் "குடியேற்ற நாட்டு நிலை பெறுவது" என்ற அரசியல் நோக்கம் மாறி, "முழுத் தனியாட்சி பெறுவது" என்ற நோக்கம் நிறை வேற்றப்பட்டது.

6. இந்தி எதிர்ப்பு

ராஜாஜி அவர்களின் தலைமையில் உண்டான காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கட்டாய இந்தி சில பள்ளிகளில் புகுத் தப்பட்டது. இதை எதிர்த்துப் பெரியார் ஈ. வே. ரா. ஓர் இயக்கத்தைத் தட்டி எழுப்பினார். அவர் கைது செய்யப் பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், அவர் வெளி யிட்டு வந்த "நவசக்தி"யில் பின்வருமாறு எழுதினார்:-

> "திரு. ஈ. வே. இராமசாமி நாயக்கர்...கடுங்காவல் தண்டனை ஏற்றுச் சிறைக்கோட்டம் நண்ணினர். வெள்ளிய தாடி அசைய, மெலிந்த தோல் திரங்க,

இரங்கிய கண்கள் ஒளிர, பரந்த முகம் மலர, கனிந்த முதுமை ஒழுக தாங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திரு. நாயக்கர் சிறை புகுந்த காட்சி, அவர் தம் பகைவர், நொதுமலர், நண்பர் எல்லாருள்ளத்தையும் குழையச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

"முதுமைப் பருவம்! காவல்! கடுங்காவல்! என்னே! இந்நிலையை உன்ன உன்ன உள்ளம் உருகுகின்றது. திரு. நாயக்கருடன் மிக நெருங்கிப் பழகிய சிலர் மந்திரிப் பதவியில் வீற்றிருக்கின்றனர். அவர் தம் மனமும் கசிந்தேயிருக்கும். வயதின் முதிர்ச்சி எவரையும் அலமரச் செய்யும்...

"நண்பர் நாயக்கருக்குச் சிறைவாசம் பழையது; மிகப் பழையது; புதியதன்று. முன்னே அவர் ஒத்துழையாமையில் ஈடுபட்டும், தீண்டாமை முன்னிட்டும், சமதர்மத்தைக் குறிக்கொண்டும் பலமுறை சென்றுள்ளனர். இம்முறை அவர் இந்தி எதிர்ப்புக் காரணமாகச் சிறை நுழைந்திருக்கின்றனர். சிறைக் கோட்டம் நாயக்கருக்கு ஒருவித தவக்கோட்டம் ஆயது போலும்!

"சிறைப் பறவை" யாகிய இராமசாமி நாயக்கர் வரலாற்றை விரித்துக் கூறவேண்டுவதில்லை. அவர் தம் வரலாற்றில் அறியக் கிடக்கும் நுட்பங்கள் பல உண்டு. அவைகளில் சிறப்பாகக் குறிக்கத் தக்கன, இடையறாச் சேவை, சமத்துவ நோக்கம், சுதந்திர உணர்ச்சி, நட்புரிமை, தாட்சண்யமின்மை, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமை, அஞ்சாமை, ஊக்கம், சோர்வின்மை, சலிப்பின்மை, எடுத்த வினையை முடிக்குந் திறன், கரவு—சூழ்ச்சி யின்மை முதலியன. இவைகள் அவர் தம் வாழ்வாக

அரும்பி, மலர்ந்து, காய்ந்து, கனிந்து நிற்கின்றன. இந் நீர்மைகள் திரு. நாயக்கரை அடிக்கடி சிறைபுகச் செய்கின்றன போலும். திரு. நாயக்கர் தலை சாய்த்துப் படுக்கையில் கிடந்து காலங் கழித்தாரில்லை.

"அவர், தமிழ் நாட்டின் நாலா பக்கமும் சுழன்று சுழன்று இரவு பகல் ஓயாது கர்ச்சனை செய்து வந்தார். ஓய்வு என்பதை அறியாது வீர கர்ச்சனை புரிந்து வந்த கிழச் சிங்கம் இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறது. சிறைபெற்றிருக்கிறது. சிறையில் தலை நிமிர்ந்து கிடக்கிறது."

இவ்வாறு தாம் எது சரி என்று எண்ணினரோ அதற் காகத் அர்ப்பணம் செய்து கொண்டவர் பெரியார்; அவர் கொள்கை ஒன்று, நடைமுறை மற்ருென்று என்று அவர்தம் எதிரிகள் கூட கூற முடியாது.

"மனத்துக்கண் மாசிலான் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

என்று வள்ளுவர் வகுத்த இலக்கணத்துக்குப் பெரியார் இலக்கியமாக விளங்கினர்.

பெரியார் அவர்களின் பல சிறந்த நடைமுறைக் கொள் கைகளில் குறித்த நேரத்தில் அனைத்தையும் செய்வது என்பது மேலோங்கி நின்றது. பெரியார் பொதுக் கூட்டத் தில் மாலை 7 மணிக்குப் பேசுவார் என்றிருந்ததால் 6-45 மணிக்கே பெரியார் அவர்களை மேடையில் பார்க்கலாம். சொன்ன சொல் தவருமல் நடப்பது பெரியார் அவர்களின் மூச்சு. "எல்லா விளக்கும் விளக்கல்ல. சான்ருேர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு." என்று பொய்யா மொழிப் புலவர் கூறியதற்குப் பெரியார் அவர்களே சான்று.

7. பெரியார் பெரியாரே

வ. உ. சி. அவர்கள் பெரியாரைப் பற்றி 1928லேயே கூறியதைப் பார்த்தால் பெரியார் பெரியாரே என்பதில் எவ்விதச் சந்தேகமும் இருக்க முடியாது. வ. உ. சி. கூறுகிறார் :

"திரு. நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனத்திற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந்தான். அவரை எனக்கு 20 வருடமாய்த் தெரியும். அவரும் நானும், ஒரே இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்து வந்தோம். அங்கு (காங்கிரஸ்) நேர்மையற்றவர்கள் சிலர் வந்து புகுந்த பின், நானும் அவரும் விலகி விட்டோம். பிறகு நாயக்கர் அவர்களால் ஆரம்பித்து நடந்தப் பெறும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து, இது எல்லா இடத்திலும் நல்ல இயக்கமாயிருப்பதால், நானும் என்னாலான உதவியை அவ்வியக்கத்துக்குச் செய்து வருகின்றேன். சுருங்கச் சொல்லின், நாயக்கரவர்கள் தமிழ் நாட்டின் எல்லாத் தலைவர்களையும் விடப்பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும்."

பெரியார் 1973 டிசம்பர் 24ஆம் தேதி யன்று வேலூர் மருத்துவ மனையில் ஆழ்ந்த நித்திரையில் அமர்ந்தார். அவர் 94 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" என்றார் வள்ளுவர்.

94 ஆண்டுகள் நம்முடன் இருந்தாரே என்பதையும் மறந்து இவ்வளவு செயற்கரிய காரியங்களைச் சாதித்தவர் இன்று மறைந்து விட்டாரே என்று கோடான கோடி மக்கள் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்தனர்.

தமிழ் எழுத்தாளர் வ. ரா. அவர்கள் 1933இல் பெரியாரைக் கீழ் வருமாறு வருணித்தார் :

“தேர் இல்லை, திருவிழா இல்லை, தெய்வம் இல்லை என்கிறார் நாயக்கர்; சுவாமியைக் குப்புறப் போட்டு வேட்டி துவைக்கலாம் என்கிறார். இவரைக் காட்டிலும் பழுத்த நாத்திகன் வேறு எவருமே இருக்க முடியாது. “பாதகன்” என்று சிலர் உறுமுகிறார்கள். வீட்டைக் கட்டி வைக் கோலைத் திணிப்பதைக் காட்டிலும், வீடு கட்டாமலே வைக் கோலைப் போராய்ப் போடலாம் என்ற சிக்கன யோசனை சொல்வது தவறா? அழுகிப் போய் புழு நெளியும் உடலுடன் இருப்பதைக் காட்டிலும், உயிர் விடுவது உத்தமம் என்று அபிப்பிராயம் கொடுத்தால், “சாகச் சொல்லுகிறான் பாவி” என்று திட்டுவதா? கண்டவர்க் கெல்லாம் குனிந்து சலாம் செய்து மண்ணோடு மண்ணாய் ஒட்டிக் கொண்டு மார்பால் ஊர்ந்து செல்ல வேண்டாம் என்று சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினால், “பாபி, நமஸ்காரத்தைக் கண்டிக்கிறான்” என்று அபத்தம் பேசுவதா?மனச்சாட்சிக்கும்தொண்டுக்கும் பக்தரான நாயக்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்றே தெரிந்து கொள்ளவில்லை என்றே சொல்லுவேன்... அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற ஏழை களாய் சொரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை, அடிதெரியும்படி கலக்கிய பிரம்மாண்டமான பாக்கியம், நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும். அப்பா! நாயக்கரின் அழகுப் பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற் களை, அணி அணியாய் அலங்காரம் செய்யும் உவமானங் களை, உபகதைகளை, அவரது கொச்சை வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப் பைப் பார்க்கவும், கேட்கவும், வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பதுபோல் வந்து மொய்ப்

பார்கள். அவர் இயற்கையின் புதல்வர்! மண்ணை மணந்த மணாளர்! மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு, நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை....செய்ய வேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப் போல, தமிழ் நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை, தமிழ் நாட்டின் வருங்காலப் பெருமைக்கு, நாயக்கர் அவர்கள் முன்னோடும் பிள்ளை; தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு, அவர் கண்ணில் அரைகுறையாகப் பட்டிருக் கலாம். (எவர் கண்ணிலேனும் அது முழுமையாகப் பட்டி ருக்கிறதாக யார் உறுதியாகச் சொல்ல முடியும்?) ஆனால், மலைகளையும், மரங்களையும், வேரோடு பிடுங்கி யுத்தம் செய்த மாருதியைப் போல், அவர் தமிழ் நாட்டின் தேக்க முற்ற வாழ்வோடு போர்புரியும் வகையைக் கண்டு, நாம் வியப்படையாமல் இருக்க முடியாது."

பெரியார் அவர்களே தந்துள்ள சில வாழ்க்கைக் குறிப்புகள் உள்ளபடியால் அவற்றை விளக்கமாக இங்குத் தருகிறேன்.

> "நான் சாதாரண ஆள்தான் என்றாலும், இன்றைய மந்திரிகள் போன்றவர்களைவிட எவ்வளவோ மேலானவன், உலகம் சுற்றியவன்; பூரண பகுத்தறிவுவாதி; சொத்து சம்பாதிக்க வேண்டிய தேவையில்லாதவன்; சாதி உணர்ச்சி, சாதிப்பற்று இல்லாதவன்; என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டுமென்பவன்; 70 ஆண்டு உலக அனுபவம், 30 ஆண்டு வியாபார அனுபவம்; 1915, '16, '17, '18' 19 வரை ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஈரோடு வியாபாரச்

சங்கத் தலைவன்; தெ. இ. வியாபாரச் சங்க நிர்வாக சபை அங்கத்தினனாக இருந்தவன்; 5 ஜில்லாவுக்கு இன்கம் டாக்ஸ் டிரிபியூனல் கமிஷனர்கள் மூவரில் ஒருவனாக இந்திய கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் பட்டவன்; ஈரோடு டவுன் ரீடிங்ரூம் செக்ரட்டரி; பழைய மாணவர் சங்க செக்ரட்டரி; ஹைஸ்கூல் போர்டு செக்ரட்டரி; பிறகு தலைவர்; 1914ஆம் ஆண்டு நடந்த கோவை ஜில்லா காங்கிரசு மாநாடு செக்ரட்டரி, 10 ஆண்டு காலம் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்; ஈரோடு தாலுக்கா போர்டு பிரசிடெண்ட்; பல வருடங்கள் ஈரோடு முனிசிபல்சேர்மென்; ஜில்லா போர்டு மெம்பர்; வாட்டர் ஒர்க்ஸ் கமிட்டி செக்ரட்டரி; பிளேக் கமிட்டி செக்ரட்டரி; கோவை ஜில்லா 2-வது சர்க்கிள் தேவஸ் தான கமிட்டி செக்ரட்டரியாக 10 ஆண்டு காலம் பிறகு, 1929 வரை வைஸ் பிரசிடெண்ட்; 1918ஆம் ஆண்டு உலக யுத்தத்தில் ஆனரரி ரெக்ரூட்டிங் ஆஃபீசர்; 1918ஆம் ஆண்டு யுத்தத்தில் தாலுக்கா, ஜில்லா அரிசி கண்ட்ரோலில் கவர்ன்மெண்டாரின் நிர்வாகி; அதாவது, அரிசி கண்ட்ரோலில் கவர்ன்மெண் டாருக்கு வரும் அரிசிவாகன்களின் ரசீதுகளை வாரம் ஒவ்வொரு தாலுக்காவிலிருந்தும் 15, 20 டன் வீதம் எனக்கே கொடுத்து, மற்ற வியாபாரிகளுக்கு விநியோ கிக்கும்படி ஜில்லா கலெக்டர் கேட்டுக் கொள்ளும் டிஸ்டிரிபியூட்டிங் அஃபீசர்; கார்னேஷன் கமிட்டி செக்ரட்டரி; காங்கிரசிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செக்ரட்டரி; தலைவர்; காதிபோர்டு (ஃபவுண்டர்) அமைப்பாளராக இருந்ததோடு, 5 வருடம் தலைவராக இருந்தபோது எனக்குச் செயலா ளராக டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், கே. சந்தானம், எஸ். ராமநாதன், கே. முருகேசன், தங்கபெருமாள், அய்யாமுத்து முதலியவர்கள் இருந்தார்கள்.

"இவைகள் ஒருபுறமிருக்க, 1940, '42-ல் 2 வைஸ்ராய்கள், 2 கவர்னர்கள் என்னை அழைத்து மந்திரிசபை அமைக்க வேண்டினார்கள். நான் மறுத்து விட்டேன். 1919 ஜூலையில் நான் ஜில்லா, தாலுக்கா போர்டு மெம்பர், சேர்மென் முதலிய பதவியை ராஜிநாமா கொடுத்த காரியம் பேப்பரில் வெளியானவுடன் லோகல் அண்டு முனிசிபல் போர்டு. கவுன்சில் மெம்பர். சி. ராசகோபாலாச்சாரியார் அவர்கள் ஈரோடு வந்து, "என்ன ராமசாமி நாயக்கரே! இப்படி முரட்டுத் தனமான வேலை செய்து விட்டீரே! உமக்கு புத்தியில்லையா?" என்ருர். அவர் பக்கத்தில் கெரோசின் ஆயில் டீலர்ஸ் ஏஜெண்ட் கோவிந்தாச்சாரி இருந்தார். உடனே நான் வணங்கி, "நான் என்ன செய்து விட்டேன்?" என்று கேட்டேன், அவர் தன் மனைவியைப் பார்த்து "அம்மா இவருக்குச் சொல்லு" என்று சொல்லி விட்டு மௌனமாக இருந்து விட்டார். அந்த அம்மையார் "அய்யர் உங்களுக்கு, நீங்கள் உங்கள் முனிசிபாலிடியில் தண்ணீர்க்குழாய் ஏற்படுத்தியதற்காக "ராவ்பகதூர்" கொடுப்பது என்று சிபாரிசு பண்ணியிருக்கிருர். உங்கள் கலெக்டர் "ராவ்சாகிப்" தான் சிபாரிசு செய்தார். அய்யர் "ராவ்பகதூர்" என எழுதி கவர்னருக்கு ஃபைல்போய் இருக்கிறது. நீங்கள் இப்படி அய்யருக்கு அவமானம் செய்து விட்டீர்களே; இது சரியில்லை" என்று சொன்னார். நான்பல காரணங்களைக் கூறி மறுத்து விட்டேன். நான் காங்கிரசுக்கு விரோதி என்று ஆனபிறகுங்கூட, ஆச்சாரியார் என் வீட்டிற்கு வந்தும் என்னை (காங்கிரசில் சேராமல், கதர் போடாமல்)ச் சட்ட சபைக்கு நாமினேஷன் போட ஃபாரம் நீட்டிக் கையெழுத்துக் கேட்டார். நான் மறுத்து விட்டேன்.

41இல் மந்திரி சபை அமைக்க ஒப்புக்கொள்ளும்படி சொன்னார். நான் கவர்னர், கவர்னர்—ஜெனரல் ஆகியவர்கள் இடமெல்லாம் மந்திரிசபை அமைக்க மறுத்து விட்ட பிறகு என்னை மந்திரிசபை அமைக்கும்படியும், நான் விரும்பினால் தானும் ஒரு மந்திரியாயிருந்து எனக்கு உதவியும், காங்கிரசு ஆதரவும் தருவதாயும் சொன்னார் நான் மறுத்துவிட்டேன்.

"போதும். இவ்வளவு எடுத்துக் காட்டுவதற்கே நான் மிக மிக வெட்கப்படுகிறேன். தறுதலைகளும், பொறுமைக்காரர்களும் சொந்த எதிரிகளும் இதன் மூலம் ஒரு பொது மனிதன் என்ன வென்று தெரிந்து கொள்ள வேண்டுமோ அதை விட்டு விட்டு குற்றம் குறை சொல்ல வழி காணத் துடிக்கிறார்கள்.

"இருந்தாலும் நான் ஏன் 'வெட்கம்' என்பதை விட்டு விட்டு இவ்வளவு எடுத்து காட்டுகிறேன் என்றால், துரோகம் செய்து அயோக்கியனாய் வாழ வேண்டிய அவசியம் எனக்கு எந்தக் கட்டத்திலும் வந்ததில்லை என்பதைக் காட்டவேயாகும். எல்லாத் துறைகளிலும் எனக்கு இந்த மந்திரிகளுக்குச் சிறிது கூட குறையாத அனுபவமும் திறமையும் உண்டு என்பதைக் கூறவுமேயாகும். ஒன்றை ஒப்புக் கொள்ளுகிறேன். அதாவது, நான் பல விஷயங்களில் அறிவு குறைவு உள்ளவனாக இருக்கக் கூடும்; பல தவறுகள் செய்திருக்கக் கூடும்; இன்றைய கருத்தில் இருந்து நாளை மாறுதல் அடையக் கூடும்; பல கருத்துகளை மாற்றியும் இருக்கிறேன். இவைகள் எல்லாம் எனது கண்ணியமான அனுபவம், ஆராய்ச்சியைக் கொண்டே இருக்குமே தவிர, பணம் சேர்க்கவோ பதவி பெறவோ, வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவோ, பெரிய ஆள் ஆகவோ, இழிவை மறைத்துக்

கொள்ளவோ கடுகளவுகூட காரணம் கொண்டதாய் இருக்காது. அதாவது, ஒரு பண்டம் கைநழுவி விழுந்து உடைந்து போவதற்கும், உடைக்க வேண்டு மென்றே கருதி, கீழேபோட்டு உடைப்பதற்கும் உள்ள பேதம் போன்றதாகும். இப்படிப் பட்ட என்னை இந்நாட்டு விடுதலைக்குக் குறுக்கே இருந் தவன், துரோகம் செய்தவன் என்று சொல்லும்போது எவ்வளவு மன உரம் இருந்தாலும் நிதானம் தவறத் தான் தூண்டுகிறது. அந்த நிதானம் தவறிய சொற்கள்தாம் மேலே என்னைப் பற்றிக் குறிப் பிட்டவையாகும். பொறுத்தருள்க.

"இன்னமும் சொல்லுகிறேன், நான் வெள்ளை யன் வெளியேறுவதற்குக் குறுக்கே இருந்தாலும், இந்திய சுதந்திரத்திற்கு நான் துரோகம் செய்தது உண்மையாக இருந்தாலும் இந்தப்பாவிகள், 'மாபாவி கள் பார்ப்பான் ஆதிக்கத்திற்கும், அதனுல் ஏற்பட்ட வட நாட்டான் சுரண்டல் ஆட்சிக்கும் இடம் கொடுத்து, அடிமையாகி அதனுல் பணமும், பதவியும், பெருமையும் சம்பாதிக்கும் சுயநலம் கொண்டல்ல"!

பெரியார் அவர்கள் அன்று எழுதியதை அப்படியே இங்குத் தந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, பெரியார் எப்படி ஒளிவுமறைவு இல்லாமல் தம்மைத்தாமே விமர்சனம் செய்து கொள்ளுகிருர் என்பதற்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டு, என்பது

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தோன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்று வள்ளுவர் கூறியதைப் பெரியார் மெய்ப்பித்துக் காட்டுகிருர்.

இரண்டாவதாகப் பெரியாரின் சிறப்புகளை மறைக்க அவர்களின சில கருத்துகளையோ அல்லது சில நடவடிக்கை களையோ எடுத்துக் கொண்டு, அதைப் பற்றி இந்த நூலில் எதுவும் இல்லையே, அவைகளை இந்த நூலாசிரியர் ஒளித்து அதைத் தவிர்க்க வேண்டும் என்று எழுதியுள்ளார் என்ற குற்றத்தைச் சிலர் சுமத்துவார்கள்.

பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை மட்டும் இந்நூலில் எழுதுவது என் கருத்தாக இருந்தால், இததுடன் இந்நூலை நிறுத்த வேணடும். அது என் கருதது அன்று. மாறுக, பெரியாரின் கொள்கைகளும், நடைமுறைகளும் பகுததறிவின இலக்கணமாக விளஙகு கின்றன என்பதைத் தெளிவுபடுததுவது தான் இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

ஆகவே, அவைகளை ஒன்றன் பின் ஒன்ருக எடுத்துக் கொள்ளுவோம்.

8. பிள்ளையார் உடைப்பு

"பிள்ளையாரை நடுத்தெருவில் உடைப்பேன், எல் லோரும் வந்து பாருங்கள்" என்று தெளிவாக விளம்பரம் செய்து," கடவுள் இல்லை, அது கற்பனையே, இதோ என் கைகளில் ஏந்தி இருப்பது ஒரு மண் பொம்மை, சிலையே தவிர கடவுள் அல்ல, இதோ இதைப்போட்டு உடைக் கிறேன் பாருங்கள்" என்று கூறி, கீழே போட்டு உடைத்தார் பெரியார் என்றும், இது மிகப் பெரிய குற்றமாகும் என்றும் பலர் கூறினர். பத்திரிகைகளும் இந்த "அடாத" செயலை எதிர்த்து எழுதின.

பெரியார் அவர்கள் மிகத் தெளிவாகச் சில உண்மை களைக் கண்டவர். வேதங்களும், சாத்திரங்களும், மனிதர்

களால் எழுதப்பட்டவையே தவிர, கடவுள் திருவாய் மலர்ந்த பொன்மொழிகள் அல்ல; வேதங்களிலும், சாத்திரங்களிலும் உள்ளவை அனைத்தும் கற்பனையே தவிர, வேறில்லை; சாதியின் அடிப்படையில் சமூகம் ஏற்பட்டது மனிதச் செயலாலேதான் என்பதனைச் சற்றுத் தெளிவாக இங்குக் கூற வேண்டியது அவசியம்.

தத்துவஞானிகள் இரு முகாமாக ஆதிமுதல் பிரிந்து நின்றுள்ளனர். பொருள்முதல் என்போர் பொருள் முதல்வாதிகள் என்றும், எண்ணம்முதல் என்போர் எண்ணம்முதல்வாதிகள் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

பெரியார் அவர்கள் எண்ணம் தோன்றுவதற்கு முன் பொருள் இருக்க வேண்டும், பொருளில்லாமல் எண்ணம் தோன்ற முடியாது என்பதனை இடைவிடாமல் கூறிவந்துள்ளார். சுருங்கக் கூறின், பெரியார் அவர்கள் ஒரு பொருள்முதல்வாதி.

எண்ணம்முதல்வாதிகள் ஆத்திகர்கள். பொருள் முதல் வாதிகள் நாத்திகர்கள்.

கடவுள் என்ற கருத்து எவ்வாறு தோன்றிற்று, கணபதி என்பவர் எப்பொழுது கடவுளானார் என்பதை இங்கு ஆராயலாம்.

9. தத்துவ ஞானம்

காட்டு மனிதன் குகைகளில் வசித்துவந்த காலத்தில், வேட்டையாடி, கிடைப்பதை உண்டு உறங்குவதுதான் அவனது முக்கிய வேலையாக இருந்து வந்தது. அப்பொழுது அவன் எண்ணத்தில் கடவுள் என்பதிருந்தது இல்லை.

காட்டு மனிதன் எப்பொழுது மனிதனுகத் திகழத் தொடங்கினுனே அப்பொழுதுதான் அவன் சிந்தனு சக்தியும் வளர்ந்தது. சிந்தனை மூளையில் ஏற்படுகிறது; சிந்தனை கையாலோ, காலாலோ. வயிற்றுலோ ஏற்படமுடியாது; மூளை என்பது தலையில் உள்ள சாம்பல் வர்ணமுடைய கொளகொள என்றுள்ள பொருளாகும். மூளை அளவிலும் தரத்திலும் பரிணும வளர்ச்சி பெற்றுக்கொண்டே வருகின்றது, கைகள் எவ்வளவு நுட்பமான வேலைகளைச் செய்கின்றனவோ அவ்வளவு நுட்பமான தரத்தை மூளை அடைகின்றது.

சுருங்கக்கூறின், மனிதன் உழுது பயிர்செய்து வாழத் தொடங்கியபோது, காட்டு மனிதனின் மூளையைவிடவும் வளர்ந்த மூளையுடன் இருந்தான். உற்பத்திச் சாதனங்கள் வளர வளர, அவன் மூளையும் வளர்ந்தது. சிந்தனு சக்தியும் அதிகரித்தது. எனவே நாகரிக மனிதன் ஏற்படுவதற்கு முன் மனித மூளைக்குக் கடவுளை ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே, காட்டு மனிதன் அல்லது அரைகுறை மனிதனுக்குக் கடவுள் என்பது ஒன்று இல்லாமல் இருந்தது.

உழுது பயிர் செய்யத் தொடங்கியதும், சூரிய வெப்பம் இருந்தால்தான் பயிர் நல்லபடி வளரும், என்பதனை உணரத் தொடங்கினுன் வளர்ச்சியைக் கண்ட மனிதன் மகிழ்ச்சி அடைந்து, சூரியனைத் தொழத் தொடங்கினுன். சூரிய பகவான் பிறந்தான். இது புராதனப் பொது உடமைச் சமுதாய காலமாகும்.

சக்கிமுக்கிக் கற்கள் ஒன்றேடொன்று உரசினுல் நெருப்பு வருவதைக் கண்டான். நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டது மனித பரிணும வளர்ச்சியின் ஒரு மைல் கல்லாகும். உணவைச் சமைக்க நெருப்பை உபயோகப்படுத்தினுன்

என்பது மட்டுமன்றி, பூமியிலிருந்து இரும்பைக் காய்ச்சி, இரும்பு ஆயுதங்களையும், இரும்புக் கலப்பையையும், இரும்புக் கைத்தொழில் கருவிகளையும் செய்ய நெருப்பு பெரிதும் உதவியது. எனவே, நெருப்பைத் தொழத் தொடங்கினான். அக்கினி பகவான் பிறந்தான்.

எனவே, வாழ்க்கைக்குத் தேவையானவைகளைக் கண்டு பிடிக்கும் சமயம் தோறும் புதிய புதிய கடவுள்கள் உற்பத்தி யாக்கப்பட்டார்கள். பூமி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் கடவுள்களாகத் தொழப்பட்டன. இவை தமிழிலக்கியத்தில் முறையே நிலம் நீர் தீ வளி வான் எனப்பட்டன. இவை அனைத்தும் அன்று மனிதனுக்குக் கண்கண்ட தெய்வங்களாகும்.

ஆகாயம் அவனுக்கு ஒரு தீராக் கேள்வியைக் எழுப்பியது. இதை "ரிக்வேத"த்தில் தெளிவாகப் பார்க்கலாம்.

"இந்த ஆகாயம் எந்த மரத்தால் கட்டப்பட்டுள்ளது" என்ற வினா எழுப்பபட்டுள்ளது.

"தைய்த்ரீய—பிராமணீயத்"தில் இந்த வினாவிற்கு விடையைப் பார்க்கலாம்.

"பிரம்மம் என்ற மரத்தின் பலகை; பிரம்மம் என்பதனைக் கொண்டுத்தான் இவ்வுலகமும், வானமும் ஏற்பட்டன."

"பிரம்மம்" என்றால் என்ன ? யார் ? என்ற கேள்விகள் எழுகின்றன.

பிரம்மம் என்பது கடவுள் என்று இலக்கணம் கூறப்பட்டது.

"கடவுள்" என்றால் யார் ? என்ன ? என்பதைப் பல நூல்கள் விளக்கத் தொடங்கின.

ஆகவே, மனிதன் "தீ" தனக்கு உதவியதைக்கண்டு "தீ"யைத் தொழுதான், அவ்வாறே சூரியன், சந்திரன், பூமி, வாயு, ஆகாயம். ஆனால் அவன் தான் பார்க்காத கடவுளைப் பிரம்மம் என்றும், பிரம்மம் உலகத்தைச் சிருஷ்டித்தது என்றும். கற்பனை செய்து, அதைத் தான் நம்புவது மட்டு மன்றிப் பிறர் நம்பும்படிச் செய்ததும், ஒரு குறிப்பிட்ட காலத்தின் தத்துவார்த்தப் போக்காகும்.

தன் வாழ்க்கைக்கு உதவியுள்ள பொருள்களுக்குத் தான் கண்ணால் கண்ட பொருள்களுக்கு மனிதன் கடவுள் என்ற பெயரைச் சூட்டினான்.

வேதங்களில் உள்ள கடவுள்கள் ஆரண்யக் கடவுள்கள் அல்ல. உதாரணமாக வேட்டையாடும் கடவுள்கள் வேதத்தில் இல்லை. வேதங்களுக்கு முன்னுள்ள கடவுள்கள் வேட்டையாடும் கடவுள்களாகவும், ஆரண் யங்களுடன் தொடர்புள்ளவர்களாகவும் உள்ளனர்.

சைவ வைணவ சமயக் கடவுளர்கள் வேதங்களுக்கு முன்னுள்ளவர்கள் ஆவர். இத்தெய்வங்களைத் திராவிட தெய்வங்கள் என்றும் கூறலாம். சிவன், திருமால், முருகன், காளி, ஐயப்பன் முதலிய தெய்வங்கள் திராவிட தெய்வங்களே. விஷ்ணு மாயையாக வந்து சிவனுக்குப் பெற்ற குழந்தையே ஐயப்பன் என்று கூறப்படு கின்றது.

ஆரியர்களின் வேதங்கள் சடங்குகள் நிரம்பிய கடவுள் வழிபாட்டைப் பேசுகின்றன.

உபநிஷதத்தில் சடங்குகளும் ஆரண்யத்தில் கடவுளைத் தொழுவதும், கலந்துள்ளன.

வேதகாலத்தில் கடவுளை வீடுகளில் தொழுவது என்பது ஏற்பட்ட பிறகுதான், கோயில்கள் நகரங்களிலும்,

கிராமங்களிலும் ஏற்பட்டன. பல புராணக் கதைகள் கடவுள் தாமாக வந்து கோயிலில் அமர்ந்தார் என்று கூறு வதை மக்கள் நம்பி வருகின்றனர்.

வேதக் கடவுள்கள் பெரும்பாலும் ஆண்கள். பிற் காலத்தில்தான் பெண் கடவுள்கள் ஏற்பட்டன. 'அதிதி' எல்லாக் கடவுள்களுக்கும் தாய். ஆனல் வேதக்கடவுள் களைத் தொழுவதுபோல் 'அதிதி'யைத் தொழுவதில்லை. 'சரஸ்வதி' முக்கியமானதோர் கடவுளாக வேதங்கள் கூறு கின்றன. ஆனல் இந்திராணிக்கு இந்த இடம் இல்லை.

வேத காலத்திற்குப் பிறகுதான் இந்து மதத்தில் பெண் தெய்வங்களுக்குச் சிறப்பு அளிக்கப்பட்டது.

லட்சுமியும். பூமாதேவியும் விஷ்ணுவின் மனைவிகள். பார்வதி சிவன் மனைவி, சரஸ்வதி பிரம்மாவின் மனைவி, மும்மூர்த்திகளும் முக்கியமாதலால், அவர்களின் மனைவியர் களும முக்கியத்துவம் பெற்றனர்.

பிளளையார்

பிள்ளையார் இந்திய உபகண்டத்தில் எல்லாப் பகுதி களிலும் கணபதி என்றும் விக்னேஸ்வரர் என்றும் இந்துக் களால் தொழப்படும்கடவுள். பிள்ளையார் பற்றிய கதையை விளக்க வேண்டியது அவசியம். இந்த உண்மையை உணர்ந்த பின் பிள்ளையார் கடவுள்தானு பிள்ளையார் பொம்மையை உடைத்ததினுல் பெரியார் அவர்கள் என்ன "அடாத" செயலைச் செய்துவிட்டார் என்பதைத் தெளிவாக உணர முடியும்.

(1) கணபதி

'கணபதி' என்ற கடவுளுக்கு இந்தப் பெயர் எப்படிச் சூட்டப்பட்டது?

'கணபதி' என்றால் மக்களின் தெய்வம் என்று பொருள்.

'கணபதி' ஆரம்பத்தில் கடவுளாகக் கருதப்படவில்லை. தனிநபர் சொத்துரிமை ஏற்பட்ட காலத்தில்தான் 'கணபதி' கடவுளாகக் கருதப்பட்டார். 'கணபதி' என்றால் 'கண'த்தின் தலைவன்—'இன'த்தின் தலைவன் 'அதாவது பழங்குடி மக்களின் தலைவன் என்பது பொருள்

ஆனால் 'சிவன்' பெயரும் கணபதி என்று சொல்லப் படுகிறது. 'பிரகஸ்'பதியும் கூட 'கணபதி' என்று அழைக்கப்படுகிறார். 'பிரகஸ்பதி' பொருள் முதல்வாதத்தைத் தொடங்கியவர்.

'கணபதி' பல பெயர்களால் அழைக்கப்பட்டார் என்று தத்துவ சாத்திரங்கள் கூறுகின்றன. 'லோகபந்து' 'லோக நாதன்' அதாவது "மக்கள் நண்பன்" 'மக்கள் காவலன்' என்றெல்லாம் 'கணபதி' அழைக்கப்பட்டுள்ளார்.

ஆனந்தகிரியின் 'சங்கர விஜயத்தில் கணபதியைத் தொழுதுவரும் பல இனங்களைக் குறிப்பிட்டுள்ளார். உச்சிஸ்ட கணபதியைத் தொழுது வந்த இனத்தை எடுத்துக் கொள்வோம். 'கணபதி' என்ற பெயர் 'கண'த் தலைவனுக்குச் சூட்டப்பட்டது. அவன் அந்த இனத்தின் நலனைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பும் அளிக்கப் பட்டது. எனவே 'கணபதி' என்றால் ஓர் இனத்தின், அல்லது ஒரு கூட்டத்தின் தலைவன் என்றுதான் முதலில் இருந்தது. காலப் போக்கில் 'இனத் தலைவன்' 'கணபதி' அல்லது 'கணேசன்' என்னும் கடவுள் ஆனான்.

'கணபதி' என்ற சொல்லை முதலில் உச்சரித்து ஒரு காரியத்தைதத தொடங்கினால், அக்காரியம் வெற்றி பெறும் என்ற கருத்து பிற்காலத்தில்தான் ஏற்பட்டது.

ஆதியில், அதாவது, கி. மு. 5ஆம் நூற்றுண்டில் 'கணபதி' என்ற சொல்லுக்கு 'ஆபத்து' 'கெடுதி' என்ற இலக்கணம் கொடுக்கப்பட்டது. 'கணபதி' என்பது அச்சத்தையும். பயங்கர நிலையையும்தான் ஏற்படுத்தியது.

கி. மு. 5ஆம் நூற்றுண்டில் மனித இன்பம் ஒரு குறு வட்டத்தில் இருந்தது; கஷ்டங்களும், துன்பங்களும் அதிக மாக இருந்தன; இவை அனைத்திற்கும் காரணம் 'கண பதி'யே என்று கருதப்பட்டு வந்தது.

பிற்காலத்தத்துவ நூல்கள் இதை வலியுறுத்துகின்றன. மனு சாத்திரத்தில் 'கணபதி' கொடியவன், 'அவனைத் தொழுகிறவர்களும் கொடியவர்களே' அவர்களை அருகாமை யில் சேர்க்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

காரணம் என்ன?

''கணபதி'' ''கணேசன்'' 'விக்நேஸ்ரவன்' தாழ்த்தப் பட்ட மக்களின் கடவுள்—எனவே அவன் தீண்டப்படாத வன் என்கிருர் மனு. சம்பு மஹாதேவன் பிராமணர் களின் கடவுள், மாதவன் க்ஷத்திரியர்களின் கடவுள். ஆனல் 'கணேசன்' 'கணபதி' சூத்திரர்கள், தாழ்த்தப்பட்ட வர்களின் கடவுள் என்கிருர் மனு.

கணேசன் இடையூறுகளையும், துன்பங்களையும் ஏற்படுத்தும் கடவுளாக இருந்த போதிலும், நாளடைவில் இடையூறுகளையும் துன்பங்களையும் நீக்கும் கடவுளாகத் தான் கருதப்படுகிருர். எனவே எந்தக் காரியத்தையும் தொடங்கும்போதும், கவிகள் பாட்டுகளை இயற்றத் தொடங்கும்போதும் 'நமோ கணேசாய நமோ விக்னேஸ் வராய' என்று கூறித் தொடங்குகின்றனர்.

கணபதிக்கு ஆதியில்இரு தும்பிக்கைகள் இருந்தனவாம்! பரசுராமனுடன் கணபதி போராடியபோது, பரசுராமன்

ஒரு கைக் கோடரியை வீசி எறிய கணபதியின் ஒரு தும்பிக்கை துண்டிக்கப்பட்டதாம்! அப்படியானல், பரசுராமனை எதிர்க்கக் கூடிய சக்தி விநாயகருக்கு இல்லையா என்ற கேள்வி எழும். விநாயகர் பரசுராமனை எதிர்த்துச் சுலபமாகத் தோற்கடித்திருக்க முடியும். ஆனால் பரசுராமன் உபயோகித்த கைக்கோடரி விநாயகரின் தந்தையின் யுத்தக் கோடரியாதலால், அதைக் கண்ட விநாயகர் தன் தகப்பன் கோடரிக்கு அபகீர்த்தி வரலாகாது என்ற காரணத்தால், தம்மைத்தாமே தடுத்துக் கொள்ளாமல் கோடரி தம் தும்பிக்கையைத் துண்டிக்க அனுமதித்தார் என்று புராணக்கதை கூறுகிறது.

இதன் பொருள் என்ன? பரசுராமன் பிராமணர்களின் பிரதிநிதி; அவர்களின் கேடயம்; பிராமணர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையை இப் புராணக்கதை சித்தரிக்கின்றது. பிராமணர்கள் தோல்வி அடையலாமா? பலசாலியான விநாயகர், பரசுராமனைத் தோற்கடிக்க முடியவில்லை என்றால் விவேகமுள்ள யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், ஆகவே விநாயகர் தம் தும்பிக்கையை வெட்ட விட்டார் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? எனவே மேற்கூறிய கைக்கோடரிக் கதை.

விநாயகர் ஆதியில் அம்மணமாகத்தான் இருந்தார். இன்றைக்கும் விநாயகக் கடவுளுக்கு எவ்வித நகைகளும் அணிவிப்பதில்லை. இவை அனைத்தும் விநாயகர் சாதாரண சூத்திரர் கடவுள் என்பதனை வலியுறுத்துகின்றன.

இட்சிங் என்ற சீனப் பிரயாணி இந்தியாவிற்கு வந்தபோது, துறவி மடங்கள் (Monastaries) சிலவற்றின் வாயிலில் கல்லில் செதுக்கப்பட்ட கடவுள் உருவம்

இருந்ததாகவும் அவ்வுருவத்தின் கையில் ஒரு பைநிறையத் தங்கம் இருந்ததாகவும் இக் கடவுளின் பெயர் மகாகாளா என்றும் கண்டு கூறுகிறார். இக்கடவுள் பிரபுக்களின், ஆளும் வர்க்கத்தின் கடவுளாகத்தான் இருந்திருக்க வேண்டும். இதற்கு நேர்முரணாக விக்னேஸ்வரர் ஏழைகளின் கடவுளாகக் காட்சி அளிக்கின்றார், ஆனால் ஸ்கந்த புராணத்திலும் கணேசபுராணத்திலும் கணபதி உபநிஷதத்திலும் விநாயகர் கடவுளின் அவதாரமாவும், அவரே கடவுளாகவும் கூறப்படுகிறது. கணபதி திடீரென்று அறிவின் சிகரமாகவும், கல்வியின் சிற்பியாகவும் சித்தரிக்கப் பட்டு எல்லோரின் கடவுளாகவும் உயர்த்தப்பட்டார். இந்தப் பதவியை வகிக்க உயர்ந்த தத்துவஞானியாக விநாயகர் விளங்கவேண்டுமல்லவா? எனவே கணேசகீதை இயற்றப்பட்டது. இதில் கணேசர் தத்துவஞானியாக விளங்குகிறார்.

கணேச கீதையை எழுதியவர் பகவத் கீதையை அப்படியே காப்பி அடித்துள்ளார். ஒரே ஒரு மாற்றம் தான், கிருஷ்ணன் என்ற சொல்லை நீக்கிவிட்டுக் கணேசன் என்று நிரப்பி அதைக் கணேசகீதை என்று வெளியிட்டார்.

(2) கணபதி

கணபதி அறிவாளர் என்று கருதப்பட்டது. ரிக்வேதத்தில் இதற்குச் சான்றுண்டு. அறிவு மூளைக்கும் கலைக்கும் சம்பந்தப்பட்டதால் மூளை அதிகம் இருக்க அதன் இருப்பிடமாகிய தலை பெரியதாக இருக்க வேண்டுமென்று யானைத் தலையைக் கணபதிக்குக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

புராணக் கதைகளில் கணபதியின் பிறப்பே பல்வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. எது உண்மை என்பதை

யாரும் கூறமுடியாது. ஆனால் ஒன்று தெளிவு. கற்பனையின் விளைவே கணபதி. கீழ்க்கண்ட பல்வேறு கதைகள் இதைத் தெளிவாக நிரூபிக்கின்றன.

கணபதி பெண்ணில்லாமல் ஆணுக்குப் பிறந்தவ ரென்றும், இதற்கு நேர்மாறாக ஆணில்லாமல் பெண்ணுக்குப் பிறந்தார் என்றும் கூறப்படுகின்றன. புராணக் கதையில் கணபதியின் பிறப்பு அசிங்கமாகவும் சித்தரிக்கப்பட் டுள்ளது. பார்வதி தன் உடல் அழுக்கை உருண்டையாக்கி விளையாடிக் கொண்டிருந்தாளாம்! அந்த உருண்டையின் மீது அவள் அன்பு சொரிய, அதற்கு உயிர் கொடுத்து அதைத் தன் மகன் என்று அழைத்தாளாம்!

மற்றொரு கதை கணபதியின் பிறப்பை வேறு வித மாகச் சித்தரிக்கின்றது. பார்வதி தன் உடல் அழுக்கைக் கழுவி அதைக் கங்கா நதியின் முகத்துவாரத்தில் உள்ள யானைத் தலை ராட்சசி மாலினியைக் குடிக்க வைத்தாளாம்! இதன் விளைவாக மாலினி கர்ப்பம் தரித்துப் பிறகு ஒரு குழந்தையைப் பெற்றாளாம்! அக்குழந்தையைப் பார்வதி எடுத்துச் சென்று விட்டாளாம்.

மேற்கூறிய கதைகள் எதுவும் கணபதிக்கு யானைத்தலை ஏன் வந்தது என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. பிரம்ம வைவர்த்த புராணத்தில் ஒரு கதை கூறப்பட்டுள்ளது. கணபதி பிறந்த நேரத்தில் சனிப்பார்வை தோஷத்தால் தலை யில்லாமல் பிறந்தாராம்! கணபதியின் தாய் தன் குழந்தைக் குத் தலை இல்லையே யென்று தேம்பித் தேம்பி அழ, விஷ்ணு பகவான் ஒரு யானைத் தலையை ஒட்ட வைத்தாராம்! ஆனால் ஸ்கந்த புராணம் இதை மறுக்கின்றது. கணபதி தன் தாயின் வயிற்றில் இருந்தபோது சிந்தூரா என்ற ராட்சசி வயிற்றில் புகுந்து குழந்தையின் தலையைக் கடித் துத் தின்றுவிட்டாளாம். பிறந்த குழந்தைக்குத் தலை யில்லாமல் போகவே, அக் குழந்தை யானைத் தலைகொண்ட

கஜாசூரன் என்ற ராட்சசன் தலையை வெட்டித் தன் கழுத்தில் ஒட்ட வைத்துக் கொண்டதாம்! தலையும் கண்ணும் இல்லாத இக் குழந்தை தனக்குத் தலை இல்லை என்று எங்ஙனம் உணர்ந்தது, கஜாசூரனின் யானைத் தலையை எப்படி வெட்டித் தன் கழுத்தில் ஒட்டவைத்துக் கொண்டதென்பதை ஸ்கந்த புராணம் தெளிவுபடுத்தவில்லை.

சுப்ரபேதஆகமம் என்ற நூல் கூறுவதாவது: சிவனும் பார்வதியும் யானைகளைப்போல் சம்போகம் செய்தார்களாம். இதன் விளைவாகப் பிறந்தது யானைத் தலைக் குழந்தையாம்!

கணபதி ராட்சசி மாலினிக்குப் பிறந்த குழந்தை என்றோ, ராட்சசன் கஜாசூரன் தலையைக் கொண்டதென்றோ கூறுவதின் பொருள் அவர் ஆதிவாசிகளாகிய 'ராட்சச' 'ராட்ச்சி' குலத்தில் பிறந்தவர் என்பதே.

வேறு ஒரு கதையும் உண்டு. சிவன் வசித்து வந்த சோமநாத் என்ற மலைப்பிரதேசத்தில் சூத்திரர்களும் அவர்களது பெண்களும் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்து விட்டார்களாம்! இதைக் கண்டு பீதி கொண்ட தெய்வீகப் பெருங்குடி மக்கள் இந்திரன் தலைமையில் சிவனிடம் முறையிட்டனராம்! ஆனால் சிவன் இதைத் தடுக்க இசையவில்லையாம்! எனவே, இவர்கள் பார்வதியை அணுகினார்களாம்! பார்வதி தன் அழுக்கை எடுத்துச் சூத்திரர்களை அழிக்கக் கணபதியைச் சிருஷ்டித்தாளாம்! இது மனுஸ்மிருதிக்கு நேர் முரணானது. மனு கூறுவதாவது "கணபதி சூத்திரர்களின் கடவுள். அவர்கள் பெண்களுக்குச் சரிசமத்துவ உரிமை அளித்து வந்தனர்."

எனவே ஏற்கெனவே நாம் கூறியுள்ளதுபோல் கணபதி மக்களின் தலைவனாக 'கண'த்தின் பதியாக விளங்கினாரே

தவிர சூத்திரர்களை அழிக்கும் கடவுளாக இல்லை. எனினும் கணபதி இரு உடல்களைக் கொண்டவன், இரு பிறவி என்றும் சொல்லலாம். அதாவது ஒரு காலத்தில் கணபதி மக்களின் தலைவன், பிறகு மக்களைத் துன்புறுத்தும் சக்தியையும் பெற்றவன் என்பதேயாகும்.

கணபதி எப்படிக் கடவுளானார் என்பதைச் சற்றுக் கவனிப்போம்.

வேத காலங்களில் கணபதிக்கு யானைத்தலையோ பெரிய தொந்தியோ சுண்டெலி வாகனமோ கிடையாது. பல கணபதிகள் சிருஷ்டிக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். இதை யாக்ஞவல்கியர் என்பவர் தெளிவு படுத்துகிறார். மகா பாரதத்திலும் இதைக் காணலாம்.

> புராதன கம்யூனிச சமுதாய அமைப்பில் கணபதி தோன்றுகிறார் என்பதுதான் உண்மை. அரசு என்று ஏற்பட்டதும் கணத் தலைவன் அவமதிக்கப்பட்டான். மனுஸ்மிருதியிலும் யாக்ஞவல்கிய ஸ்மிருதியிலும் கணபதி இழிவுபடுத்தப் படுகிறார். காரணம் இவ்விரு ஸ்மிருதிகளும் அரசனின் ஆதிக்கத்தை வலியுறுத்துகின்றன. கண அல்லது இனத் தலைவனுக்கு இடமில்லை.

ஆனால், காலப்போக்கில் மக்களின் ஆதரவு தேவைப் பட்டது. எனவே கணபதிக்கு ஒரு கடவுள் நிலை அளிக்கப் பட்டது. பற்பல கணபதிகள் மறைந்தனர். ஒரே கணபதி லம்போதரன், ஏகதந்தன், ஹஸ்திமுகன், என்ற பல பெயர்களுடன் கடவுளாக்கப்பட்டான். ராஜ வம்சம் ஒன்று யானைவம்சம் என்றும் அழைக்கப்பட்டது. இக்காலத்தில்தான் கணபதிக்கு யானைத்தலை அளிக்கப் பட்டது. இந்த யானை வம்சம் ஒரு காலத்தில் இந்தியாவில்

தன்னுடைய சாம்ராஜ்யத்தையும் ஏற்படுத்தி யிருக்கலா மென்று இந்திய சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள்.

(3) கணபதி

வேதகால ஆதிமக்கள் இனக்குழுக்கள் (Tribes) கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவந்தனர். கணம் என்பதின் பொருள் இனக்கூட்டமேயாகும். கணத்தின்பதி (தலைவன்) கணபதி யானான்.

ரிக்வேதத்தின் கணபதிக்கு யானைத்தலையில்லை. கணத்தின் பதி ஆனதினால் அதன் அறிவைப்பற்றியும் புகழைப் பற்றியும்தான் ரிக்வேதம் கூறுகின்றது. இந்திய தத்துவ ஞானப் புலவர் பண்டார்கர் வேத இலக்கியத்தில் காணும் கணத்தைப் பற்றியும் கணபதியைப் பற்றியும் பின்வருமாறு கூறுகிறார்.

"ருத்ரனுக்கு மருத் என்ற கூட்டம் இருந்தது. இக்கூட்டம் கணம் என்று அழைக்கப்பட்டது. இக்கணத்தின் தலைவன் கணபதி. ஆதிருத்ரனின் பல்வேறு குணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு வடிவங்களை ஒன்று திரட்டி ருத்திரன் என்ற பெயர் எவ்வாறு பொதுமைப் படுத்தப்பட்டதோ, அவ்வாறே கணபதி என்ற பெயர் கண அல்லது குழுக்களின் தலைவர்களைப் பொதுமைப் படுத்திற்று."

இதற்கு நேர்மாறாகச் சில தத்துவஞானப் புலவர்கள் கணபதி ஆரியன் அல்லவென்றும், ஆரியரல்லாத பெருங்கூட்டத்தினர் மனதைத் திருப்திப்படுத்தக் கடவுள்களின் வரிசையில் கணபதி சேர்க்கப்பட்டார் என்றும் கூறுகின்றனர்.

வேதகாலக் கவிஞர்கள் கண—இனக்கூட்டத்தின் புகழைப் போற்றிப் பாடினர். காரணம், அவர்கள் வேத காலத்தில் அவ்வினக் கூட்டத்தின் ஒரு பகுதியாக வாழ்ந்து வந்தனர். வேதபிற்கால இலக்கியங்களோ கண சமுதா யத்தை, அதாவது புராதன கம்யூனிஸ சமுதாயத்தைக் குறைகூறி வந்தது மட்டுமன்றி ஏளனமும் செய்து வந்தன.

இவ்வேத பிற்கால இலக்கியங்கள் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் தோன்றியவையேயாகும்.

மகாபாரதம் வேத பிற்காலப் பெருங்காப்பியமாகும். மகாபாரதத்தில் கீழ்க்கண்ட சம்பவம் கூறப்படுகிறது. உத்தலகா என்ற மாபெரும் ரிஷி ஒருவர் இருந்தார். அவர் மகன் சுவதகேது என்பவன் கடுந்துறவி. ஒரு நாள் சுவதகேது வின் தந்தை முன் வேறு ஒரு பிராமணன் வந்து, சுவதகேது வின் தாயின் கையைப் பிடித்து, நாம் போவோம் வா என்று அழைத்தான். தன் தாயின் கையைப் பிடித்து வேறு ஒருவன் அழைத்துச்செல்வதைக் கண்ட மகன் பலாத்காரமாகத்தான் அழைத்துச் செல்லுகிருன் என்று நினைத்துக் கோபாவேசங் கொண்டான். இதைக்கண்ட அவன் தந்தை தன் மகனைப் பார்த்து, ‘மகனே’ கோபங் கொள்ளாதே, இது பண்டைக் காலப் பழக்கமாகும், எல்லாவகை முறை மாதர்களும் இவ்வுலகில் பரிபூரண சுதந்திரம் பெற்றவர்கள். மகனே! இவ்விஷயத்தில் ஆண்களே, பசுக்கள்போல நடந்து கொள்கிருர்கள்” என்ருர்.

ரிஷியின் மகன் சுவதகேது இப்பழக்கத்தை நிராகரித்து இன்று ஆண்களுக்கும் பெண்களும் இடையே உள்ள நடை முறையை ஏற்படுத்தினுன்.

பிற்காலப் பிராமணர்கள் கணத்தை வெறுத்தபோதி லும் அவர்களின் முன்னோர்கள் அந்தச் சமுதாய அமைப்

யில்தான் முன்னொருகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும், கணத்தையும் (இனக்குழு) கணபதியையும் இவர்கள் வெறுத்தே வந்துள்ளனர்.

புராதன இனக்குழுக்கள் (கண) உடைந்து சிதறி புதிய அரசுகள் ஏற்பட்டன. இயல்பாகவே, நிலப்பிரபுத்துவ சமுதாயம், இனக்குழுவாகிய கணத்தையும், அதன் தலைவனாகிய கணபதியையும் இழிவு படுத்திற்று.

புராதன கம்யூனிஸ சமுதாயத்தில் ஜாதி என்பதற்கே இடமில்லை. மனித வர்க்க மனைத்தும் ஒரே ஜாதி. ஜாதி என்பது பிற்காலத்தில் தான் தோன்றுகின்றது. வேதங்கள் தான் ஜாதிகளை வலியுறுத்துகின்றன. ஜாதிகள் தொழிலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன. விவசாயி சூத்திரன், மீன் பிடிப்பவன் மீனவன், செருப்புத் தைப்பவன் சக்கிலி, துணி துவைப்பவன் வண்ணான், சவரம் செய்பவன் அம்பட்டன், எண்ணெய் ஆட்டுபவன் வாணியன், கோவிலில் (கடவுள் முன்) நடனமாடுபவள் தேவதாசி என்றெல்லாம் தொழிலின் அடிப்படையில் எண்ணற்ற ஜாதிகளை ஏற்படுத்தியது மனிதனே.

ஆதிவேதங்கள் அதாவது 1500-1000 கி. முக்கு முன் மூன்று வருணங்களைத்தான் (ஜாதிகள்) கூறின.

நிலப்பிரபுத்வம் ஏற்படவே பெரும்பான்மையானவர் விவசாய வேலையைச் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டதும் நான்காவது ஜாதியான சூத்திர ஜாதி சிருஷ்டிக்கப்படுகிறது.

எஸ். ஏ. டாங்கே அவருடைய பிரசித்தி பெற்ற அரிய நூலாகிய 'சரித்திரத்தின் உந்து சக்திகள்' என்பதில் பின்வருமாறு கூறுகிறார்.

"புராதன ஆரியர்களின் உற்பத்திக் கருவிகளும், உற்பத்திச் சக்திகளும் வேத சம்கிதைகளில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளன, வாழ்வதற்காக அவர்கள் நடத்திய கடுமையான போராட்டம், கூட்டு உற்பத்திமுறை, கூட்டு உபயோகமுறை, இவையனைத்தும் முழுமையாக யாக கர்மத்தில் விளக்கப்பட்டுள்ளன.

"ஆரம்ப கட்டத்தில் நெருப்பைக்கூட அவர்கள் கண்டு பிடிக்கவில்லை. நெருப்பைக் கண்டுபிடித்த முறையும், அதை அணையாமல் வைத்துக்கொள்ளும் முறையும் அவர்களின் உற்பத்திச் சக்திகளில் முதற்பெரியதோர் புரட்சி மாற்றத்தை ஏற்படுத்தின. இரண்டாவது பெரியதோர் பாய்ச்சல், பிராணிகளை வசமாக்கி வளர்க்கக் கண்டு பிடித்தது. மூன்றாவது உழுது பயிரிடக் கண்டுபிடித்தது. நான்காவது முதல்நிலை (கரடுமுரடான) கைத் தொழில் கருவிகளைக் கண்டுபிடித்தது. இதில் யுத்தத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஆயுதங்களைக் கண்டுபிடித்ததும் உள்ளடங்கியுள்ளது. பிறகு உலோகங்களை உருக்கக் கண்டு பிடித்தது. இது ஆரிய நாகரிகத்தைத் தொலைதூரம் முன்னேற்றிச் சென்றது.

"உற்பத்திச் சக்திகளும் உற்பத்தியும் வளர வளர ஆரியர்கள் அவர்களின் ஆரம்பகாலப் புராதனக் கூட்டு வாழ்க்கையைப் பின்விட்டுச் சென்றனர். தனிச்சொத்தை வளர்த்தனர்; பணக்காரர் ஏழை என்றவித்தியாசங்கள் தோன்றின. புராதன கம்யூனிச சமூதாயம் நிலைத்திருக்க ஆதாரமில்லாமற் போயிற்று. பொது உழைப்பு அடிப்படை மீதிருந்த சமூக நிலைப்பொது உற்பத்தியும் பொது உபயோகமாகியயக்ஞமுறையும் ஜனசங்கங்களும் மறைந்தன.

"ஆரம்பத்தில் உற்பத்திக் கருவிகள் எவ்வளவு சர்வ சாதாரணமாக இருந்தன என்பதனை ஏழு நாட்கள்

உழைத்தால் மூன்று நாட்களுக்குக் கூட உண்ண உணவு கிடைப்பது கடினமாயிற்று என்பது தெளிவுபடுத்திற்று. கருவிகள் வளர்ச்சியின் மிகக் கீழ்ப் படியில் இருந்ததனுல் மனித உழைப்பினுல் உபரி உற்பத்தி ஏற்படவில்லை.

"படிப்படியாக வேதகால மனிதன் அறிவையும் திறனே யும் பெற்றுக் கருவிகளை விருத்தி செய்து வளர்த்தான், ஆரிய மனிதனின் முன்னேற்றப் பாதையைக் கண்டு பிடிக்கச் சரித்திராசிரியர்களுக்கு யக்ஞ விதிகள் போது மான விவரங்களைக் கொடுக்கின்றன. ஆதிகாலத்தில் கூட்டு உழைப்பு, கூட்டு உபயோகம், யக்ஞகர்மாவின் சத்ரா, கிருது வடிவங்கள் இவை பொருள்களை வினியோகம் செய்யும் முறையையும் எடுத்துக் காட்டுகின்றன, கருவிகள், திறமை, பொருள்கள் வளர சத்ரா, கிருது என்பவை மறைகின்றன. ஒரு பரந்த தொழிலாளர் பகுதி சமூகத்தில் தோன்றிப் புதிய உற்பத்திச் சக்திகளுக்கு உகந்த வகையில் இப்பொழுது மிச்சப்படுமளவு உற்பத்தி செய்து, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மற்றக் கம்யூன்களின் பொருள் களுடன் பண்டமாற்றம் செய்து கொண்டது.

"பல்வேறு கண கோத்திரங்கள் செழித்து வளர்ந்து பிரவராக்களாகச் சேர்ந்து பின்னர் அவை எங்கும் கணசங்-கங்களாயின.

முதலாவது அடிப்படையான உழைப்பின் சமூகப் பிரிவினை, மிச்சமாகும்படி உற்பத்திச் செய்யும் திறமையி லிருந்து எழுந்தது. இங்ஙனம் உழைப்போர் இருக்க, உழையாதார் அதன் பலனில் வாழ்வதை நான்கு வருணப் பிரிவினையாகப் புருஷசுக்தம் அறிவித்தது. யுத்தத்தில் வென்றோர், யுத்தக் கைதிகளைப் புருஷமேதாவில் கொல் வதை இனிச் செய்யாமல், அவர்கள் இப்பொழுது, சூத்திரர் களாக்கப்பட்டு, பழைய மூன்று வருண நிறுவனம், இதிலிருந்து நான்கு வருண நிறுவனமானது."

கணபதி தோன்றிய கதையும் வருணங்கள் (சாதிகள்) தோன்றிய முறையும் இவையே!

இவற்றை நன்கு உணர்ந்த பெரியார் மக்கள் மூடநம்பிக்கையை அகற்றப் பிள்ளையார் என்ற மண் பொம்மையை உடைப்பேன் என்று அறிவித்து, அதை நடுத்தெருவில் உடைத்தார்.

கடவுள் என்பதைக் கற்பனை செய்து அதற்குப் பற்பல பெயர்களையும், உருவங்களையும் கொடுப்பதல்லாமல், மனிதன் செய்யக்கூடிய "அடாத" செயல்கள் என்று கருதப்படும் அனைத்தையும் கடவுள் "திருவிளையாடல்கள்" என்று போற்றினால் மனித பகுத்தறிவிற்கு இது சிறப்பாகுமா? இந்த உண்மையை விளக்கிச் சொன்ன பெரியாரைக் கண்டபடி அவதூறு செய்துவந்த கயவர்கள், தங்கள் போலி வாழ்க்கையை மூடிமறைக்கவும், ஆஷாடபூதிகளாகவும் சிவக்கொழுந்துகளாகவும், விஷ்ணு அவதாரங்களாகவும் நடித்தனர் என்றல்லவா பொருளாகும்?

9. பெரியாரும் நாத்திகமும்

நாத்திகம் என்றால், "பொதுவாகஇல்லை என்பவர் நாஸ்திகர் என்று மட்டும் பாணினி சூத்திரத்தில் குறிக்கப்படினும், இதன் உரையாகிய பதஞ்சலி மகாபாஷ்யத்திலும் மற்றும் பண்டைக் காலத்துப் பல வடமொழி நூல்களிலும் நாஸ்திகர் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் காணப்படுகின்றன; (1) மறுபிறப்பு கிடையாது எனக் கொள்பவர் (2) கடவுள் இல்லை எனக்கொள்பவர் (3) சுருதி, ஸ்மிருதி முதலியவற்றின் பிரமாணத் தன்மையை மறுப்பவர்.

"ஆயினும் வேதம் பிரமாணமல்ல என்று கூறும் பௌத்த, ஜைனமதங்களின் வளர்ச்சிக்குப் பிறகே மேற்

கூறிய மூன்ருவது பொருள் ஏற்பட்டிருக்கலாமென்பது ஆராய்ச்சிக்காரர்களின் கருத்து.

"பாரததேசத்தில் தோன்றிய பல மதங்களுள் சார்வாகம், சௌத்திராந்திகம், வைபாஷிகம், யோகாசாரம் மாத்யமிகம், யோகம், மீமாம்சகம், வேதாந்தம் என்னும் பன்னிரண்டு மதங்களே பிரசித்தமாக உள்ளவை, அவற்றுள் சார்வாகம் ஒன்றே மேற்கூறிய மூன்று பொருள் களும் நன்கு பொருந்திய நாஸ்திக மதமாகும்.

"ஈசுவரன் இல்லையென்னும் இரண்டாவது பொருளில் நாஸ்திகம் என்பதைக் கொண்டால் சார்வாகம், சாங்கியம், மீமாம்சகம், பௌத்தம், ஜைனம் ஆகியவைக்கு அப்பெயர் பொருந்தும். ஆனல் அவற்றுள் சாங்கியமும் மீமாம்சகமும் ஈசுவரன் இல்லை என்று நேரடியாகவாதம் செய்வதில்லை.

"வேதங்கள் பிரமாணமல்ல என்னும் மூன்ருவது பொருளில் நாஸ்திகம் என்பது மேற்கூறியவற்றுள் முதல் ஆறு மதங்களுக்கும் பொருந்தும். மற்ற ஆறுமதங்களும் ஆஸ்திகம் என்று கூறப்பட்டுள்ளன. ஆகவே மேற்கூறிய பன்னிரண்டு மதங்களுள் சார்வாகம் ஒன்றே முழு நாஸ்திகம், மற்றவை ஏதேனும் ஒரு வகையில் ஆஸ்திகமும் ஒருவகையில் நாஸ்திகமுமாகும்." என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது. [தொகுதி ஆறு. பக்கம் 431-432]

நாத்திகத்தைப்பற்றி ஒரு நாத்திகரே கலைக்களஞ்சியத்தில் எழுதி இருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும். நாத்திகத்தைப் பற்றிப் பெரியார் ஈ.வே.ரா. அவர்களை எழுதும்படி வேண்டிக் கொண்டிருந்தால், பெரியார் மிக நன்ருக உள்ளதை உள்ளபடியே எழுதித் தந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆகவே, மேற்கூறிய நாத்திக விளக்கம் பயன்தரக் கூடியதாகவோ, தெளிவாகவோ இல்லை.

எனவே, நாத்திகத்தை இங்குச் சற்று விளக்குவோம்.

ஆன்மா என்பதோ, கடவுள் என்பதோ, இறந்தபின் மறு பிறப்பு என்பதோ இல்லை என்ற நோக்கு முறையையே நாத்திகம் என்று கூறலாம். ஆனால் இத்துடன் நாத்திகம் நிற்பதில்லை; சமயம் எப்படி ஏற்பட்டது, அது தோன்றுவதற்குக் காரணம் என்ன, சமயச்சார்பு வரட்டுத் தத்துவங்கள் எல்வாறு விஞ்ஞான அடிப்படையில் தவறானவை என்பதை எடுத்துக் காட்டும் சமயத்திலேயே, சமுதாயக் கொடுமைகளுக்குச் சமயம் எப்படிக் காரணம் ஆகும். சமயச்சார்பு நம்பிக்கைகளை அறவே ஒழிப்பது எப்படி என்பதனையும் எடுத்துக் காட்டுவதே நாத்திகமாகும்.

விஞ்ஞான அறிவு வளர வளர நாத்திகம் தோன்றவும், வளரவும் ஆரம்பித்தது. அறிவு வளருவதற்கு நாத்திகம் ஒரு போராடும் கருவியாகவும், சுரண்டும் வர்க்கத்தின் தத்துவத்தை எதிர்த்துப் போராடும் சக்தியாகவும், சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்துப்போராடும் சக்தியாகவும் காட்சி அளிக்கின்றது. நாத்திகத்தின் தத்துவார்த்த அடிப்படை பொருள் முதல்வாதமாகும். நாத்திகம் தங்குதடை இல்லாமலோ, குறைபாடுகளில்லாமலோ வளரவில்லை. அந்தந்தக் காலகட்டத்தில் குறிப்பிட்ட சமுதாய, பொருளாதார நிலைமைகள் இருந்ததை யொட்டித்தான் நாத்திக வளர்ச்சியும், அதன் குறைபாடுகளும் இருந்தன, விஞ்ஞான வளர்ச்சியும், பொருள் முதல்வாதத் தத்துவமும் வளர வளர நாத்திகம் வர்க்கப் போராட்டத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டது. நாத்திகமின்றி வர்க்கப் போராட்டம் என்பதில்லை.

சமய எதிர்ப்பின்றி வர்க்கப் போராட்டம் வெற்றிபெற முடியாது. அடிமைச் சமுதாயமுறை காலத்தில் நாத்திகம் தத்துவார்த்த வடிவத்தை முதன் முதலாக எடுத்தது.

பண்டைக்கால ஐரோப்பிய தத்துவ ஞானிகளாகிய ஹெராகிளிடஸ், டிமொகிரிடஸ், எபிகூரஸ், ஜினோபேன்ஸ் முதலியவர்களின் நூல்களில் ஏராளமான நாத்திகக் கருத்துக்களைப் பார்க்கலாம்; ஆனால், அவர்கள் சமயச் சடங்குகளை எதிர்த்தனரே ஒழிய, கடவுள் இல்லை என்று கூறவில்லை,

நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில், பூர்ஷ்வா நாத்திகம், அந்த அமைப்பை உடைக்கப் பெரிதும் பயன் பட்டது. ஆனால், பூர்ஷ்வா நாத்திகம் முன்னுக்குப் பின் முரண்பட்டதாகவும், பொதுமக்களுக்கு உகந்த தத்துவ மாக இருப்பதற்குப் பதிலாக ஒரு சிறு கூட்டத்தாரின் தத்துவ மாகவும், ஆக்கப்பட்டது.

ரஷ்யப் புரட்சியின் ஜனநாயகவாதிகள் தீவிர நாத்தி கர்கள். ரஷ்யப்புரட்சியின் வெற்றிக்கு நாத்திகம் இன்றிய மையாத தாயிற்று. மார்க்சிய நாத்திகம், கடவுளை மறுப்ப துடன் மூடப்பழக்க வழக்கங்களையும், சமயச் சடங்குகளை யும் கடுமையாக எதிர்ப்பதுடன், உண்மை என்ன என்ப தனைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. சமயமும் கடவுள் நம்பிக்கையும் புதிய சோஷலிஸ்டு சமுதாய அமைப்பில் அறவே இராது. அத்தவறான கருத்துகளுக்குப் பொருளா தார அமைப்பே காரணம். பொருளாதார அமைப்பை மாற்றினால் தவறான கருத்துகள்—கடவுள், சமயம் முதலியன—கடிந்தொழியும் என்பதே.

சோவியத் ரஷ்ய நாட்டில் இந்த உண்மை நிரூபிக்கப் பட்டு விட்டது. மூடநம்பிக்கைகள் ஒழிந்து, விஞ்ஞான நாத்திகக் கண்ணோட்டத்துடன் அம்மக்கள் இன்று தொடர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த உண்மையைப் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் நன்கு உணர்ந்தவர்.

இரண்டாம் பாகம்

இந்திய தத்துவத்தில் நாத்திக மரபு

[சிந்தனையைத் தூண்டிய செம்மல்]

1. பெரியாரும் இந்திய தத்துவ ஞானமும்

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் இந்திய தத்துவ ஞானக் கடலின் கரை கண்டவர் என்றே கூறவேண்டும்.

அவர் வெறும் நாத்திகர் மட்டுமல்ல. பொருள்முதல் வாதத் தத்துவம்தான் பகுத்தறிவுக்கு உகந்தது, ஏனைய தத்துவங்கள் மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை என்பதை அவர் வாழ்நாள் முழுவதும் கூறியும், எழுதியும் வந்துள்ளார்.

இந்திய தத்துவ ஞானத்திற்கு மூலங்கள் வேதங்களும், உபநிஷதங்களுமே. இராமாயணமும், மகாபாரதமும், கீதையும் புராணக் கதைகளே தவிர, சரித்திர பூர்வமாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் அல்ல.

ஆகவே, இந்திய தத்துவ ஞான மூலங்களை அலசிப் பார்ப்பது நாத்திகத்தின் கடமையாகும்; பகுத்தறிவுக்கு இன்றியமையாதது.

ஆகவே, இந்திய தத்துவ ஞானத்தின் மூலங்களாகிய வேதங்களை இங்குச் சற்று விவரிப்போம்.

2. வேதங்களும்—பகுத்தறிவும்

“வேதம்” என்பதற்குப் பொருள் ‘அறிவு’ என்பதாகும். வைதீகர்கள் ‘வேதம்’ என்றால் ‘தெய்வவாக்கு’ ‘ஈசன் அருளிய அறிவு’ என்று கூறுவார்கள்.

கலைக்களஞ்சியம் தரும் விளக்கம் பின்வருமாறு:

"வேதம் ;-சமஸ்கிருத மொழியில் உள்ள நூல்களில் இது முதல் நூல். மனிதனின் அறிவிற்கு எட்டாத உண்மைகளை உணர்த்துவதால் வேதம் என்று இதற்குப் பெயர். உயர்ந்த தத்துவங்களை மறைமுகமாக விளக்குவதால் சந்தஸ், மறை என்று வழங்கப்படுகிறது. எழுதப்படாமல் காதாலேயே கேட்கப்பட்டு வந்ததால் சுருதி (கேள்வி, எழுதாக் கற்பு, எழுதாக் கிளவி) என்று சொல்லப்படுகிறது.

"வேதத்தின் உருவம் : வேதம், மந்திரம், பிரமாணம் என்று இருவகையுள்ளது, மந்திரம், கடவுளையோ, கடவுளுக்காகச் செய்யப்படும் வேள்விகள் சம்பந்தப்படும் சாதனங்களையோ துதித்து, மனிதன் விருப்பங்களை வெளியிட ஏற்பட்டது. மந்திரம் ரிக், யஜுர், சாமம், என்று மூன்று பிரிவுடையது. இவற்றுள் ரிக் செய்யுள் நடையிலும், யஜுர் வசன நடையிலும் அமைந்தவை. சாமம் இசை ஒலிக்கு ஏற்ப ரிக்குகளைப் பிரித்தும், சில ஸ்தோபங்களைச் (அசைகளை) சேர்த்தும் கானம் செய்ய ஏற்பட்டது யஜுர் மந்திரங்கள் வேள்விகளைச் செய்வதற்காகவே ஏற்பட்டவை. மந்திரங்களை விளக்க ஏற்பட்டது பிராமணம். இது, விதி அருத்த வாதம் என இரு கூறுக நிற்பது. விதி, மந்திரங்களால் செய்ய வேண்டிய கன்மாக்களை விதிப்பது. நிஷேதமும் (தடுப்பதும்) இதைச் சேர்ந்ததே. அருத்த வாதம் விதிக்கப்பட்டதைத் துதிக்கவும், தடுக்கப்பட்டதை நிந்தித்துக் கூறவும் ஏற்பட்டது. சில இடங்களில் உதாரணக் கதைகள் மூலம்இது செய்யப்படுகிறது.

"நான்கு வேதங்கள் : மந்திர, பிரமாணங்கள் கணக்கற்றவை. வியாசர் இவைகளை நான்கு வேதங்

களாக வகுத்தார். ரிக் யஜுர் சாம அதர்வ வேதங்கள் என்பவை இவைகளின் பெயர்கள். ரிக்குகளையும். அதன் பிரமாணங்களையும் கொண்டது ரிக்வேதம். யஜுஸ்களையும் அதன் பிரமாணங்களையும் கொண்டது யஜுர் வேதம. சாமங்களையும், அதன் பிராமணங்களையும் கொண்டது சாமவேதம். வியாதி நிவர்த்தி, மனோவசீகரணம், துஷ்டக்கிரக வாதை நிவர்த்தி இவைகளைத் தெரிவிக்கும் பெரும்பான்மையான ரிக்குகளைக் கொண்டு அதர்வவேதம் அமைக்கப்பட்டுள்ளது.

"நான்காகப் பிரிப்பதற்கு வேள்வித் தத்துவமும் காரணம். வேள்விகளில் முக்கிய ரித்விகுக்களாக (எஜமானனுக்காக வேள்வியை நடத்துபவர்கள்) உள்ளவர்கள். அத்வர்யு வேள்வியை முழுவதும் நடத்துபவன். ஹோதா கடவுளைத் துதிப்பவன். உத்காதா கானம் செய்துகடவுளைத் துதிப்பவன். தவறுதல் ஏற்படாதிருக்க மேற்பார்வையாளனாக ஏற்பட்டவன் பிரமன். அத்வர்யுக்கான மந்திர பிராமணங்கள் யஜுர் வேதத்திலும், ஹோதாவுக்கான மந்திர பிராமணங்கள் ரிக்வேதத்திலும், உத்காதாவுக்கான மந்திர பிராமணங்கள் சாமவேதத்திலும், பிரமனுக்கான மந்திர பிராமணங்கள் அதர்வவேதத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் யஜுர் வேதத்திலும், அதர்வவேதத்திலும் பல ரிக்குகள் கலந்துள்ளன. வியாசர் இந் நான்கு வேதங்களை நான்கு சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். சிஷ்யர்கள் அவர்களின் வேதத்தைப் பல சாகை (கிளை)களாகச் செய்து, தங்கள் சிஷ்யர்களுக்கு உபதேசித்தனர். அதனால் அவர்களின் பெயரால் அந்தந்தச் சாகைகள் வழங்கப்படுகின்றன. சாகைகளில் மந்திர, பிராமணங்கள் வேறிடத்திலும் இருக்கின்றன. கிருஷ்ண யஜுர் வேதத்தில் மட்டும் சம்ஹிதையிலேயே பிராமணம்

சேர்ந்திருக்கிறது. தனிச் சக்தி வாய்ந்ததாகக் கருதப் படும் மந்திரங்களையும் பிராமணங்களையும் அந்தந்த வேதங்களில் தனிப்படுத்தி இருக்கிறார்கள்; இவை களுக்கு ஆரண்யகம் என்று பெயர். உபநிஷத்துகள் இதைச் சேர்ந்தவைகளே. வேதாந்த உண்மைகளை நேருக்கு நேராகத் தெரிவிக்கும் மந்திரப் பிராமணங் களே உபநிஷத்துக்கள். பாணினி வியாகரணத்திற்கு பாஷ்யம் எழுதிய பதஞ்சலி ரிக் வேதத்திற்கு 21 கிளை களும், யஜுர் வேதத்திற்கு 101 கிளைகளும், சாம வேதத்திற்கு 1,000 கிளைகளும், அதர்வ வேதத்துக்கு 9 கிளைகளும் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

"ரிக் வேத சாகைகளில் சாகலம், பாஷ்கலம் என்ற இரு சாகைகளே உள்ளன. இங்கு சம்ஹிதையில் 1028 சூக் தங்கள், 10,552ரிக்குகள் இருக்கின்றன. பலரிக்குகள் கொண்டது சூக்தம். சூக்தங்கள் பத்து மண்டலங்களில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ரிக்குக்கும் ரிஷி சந்தஸ் உண்டு. ரிஷி மந்திர கர்த்தா. இவர்கள் பலர். இவர் களிடையில் பெண்களும் சேர்ந்திருப்பது குறிப்பிடத் தக்கது. ரிக்குகளில் 20 வகையான சந்தஸ் (விருத்தம்) காணப்படுகின்றன. பெரும்பான்மை யானவை (6700) காயத்திரி, திருஷ்டுப், சந்தஸ் உள்ளவை. ரிக்குகள் அந்தந்த ரிஷிகளிடமும், அவர்களுடைய சந்ததிகளிடமும் இருந்து வந்ததால் 2 முதல் 7 வரை கோத்திர மண்டலங்கள் என்று வழங்கப்படுகின்றன. 9ஆவது மண்டலம் முழுவதும் பரிசுத்த சோமரசத்தையே சொல்கின்றது. இதற்குப் பலமான மண்டலம் என்று பெயர். இங்கு 3,363 ரிக்குகள் இந்திரனையும், 2,483 ரிக்குகள் அக்கினி யையும், 1,261 ரிக்குகள் சோமனையும் சொல் கின்றன. ருத்திரனையும் விஷ்ணுவையும் சில ரிக்குகள்

சொல்லுகின்றன. வருணனையின் எல்லையை உஷஸ் ஸூக்தங்களில் காண்கிறோம்.

“உலக இலக்கியங்களுள் ரிக்வேதம் உயர்ந்த காவியம். பக்தி தத்துவத்திற்கு உறைவிடம். யாஸ்கரர், சாகபூணி, உபமன்யவர், வரருசி, முதலிய ரிஷிகள் ரிக்குக்களுக்கு விளக்கம் கூறியுள்ளனர். கந்தசுவாமி, வேங்கடமாதவர், சாயனர் இவர்கள் விரிவுரை எழுதி யுள்ளனர். மொழிகளின் தத்துவம், வரலாறு, மத தத்துவம், மனித இனங்களின் வரலாறு இவைகளை ஆராய்ச்சி செய்யப் புகுந்த மேனாட்டார்கள் ரிக்வேதத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுதி யுள்ளார்கள். உரையாசிரியர்களின் உதவியைப் பெறவேண்டுமென்று சிலரும், அவர்களின் உதவி யின்றி மொழி விஞ்ஞான உண்மைகளைக் கொண்டே மந்திரங்களுக்கு விளக்கம் கூறலாமென்று சிலரும் கூறுகின்றனர்.

“இயற்கைப் பொருள்களைப் பல தெய்வங் களாக ரிக்வேதம் தொழுகிறது என்றும், இயற்கைக்கு அப்பாலுள்ள தத்துவம் ரிக்வேத ரிஷிகளுக்குத் தெரி யாதென்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இது உண்மையல்ல. ஒரே கடவுள்தான். அவருக்கே பல உருவங்களும் பெயர்களும் வழிபாட்டுக்காகக் கொடுக் கப்பட்டுள்ளன. கடவுளை இயற்கையிலும் இயற் கைக்கு அப்பாலுள்ள நிலையிலும் ரிக்வேதம்வணங்கு கிறது. எங்கும் பரந்து நிற்கும் பரம்பொருளையே இயற்கையிலும் காண்கின்றனர். நெருப்பு காற்று நீர் போன்ற அறிவற்ற இயற்கைப் பொருளை ரிக்வேதம் வணங்கவில்லை. ஆயிரக்கணக்கிலுள்ள அடைமொழி களைக் கவனித்தால் ரிக்வேத தேவதை அளவற்ற அறி வுள்ளதென்றும், அபாரகருணையுள்ளதென்றும், தெரி கிறது. “ஏகம்ஸத்விப்ரா பஹுதா வதந்தி” (1-164)

என்பது பல தெய்வங்களை வணங்குகின்றனர் என்ற துர்வாதத்திற்கு அழகாக விடைகூறி விட்டது. வேதங்களுக்கு உரை எழுதிய ஆரிய சமாஜ ஸ்தாபகர் இயற்கையே ரிக்வேத தேவதை என்ற வாதத்தையும், ரிக்வேதம் பல தெய்வங்களை வணங்கும் என்ற வாதத்தையும் மறுத்துள்ளார். ஸ்ரீஅரவிந்தர் 'பரஞ்ஜோதிஸ்' (பரம்பொருள்) ரிக்வேத தேவதை என்பதை விளக்கி ரிக்குகளின் உட்கருத்து வெளியிட்டுள்ளார்,

"ஐதரேய பிராமணம், ஐதரேய ஆரண்யகம், சாங்காயன பிராமணம், சாங்காயன ஆரண்யகம், இவை ரிக்வேதத்தைச் சேர்ந்தவை.

யசுர்வேதம் : இது கிருஷ்ண யசுர்வேதம், சுக்கில யசுர் வேதம் என்று இருவகையானது. சம்ஹிதையிலேயே மந்திரங்களும் பிராமணங்களும் உள்ளது கிருஷ்ண யசுர் வேதம். சம்ஹிதையில் மந்திரங்களும் வேறு இடங்களில் பிராமணங்களும் உள்ளவை சுக்கில யசுர் வேதம். கிருஷ்ண யசுர் வேதத்திற்கு 86 கிளைகள். கிருஷ்ண யஜுஸின் சாகைகளில் தைத்திரீயம், மைத்திராயணியம், கடம், காபிஷ்டலகடம் என்பவைகள் இப்பொழுது இருக்கின்றன. தைத்திரீயத்தில் 44 பிரசனங்கள் 7 காண்டத்தில் அடக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரசனத்திலும் பல யஜுஸ்களைக் கொண்ட அநேக அனுவாகங்கள் உள்ளன. சம்ஹிதையிலேயே இங்குப் பிராமணம் இருந்தாலும் தனியாகப் பிராமணம் என்ற நூலும் அனேக மந்திரப் பிராமணங்களுடன் தைத்திரீயத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. சுக்கில யசுர்வேத சாகைகளில் கரண்வம், மாத்யன்தினம் என்ற இரண்டு இப்பொழுது காணப்படுகின்றன. உத்படர், மஹீதரர், ஸாயணர் இவர்கள் உரை எழுதியுள்ளனர். அத்தியாயங்கள் 40, அனுவாகங்கள் 360, சம்ஹிதையின் முடிவிலேயே உபநிஷத்து இருந்து வருகிறது. சதபதம்

இதன் பிராமணம். முடிவில் பிருஹதாரண்ய உபநிஷத்து உள்ளது. சிவபெருமானின் பெருமையை விளக்கும் ஸ்ரீருத்ரம் யசுர் வேதங்களிலேயே படிக்கப்படுகிறது. சில பஞ்சாட்சர மந்திரம் ருத்திர மந்திரங்களுக்கு இடையில் சொல்லப்படுகிறது. சிறியதும் பெரியதுமான பல வேள்விகள் யசுர் வேதத்தில் சொல்லப்படுகின்றன. வேள்விகளின் நோக்கம் உலக நலத்திற்காக மழை பொழிய உதவுவதே.

"அதர்வ வேதம்: இதன் சாகைகளில் பைப்பலாதம் சௌனகம் என்பவைகளே இப்பொழுது தென்படுகின்றன. சௌனகத்தின் சம்ஹிதைக்குச் சாயணர் பாஷியம் எழுதியுள்ளார். 730 சூக்தங்கள், 20 காண்டங்களிலிருந்து வருகின்றன. ரிக்குகள் 5,977. ஆறில் ஒரு பாகம் வசன நடையில் இருந்து வருகிறது. நோய் நீக்கம் முதலியவைகளுக்கேற்பட்டுள்ள மந்திரங்கள் தவிர உயர்ந்த கருத்துகளைக் கொண்ட பல ரிக்குகளும் இருக்கின்றன, மன்யுசூக்தம் (4-31,32) யுத்த வீரர்களுக்கு அவசியமான கோபத்தை வருணிக்கிறது. பூமியின் இயற்கை, பூமியிலிருந்து மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகள் இவைகளைப் பூமி சூக்தத்தில் (12-1) காண்கிறோம். பிரமசரியம் (11-2) விருந்தோம்பல் (15 முழுதும) காலம் (19-53,54) இவற்றின் பெருமைகளை அறிகிறோம். ரோஹிசூக்தங்கள் (13 முழுவதும்) ஸ்கம்ப சூக்தம் (10-7) சேஷ்ட பிரமசூக்தம் (10-8) உச்சிஷ்ட சூக்தம் (11-7), சிருஷ்டிசூக்தம் (11-8) இவைகளில் உயர்ந்த வேதாந்த உண்மைகளைக் காண்கிறோம். பல வழிகளில் இராச்சிய நலம் பிரார்த்திக்கபபடுகிறது. கோபதம் இதன் பிராமணம்.

"மொழி: உலக நடையிலுள்ள சமஸ்கிருத மொழிக்கும், வேத சமஸ்கிருதத்துக்கும் சில வேறுபாடுகள் உண்டு. பாணினி இதற்கும இலக்கணம் கூறுகிறார்.

"வேத காலம்: வேத மொழியின் அமைப்பு, அதில் காணப்பாடும் தேசம், நதி, ரிஷிகள், அரசர்கள், இவர்களின் பெயர்கள், இவைகளைக் கொண்டும், அந்தந்த மந்திரங் களோடும் பிராமணங்களோடும் சம்பந்தப்படும் ரிஷிகளின் பெயர்களைக் கொண்டும் வேதம் ஒரு காலத்தில் பல ரிஷி களால் செய்யப்பட்டது என்று வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர். வேதம் பல நூற்ருண்டுகளில் உருவான நூல் என்பது அவர்களின் முடிவு. வேத காலத்தை நிருணயிக்க மொழியியல், வரலாறு, வானவியல், புவியியல் இவற்றின் உதவியை இவர்கள் நாடுகின்றனர். இவர்கள் பல முடிவுக்கு வந்துள்ளனர். இவர்கள் முடிவுப்படி கி. மு. 2,500 முதல் கி. மு. 1,500 வரை வேதகாலம் இருக்கலாமென்று ஏற்படுகிறது. வேதத்தை மத நூலாகக் கொண்டவர்கள் வரலாற்ருசிரியர்களின் முடிவை ஏற்க வில்லை. வேதம் நித்தியமான நூல். யாரும் இதைச் செய்யவில்லை. செய்யாமொழி (பௌருஷேயம்) என்பது அவர்களின் கொள்கை. வேதத்தில் காணப்படும் பெயர்கள் எந்தக் குறிப்பிட்ட காலத்தோடும் சம்பந்தப் பட்டவை அல்ல, மந்திரங்களிலோ, பிராமணங்களிலோ, கர்த்தாக்களாகச் சொல்லப்படும் ரிஷிகள் உண்மையில் கர்த்தாக்கள் அல்லர், அதைக் காப்பாற்றிப் பிரசாரம் செய்தவர்களே என்று மீமாம்ச சூத்திரகாரரான ஜைமினி கூறுகிருர்.

"வேத மதத்தின் நோக்கம்: ஜாதிப் பிரிவினையை வேதம் சொன்னுலும் எல்லோரும் நன்மை அடைய வேண்டும் என்பதே வேதத்தின் நோக்கம். வேள்விகளில் குறிக்கோளை விளக்கும் பொழுதே காணப்படும் உண்மை களைக் கவனித்தால் உலக நலமே வேதத்தின் நோக்கம் என்று ஏற்படுகிறது. மறுமைக்கு எவ்வளவு முக்கியத் துவம் உண்டோ, அவ்வளவு இம்மைக்கும் கொடுக்கப்

பட்டுள்ளது. தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் எல்லோரும் அடைய வேதம் உதவுகிறது.

"வேதத்தின் பெருமை: வேதம் ஓர் அருமையான நூல். மதக்கொள்கைகளையும், வேதாந்த உண்மைகளையும் ஒரே இடத்தில் உணர்த்துகிறது. மத, வேதாந்த உண்மைகளைப் பரந்த அடிப்படையில் வேதம் விளக்குவதால் உலக வரலாற்றிற் பல இடங்களில், பல காலங்களில் தோன்றிய மதக் கொள்கைகளையும், வேதாந்த உண்மைகளையும் இங்கே ஒருங்கே காணலாம். மதக் கொள்கைகளில் மிகவும் முன்னேறியுள்ள தென்னாட்டின் சைவ, வைணவ சமயாசாரியர்கள் தங்களுடைய கொள்கைகளுக்கு வேதத்தையே ஆதாரமாக எடுத்துக் கூறுகிறார்கள். பக்தி மார்க்கத்தில் தலைசிறந்து விளங்கும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வேத வழியைப் பின்பற்றிப் போற்றுகிறார்கள். மத வேதாந்த தத்துவங்களை ஆராய்பவர்கட்கு வேதம் பொக்கிஷம்."

ஆகவே, இந்துக்கள் வேதங்களைத் தெய்வ வாக்காகவும் அவற்றில் காணாத உண்மைகள் இல்லை எனவும் கருதுகின்றனர்.

3. வேதங்களும்—இந்தியதத்துவ ஞானமும்

மேல் நாடுகளின் தத்துவ ஞானிகளுக்கும் இந்திய தத்துவ ஞானிகளுக்கும் ஒரு முக்கிய வேறுபாடுண்டு. மேல் நாட்டுத் தத்துவ ஞானிகள் தங்கள் முன்னோர்களின் தத்துவ ஞானத்தை விமர்சித்து, அதில் குற்றம் குறைகளை ஆய்ந்து, தங்கள் தத்துவஞானம் எவ்வாறு சிறந்தது என்று நிரூபித்தனர். ஆனால் இந்திய வைதிக தத்துவ ஞானிகளோ அவ்வாறு செய்யவில்லை. எல்லோரும் வேதங்களை ஏற்றுக்

கொண்டனர். வியாக்கியானம் செய்வதில்தான் வேற்றுமைசள் இருந்தன. ஆனால் மூலத்தை—வேதத்தை—குறை கூறினவர்கள் வெகு சிலரே.

வேதங்களின் ஆதார அடிப்படைகள் இரண்டு எனக் கூறலாம்; வருணாஸ்ரமதர்மம், கன்மம் என்பனவே.

வருணாஸ்ரமதர்மமோ ஜாதிகள் இவை இவை என்று சுட்டிக் காட்டி அவற்றின் வாழ்க்கை விதிகளையும் குறிப்பிடுகிறது.

கன்மம் என்பது அவர் அவர்கள் செய்த பூர்வகன்ம பலனை, இப் பிறவியில் இவ்வுலகில் அநுபவிக்கிறார்கள் என்றும், அடுதத பிறவிக்கு இப் பிறவியில் வித்திட வேண்டும் என்றும் எடுததுரைக்கிறது.

பணக்காரன் வீட்டில் பிறக்கும் பிள்ளை பூர்வ ஜன்ம புண்ணியத்தால் அங்குப் பிறக்கிறது என்றும், ஏழை வீட்டில் பிறக்கும் பிள்ளை சென்ற ஜன்மத்தின் பாவத்தினால் ஏழையாகப் பிறக்கிறது என்றும், புண்ணியம் செய்தவன் பிராமணனாகப் பிறப்பான் என்றும், பாவம் செய்தவன் பறையனாகப் பிறப்பான் என்றும் வேதங்கள் சொல்லுகின்றன. வேதங்கள் தெய்வ வாக்கு ஆதலால் இவைகளை மறுப்பவர்கள் ஆண்டவனையே மறுப்பவர்கள்: பகுத்தறிவுக்கு ஒவ்வாத, இந்த அர்த்தமற்ற அக்கிரமத்தைத்தான் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் கடுமையாக வாழ்நாள் முழுவதும் எதிர்த்தார்.

நமது தத்துவ ஞானிகள் எதை விளக்கவேண்டுமென்றாலும், அவர்கள் எடுத்துக் கொள்ளும உபமான உபமேயங்கள் நெசவாளனும் கைத்தரியும், குயவனும் குடமும். இது எதைக் குறிக்கின்றது?

ஆதி தத்துவ ஞானிகள் எந்தக்காலத்தில் இருந்தனரோ, அந்தக் கால நாகரிகமும், உற்பத்திச் சாதனங்களும்

தான் அவர்கள் அறிவுக்கு எட்டியவை. பின்னர் வந்த தத்துவ ஞானிகள் தங்கள் முன்னோர் எப்படி வாழ்ந்தனரோ, அப்படி வாழ எண்ணியவர்கள்; அதே உபமான உபமேயங்களைக் கைவிடவில்லை.

வேதங்களில் மிகப் பழமையான வேதம் ரிக்வேதம். இது ஒருவரால் இயற்றப்பட்டதென்றோ ஒரே சமயத்தில் இயற்றப் பட்டதென்றோ கூறமுடியாது. சுமார் கி.மு. 2,000 அல்லது 1,500ல் இயற்றப் பட்டிருக்கலாம் என்று கூறலாம். இவை வரிவடிவம் பெறுதநிலையில் ஒருவர் சொல்ல அதைப் பலர் மனப்பாடம் செய்து வாய் மொழியாக, தலைமுறை தலைமுறையாக வந்திருக்க வேண்டும்.

ரிக்வேதப் பாடல்கள் கீழ் ஜாதிக்காரர்களையும், பெண்களையும் அடக்கி ஆளவேண்டும் என்பதற்குச் சட்டம் வகுத்துக் கொடுத்து ஆடு மாடுகள், உணவு, மழை, தற்காப்பு, யுத்தத்தில் வெற்றி, நோயற்ற வாழ்வு, சந்ததி, முதலியவற்றைப் பெறத் திட்டம் வகுத்துத் தந்துள்ளன. சுருங்கக் கூறின் ரிக்வேதத்தில் தத்துவ ஞானத்தையோ சிந்தனையையோ பார்க்க முடியாது.

இதையும் பெரியார் ஈ. வே. ரா. மிகத் தெளிவாகப் பார்த்தார்.

வேதங்களில் பாடல் வடிவின அனைத்தும் 'மந்திரங்கள்' என்று கூறப்படுகின்றன. மனப்பாடம் செய்து அதை அப்படியே சொல்லக் கூடியவை பாடல்கள் ஆன படியால் இவை வேதத்தின் முக்கிய வடிவ்மாக இருந்தன. உரை நடையிலுள்ள பகுதிகள் பிற்காலத்தில்தான் சேர்க்கப் பட்டன. இந்த உரை நடைப் பகுதி 'பிராமணம்' என்று அழைக்கப்படுகிறது.

4. புதிய சிந்தனை

'உபநிஷத்' என்ற பதத்தின் பொருள் 'இரகஸ்ய அறிவு' என்பதேயாகும். குருவின் கால் அடிகளில் சீடர்கள் உட்கார்ந்து தொண்டு செய்து, அவர் நம்பிக்கையைப் பெற்றபின், அவர் இரகஸ்யமாக மந்திரத்தைச் சீடர்கள் காதில் ஓதி அறிவை வளர்ப்பார் என்பது மரபு.

உபநிஷத்துகள் பல. ஆனால் புகழ் வாய்ந்தவை 18. இவை கி.மு. 6-ம் நூற்றாண்டுக்கு முன்-கௌதம புத்தருக்கு முன் தோன்றியவை என்று கூறப்படுகிறது.

உபநிஷத்துகளில் புதிய சிந்தனைகளைப் பார்க்கலாம். நெடுநாளாய் வளர்ந்த தத்துவ ஞானம் இவைகளில் தெளிவாக இடம் பெறுகிறது. வைதீகச் சடங்குகளும் மாய வித்தைகளும் மந்திரங்களும் தத்துவம் பற்றிய தெளிவான கேள்விகளும் இங்கு இடம்பெற வேண்டியதாயிற்று.

பிரம்மம் என்றால் என்ன? நாம்எங்கிருந்து பிறக்கின்றோம்? நாம் எவ்வாறு உயிர் வாழ்கின்றோம்? நாம் எப்படி அமைக்கப்பட்டுள்ளோம்?" என்ற வினாக்களை எழுப்பி அவைகளுக்குத் தாமேவிடைகூற உபநிஷத்துகள் முற்படுகின்றன.

வேதங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு தத்துவ முறைகள் ஏற்பட்டன—'மீமாம்சை' 'வேதாந்தம்' என்று. இவை முறையே பூர்வ மீமாம்சை உத்தர மீமாம்சை எனப்படும்.

இவ்விரண்டுமே வேதங்கள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளன என்று கூறமுடியாது.

'மீமாம்சை' வேதங்கள் அனைத்தையும் தெய்வவாக்கு என்று கூறிவிட்டு, அறிவை வளர்ப்பதற்குப் பதிலாக, யாகங்களைச் செய்வதும், மந்திரங்களை ஓதுவதும்தான் மனித வர்க்கத்தின் கடமை என்று கூறுகிறது. இந்தத் தத்துவ ஞான முறையை அலசிப் பார்த்தால் கடவுள் உண்டு என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. உண்மையில். நாத்திகத்திற்கு எண்ணற்ற சான்றுகள் மீமாம்சையில் காட்டலாம். இதைப் பற்றி எஸ். ராதாகிருஷ்ணன் கூறுகிறார்;

"பூர்வ மீமாம்சை தத்துவ ஞான முறையில் இந்தக் குறைபாடு அந்தத் தத்துவ ஞானத்தையே பாதிக்குமளவு இருந்ததால், அந்தத் தத்துவ ஞானத்தைப் பற்றிப் பிறகு எழுதிய எழுத்தாளர்கள் மெல்ல கடவுளைப் புகுத்தினர்."

வேதாந்த தேசிகனும், அபதேவரும் கடவுளைப் புகுத்தினர். ஆனால் வேதாந்த தேசிகர் மீமாம்சைத் தத்துவ ஞானத்தைத் தாங்கிப் பிடித்தவரல்ல. அவர் வேதாந்த தத்துவ ஞானத்தின் 'விசிஷ்டாத்துவைத தத்துவ' முறையைப்பின் பற்றியவர்

கடவுள் 'பிரளயம்' வந்தபோது வேதங்களைக் கையில் ஏந்திக் காப்பாற்றியதாக அபதேவர் கூறுகிறார். ஆனால் மீமாம்சையின் புகழ்பெற்ற பாஷ்யம் எழுதியவர்களாகிய குமாரிலரும் பிரபாகரரும் 'பிரளயம்' என்பது கற்பனையே என்கின்றனர்.

சபரர் என்பவர் கடவுள் இல்லை என்று கூறியதற்குக் காரணத்தை அவரே கூறுகிறார்: "ஐம்புலன்களைக் கொண்டு கடவுளைக் காண முடியவில்லை. நமது அறிவு ஐம்புலன்களையும் கொண்டுதான் ஏற்படுகிறது" என்று. ஆனல்

கடவுள் உண்டு என்பதற்கு "அத்தாட்சி நாங்கள் காட்டு வோம்", என்று சபரருக்குப் பின்தோன்றிய நியாய வைசேசடிகர்கள் கூறினர்கள். இவர்கள் கூறியதைக் குமாரிலரும், பிரபாகரரும் கடுமையாக எதிர்த்தனர்.

மீமாம்சை, தத்துவார்த்த எண்ணம் முதல்வாதத்தைக் கடுமையாக எதிர்த்தது.

எண்ணம் அல்லது உணர்வு முதல் என்றும் அதற்குப் பின்னர்தான் பொருள் என்பது ஏற்படுகிறது என்றும் எண்ணம் முதல்வாதிகள் கூறுகின்றனர். அதாவது ஆதி முதல் எண்ணம் தான் கடவுள் என்பது அவர்கள் வாதம். ஆகவே, கடவுளுக்கு உடல் உண்டா இல்லையா! இல்லை என்ருல் கடவுள் என்பது ஒரு கருத்துதான் என்று கூறவேண்டும் என்பர் மீமாம்சகர்.

மேலும் எண்ணம் முதல்வாதிகள் மனிதனுக்கு ஆன்மா என்று ஒன்று உண்டு; அதுதான் உண்மையாக நிலைபெற்றது; நாம் காணும் உலகமும், பிரபஞ்சமும் மாயை என்றும் கூறுகின்றனர்.

அத்வைத வேதாந்திகள் இக்கருத்தை மிகத் தீவிர மாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்,

5. வேதாந்தம்

உபநிஷத்துகளைப் பிரதான அடிப்படையாகக் கொண்டது வேதாந்தமாகும்.

ஆனல், பல உபநிஷத்துகள் தொடர்ச்சியாக ஒரு தத்துவார்த்த முறையைப் பின்பற்றவில்லை. ஆகவே, அவைகளில் ஒற்றுமையைக் காண முடியாது

எனவே தோன்றுதொட்டு நிற்கும் ஒரு தத்துவார்த்த முறையைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று.

இதைத்தான் "பிரம்மசூத்திரம்" என்று அழைக்கப் படும் "நூல்" செய்துள்ளது. அதாவது, இறுதி உண்மை அல்லது வாய்மை பிரம்மம்! கடவுள்! என்பதேயாகும் என்று கூறுகிறது இந்நூல்.

வேதாந்திகள் இப்பிரம்ம சூத்திரத்தைத் தங்கள் தத்துவ மூலமாகக் கருதுகின்றனர். பிரம்ம சூத்திரங் களோ எந்தவித தத்துவார்த்த முறையையும் தெளிவு படுத்தவில்லை. ஆகவே, பல தத்துவஞானிகள் பிரம்ம சூத்தித்தை விளக்கி பாஷ்யம் (விளக்க உரை) எழுதத் தொடங்கினர். இவைகளைப்பற்றிப் பிறகு விளக்குவோம். ஆனால் இவ்வாறு விளக்க உரை எழுதியவர்கள் அனைவருமே வேதாந்த தத்துவாசிரியர்கள் என்று கூறிக் கொள்ளுகிறார்கள்.

6. மீமாம்சை தத்துவமும் நாத்திகமும்

இந்திய ஐதிக வாதிகள் அனைவருமே வேதங்களின் தெய்வீகத் தன்மையை வலியுறுத்துகிறார்கள். வேதங்களை அடிப்படையாகக் கொண்ட தத்துவ சாத்திரம் வைதிகம் என்று கூறப்படுகிறது. இதை 'ஆஸ்திகம்' என்றும் கூறலாம். வேதத்தை மறுத்தாலோ அதன் தெய்வீகத் தன்மையை எதிர்த்தாலோ அது 'நாஸ்திகம்' என்று கருதப்படுகிறது.

ஆகவே நம் நாட்டின் தத்துவ ஞானத்திற்கே அடிப் படையாக வேதங்கள் கொள்ளப்படுகின்றன.

வேதங்களைக் கடவுளே தந்தருளினார் என்பது ஏறத் தாழ தத்துவ ஞானிகளின் அனைவரின் கருத்தே

யாகும். ஆகவே, வேதங்களில் இல்லாத உண்மை வேறு எதுவும் கிடையாது, அவ்வுண்மைகளை நிரூபிக்க வேண்டும் என்று கூறுவதே பாவமாகும். அவ்வுண்மைகளை நிரூபிக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை என்பது நமது தத்துவ ஞானிகளின் எச்சரிக்கையாகும்.

வேதங்களை மூன்று ரகமாகப் பிரிக்கலாம்— "சம்ஹிதைகள்" "பிராமணங்கள்" "ஆரண்யகங்கள்" என்று. தொடர்ந்து "உபநிஷத்கள்." இவைகள் அத்தனையும் எழுத எவ்வளவோ நூற்றாண்டுகள் ஆயின என்பதில் என்ன சந்தேகமிருக்க முடியும்? வேதங்களில் கோவையாக ஒரு தத்துவததைக் காணமுடியாது. உபநிஷதத்தில்தான் கோவையான தத்துவம் ஒன்றுண்டு என்று கூறலாம். ஆன்மீக தத்துவமும் கடவுள் கொள்கையும் தீவிரமாகக் காணப்படுகின்றன. எங்கும் கடவுள், எல்லா வற்றிலும் கடவுள் அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்ற தத்துவத்தைப் பார்க்கலாம்.

"மீமாம்சை" என்பது வேதங்களை அறிவுக்கு எட்டச் செய்வது. இதன் மூலம் அதன் செல்வாக்கு பண்டைக் காலத்திலேயே வளர்ந்தது. மீமாம்சை தெள்ளத் தெளிவாக நாத்திகத்தை வலியுறுத்துகிறது. இந்த உண்மையை மறைக்கவும் அல்லது ஏதேதோ பல்வேறு வியாக்கியானங்களைத் தந்து மிமாம்சையில் நாத்திகத்தைப் பற்றி ஒன்றுமே இல்லை என்று கூறவும் சில நவீன தத்துவ ஞானிகள் தோன்றியுள்ளனர். மாக்ஸ் முல்லர் கூறுகிறார்.

> "உலகிலுள்ள எல்லா அநீதிகளுக்கும் கடவுளைக் காரணமாக்க ஜைமினி விரும்பவில்லை. ஆதலால், உலகிலுள்ள எல்லா அநீதிகளும் காரண காரியங்களால் ஏற்படுகின்றன..நல்லது செய்தால் நல்லதும், கெட்டது செய்தால் கெட்டதும் ஏற்படும் என்கிறார் ஜைமினி.

இது எப்படி நாத்திகம் ஆகும்? மாறாக கடவுளைக் கண்டபடி ஏசாமலிருக்கவும், கடவுள் மேல் குற்றம் சாட்டாமலிருக்கவும், ஜைமினி இவ்வாறு கூறுகிறார். மீமாம்ஸகர்களை நாத்திகர் என்று சொன்னார்கள் என்றால், கடவுளின் பல செயல்களை அவர்கள் ஒரு விதத்தில் விளக்கினார்கள் என்றுதான் கூறமுடியும்".

மாக்ஸ் முல்லர் என்ன நினைத்தாலும் சரி. மீமாம்சக நூல்களில் கடவுள் இல்லை என்பது உண்மை தான் இதற்கு எண்ணற்ற சான்றுகள் உண்டு.

குமாரிலர் மிமாம்சை தத்துவத்திற்கு மிகப்பெரிய விளக்க உரை எழுதியவராவார். பயங்கர ஏற்றத் தாழ்வுகளும் அநீதிகளும் நிரம்பிய உலகத்தை எல்லாம் வல்ல கருணைக் கடலாகிய கடவுள் ஏற்படுத்தினார் என்று கூறுவதே அர்த்தமற்றது, அது கற்பனையே என்று அவர் கூறுகிறார்.

மிமாம்சை தத்துவம் நாத்திகத்தைப் பரப்பியது என்பதற்காக ஆஸ்திகர்கள் அனைவருமே மிமாம்சை தத்துவத்தைக் கடுமையாகத் தாக்கினார்கள். குறிப்பாக கடவுள் இல்லை என்ற கருத்தைத் தாக்கினர் என்பதே மிகப்பெரிய சான்றாகும். சில ஆசிரியர்கள் கூறுவது போல, கீதையில் கிருஷ்ண 'பரமாத்மாவே' இந்தத் தத்துவத்தைப் பெயர் சொல்லாமல் தாக்கியுள்ளார்.

சபரர், வேதக் கடவுள் என்பது உண்மை அன்று கடவுள் என்று வேதங்கள் கூறுவது வெறும் சப்தமே ஒழிய வேறு ஒன்றுமில்லை; அக்கினி, இந்திரன், வருணன் என்பதெல்லாம எவ்வித தெய்வீகத் தன்மையும் உடையன அல்ல அதாவது அவைகள் தேவதைகளல்ல என்று தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார். மேலும் அவர்

வேதக் கடவுள்களுக்கும் உலகிலுள்ள மக்களுக்கும் எவ்வித உறவுமில்லை என்றும் ஆகவே யாகங்கள் செய்வதும் கடவுளுக்கு நெய்வேத்தியம் செய்வதும் அர்த்த மற்றவை எவ்வித பலனும் தரக்கூடிய தன்மை வாய்ந்தவை அல்ல என்றும் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

எனவே மீமாம்மை தத்துவப்படி கடவுள் என்பது கற்பனையே. தேவதைகள் என்பது வெறும் சப்தமேயாகும். ஆனால் மீமாம்சகர்கள் வேதத்தைப் புறக்கணிக்கவில்லை. ஆனால், அவர்களின் விளக்கத்தை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு ஒரு கடவுள் கொள்கையும் சரி, பல தெய்வ வழிபாடும் சரி, ஏற்புடையவை அல்ல என்பது தெளிவு.

நம் நாட்டில் இவற்றை எல்லாம் படித்துணர்ந்த வர்கள் மிக மிகக் குறைவே. ஆனால் பெரியார் இவை அனைத்தையும் கசடறக்கற்று மக்களுக்குப் புரியும் மொழியில் கடவுள் இல்லை என்று கூறியபோது, வேதங்களை நம்புபவர்களிலேயே கடவுளை மறுத்தவர்கள் உண்டு என்ற உண்மையை அறியாத பலர் அவரைச் சாடினார்கள், பலரின் அறியாமைக்குப் பெரியார் காரண மல்ல. அந்த அறியாமையை ஓட்டவே அவர் வாழ்நாள் முழுவதும் பணியாற்றினார்.

மனிதர்களுக்குப் பூதஉடல் இருப்பது போல் கடவுளுக்கு உண்டா? இல்லை என்றுதான் இந்திய தத்துவ ஞானிகள் அனைவரும் கூறியுள்ளனர். பூதஉடலில்லை என்றால் எண்ணம் என்பது, உணர்வு என்பதும் எவ்வாறிருக்க முடியும்?

இதைத்தான் மீமாம்சகர்கள் ஆணித்தரமாகக் கூறி யுள்ளனர்.

இதற்கு மாருக, கடவுள் நம்பிக்கையுள்ளவர்களும் வேதாந்திகளும் உபநிஷத்துகளைப் பின்பற்றுவோரும் கடவுள்தான் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்பதாக வேதங்கள் கூறியிருப்பதால் அதை மறுக்க முடியாது என்று கூறி நிறைவு அடைகின்றனர். பௌத்தர்களும் சமணர்களும் இதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

குமாரிலர் மீமாம்சக தத்துவததை விளக்குகையில் உலகம் மாயை என்ருல் மாயா உலகத்தைச் சிருஷ்டித்த கடவுள் எப்படி இருக்கவேண்டும். எவ்வாறு அர்த்த மற்ற காரியத்தைக் கடவுள் செய்திருக்க வேண்டும் என்று கூறி, உலகத்தை எந்தக் கடவுளும் சிருஷ்டிக்கவில்லை அது பல இயற்கைக் காரணங்களால் தோன்றியது, உலகம் மாயை அல்ல என்று கூறுகிருர்.

வேதக் கடவுளையும் தேவதைகளையும் ஏற்றுக் கொள்ளுபவர்களைப் "பூர்வபக்ஷர்"கள் என்று அழைக் கிருர்கள்.

இவர்களின் தேவர்கள் ஆதி என்றும், யாகங்க செய்வது தேவர்களுக்காகவே என்றும் யாகங்கள் மூலம் தேவர்கள் தொழப்படுகிருர்கள் என்றும் தேவர்களுக்கு உருவம் உண்டு என்றும் இதை வேதங்கள் தெளிவுபடுத்தி யுள்ளன என்றும் வாதிக்கின்றனர்.

சித்தாந்திகள் என்று கூறப்படுபவர்கள் இதை எதிர்க்கின்றனர்.

சபரர் கூறுகிருர்; "தேவர்களுக்கு "உடலோ! உருவமோ இல்லை என்பதை வேதஸ்மிருதிகள் தெளிவு படுத்தியுள்ளன. அவ்வாறு இருக்கும் பொழுது தேவர்கள் சாப்பிடுகிருர்கள் என்று கூறுவது அர்த்த மற்றது"

இவ்வாறு கூறிய பிறகும் மீமாம்சகர்கள் வேதத்தில் நம்பிக்கை கொண்டவர்களே. யாகங்களைச் செய்வதினால் தேவர்கள் திருப்தியடைவார்கள், யாகத்தில் அளிக்கும் பண்டங்களைச் சாப்பிடுகிறார்கள் என்பதல்ல, யாகங்களைச் செய்வதால், அச்செய்கையே நமக்குப் பலனளிக்கின்றது என்று சபரர் கூறுகிறார். சுருங்கச் சொன்னால் யாகங்கள் மாயவித்தைகள் போல் பலனளிக்கின்றன என்பதுதான் அவர் கருத்து.

எனவே, மீமாம்சகர்கள் இந்திரன், அக்னி, வருணன் என்றெல்லாம் சொல்லும் போது ஏற்படு சப்தங்கள் மாயவித்தையின் பலனைத் தருகின்றன; 'ஓம்' என்று கூறினால் ஏதே கடவுள் வருவார் என்பதல்ல, அந்தச் சப்தம் முக்கியம்; அந்தச் சப்தத்தால் உடலில் ஏதோ மாற்றம் ஏற்படுகின்றது; கடவுள், தேவர்கள் என்றெல்லாம் உண்டு என்பது நினைப்பது தவறு—அப்படி ஒன்றுமில்லை என்று கூறுகிறார்கள்

7. சாங்கிய தத்துவ ஞானமும் நாத்திகமும்

இந்திய தத்துவ ஞானங்களில் சாங்கிய தத்துவ ஞானம் மிக மிகப் பழமையானது என்று கூறலாம். கபிலர் இந்தத் தத்துவத்தைத் தோற்றுவித்தார் என்றும், ஆனால் அவர் எந்தக் காலத்தில் வாழ்ந்தார் என்பது கூறவியலாது என்றும், தத்துவாசிரியர்கள் கூறுகிறார்கள்.

இந்தத் தத்துவம் பண்டைக் காலத்தில் மிக முக்கிய தத்துவமாக இருந்தது என்பதற்கு எண்ணற்ற சான்றுகளைச் சரித்திர ஆசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர்.

உதாரணமாக, மகாபாரதத்திலும், மனுஸ்மிருதியிலும், புராணக் கதைகளிலும் சாங்கிய தத்துவம் இடம்

பெற்றுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். மகாபாரதம், சாங்கிய தத்துவம் சனுதன தத்துவம் என்றும் அது என்றும் அழியாதது என்றும் கூறுகிறது.

சாங்கிய தத்துவம் கடவுள் இல்லே என்று கூறுகிறது. ஆனுல் இந்தத் தத்துவம் மறைந்து, அழிந்து போகும் நிலே மையில் இருந்தபோது பல ஆஸ்திக தத்துவ ஞானிகள் அத் தத்துவத்துக்கு உயிரூட்டினுர்கள்; விளக்க உரைகள் பல செய்தனர். கடவுளேச் சாங்கிய தத்துவத்தில் புகுத் தினுர்கள்.

ஆனுல் காலப்போக்கில் சாங்கிய தத்துவத்தின் 'சாங்கிய—சூத்திர'ங்களுக்கு பாஷ்யம் (விளக்க உரை) எழுதியவர்களும் வேதாந்த தத்துவ ஞானிகளும் அத் தத்து வத்தை வேதாந்த தத்துவமாக்கி விட்டனர். அதாவது, சாங்கிய தத்துவம் மறைந்தது; அதன் இடத்தை வேதாந்த தத்துவம் நிரப்பிற்று.

சாங்கிய தத்துவ ஞானத்தின்படி இப் பூவுலகம் மூன்று மூலங்களின் சேர்க்கையால் ஏற்பட்டுள்ளது; இவை 'சத்துவம்', 'இராஜஸம்', 'தாமஸம்' என்பனவாகும்.

'சத்து' என்பது ஒளியும் இன்பமும் தரத்தக்கது

'இரஜஸ்' என்பது அசைவு, உணர்வு, இன்னலேத் தரத் தக்கது.

'தமஸ்' என்பது கனம் கொண்டது. இடைஞ்சல், சோம்பல் இவற்றை ஏற்படுத்தக் கூடியது.

ஆதி முதற் பொருள் இம் மூன்றையும் கொண்டதாகும் என்றும், பிரபஞ்சமே இவைகளேக் கொண்டுதான் ஏற்பட்டது என்றும் சாங்கிய தத்துவம் கூறுகின்றது. எனவே, இந்தப் பிரபஞ்சத்தைக் கடவுள் ஏற்படுத்தினுர்

என்பதைச் சாங்கிய தத்துவம் நேரடியாக மறுக்கவில்லை என்ற போதிலும், பிரபஞ்ச உற்பத்தியில் கடவுளுக்கு எவ்வித வேலையுமில்லாமற் செய்தது. அதே சமயத்தில் பிரபஞ்சம் ஏற்பட்ட பிறகு 'ஆன்மா' அல்லது 'புருஷர்' ஏற்பட்டதாகக் கூறுகிறது. இதன் மூலம் கடவுளை இந்தத் தத்துவத்தில் புகுத்த நல்ல சந்தர்பத்தை ஏற்படுத்தியது. ஆஸ்திகர் இதை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டனர். நாளடைவில் சாங்கிய தத்துவம் உடைத்து நொறுக்கப்பட்டு, வேதாந்த தத்துவத்தில் ஜீரணிக்கப்பட்டு விட்டது.

8. பௌத்தரும் நாத்திகமும்

புத்தரைப் பற்றி இந்த நூற்றாண்டில் எழுதியுள்ள பல அறிஞர்கள், புத்தர் பெரிய அளவு சாங்கிய தத்துவத்தைப் பின்பற்றினர் என்றும் அவர் திருவாக்கியங்களை நோக்கினுல் சாங்கிய தத்துவம் அவரைப் பெரிய அளவு ஈர்த்திருந்தது என்பதைக் காணலாம் என்றும் கூறுகின்றனர்.

ஓர் உண்மையை நாம் இங்குக் குறிப்பிட வேண்டியது மிக மிக அவசியம்.

புத்தர் கடவுள் இல்லை என்பதனை ஆணித்தரமாகக் கூறிவந்தார். சாங்கிய தத்துவம் பௌத்த தத்துவத்தை விட மிகப் பழைமையானதாதலால், அது பெரிய அளவு புத்தர்கருத்துகள் உருப்பெறுவதற்குக் காரணமாக இருந்திருக்கவேண்டும் என்று கூறலாம்.

சாங்கிய தத்துவத்தை ஏற்படுத்தியவர்க்கு, அறிவு அளவை இயல் கண்ணோட்டத்துடன் பார்த்தாலும் சரி மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் பார்த்தாலும் சரி, கடவுள் என்ற கருத்து அவசியமற்றதும், அருவெறுப்பை ஏற்படுத்தக் கூடியதுமாக இருந்தது. புற

இயல் மெய்மையைப் பகுத்தறிவைக் கொண்டு விளக்க அவருக்குக் கடவுள் என்பது கற்பனேயே தவிர வேறு ஒன்றுமில்லே.

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்ற உண்மையை உணர்ந்த சாங்கிய தத்துவ மூல ஆசிரியருக்கு ஒரு விஷயம் தெளிவாகி இருந்தது—மனிதன் தன் செயல்கள் மூலம் தன் விதியை நிர்ணயித்துக் கொள்ள முடியும். கடவுள் என்ற கற்பனேக்கு இடமே இல்லே என்பதுதான்.

ஆனுல் புத்தருக்குப் புறஇயல் மெய்மையோ, அறிவளவை இயலோ எவ்விதத்திலும் துன்பம் தருவதாக இல்லே. இவைகளே அவர் வாதித்ததுமில்லே. பிறர்வாதிப்பதையும் விரும்பவில்லே. மெய்மையின் உள்ளடக்கம் என்ன என்ற ஆராய்ச்சியில் புகுவதோ இவ்வுலகம் எவ்வாறு ஏற்பட்டது என்ற கற்பனேயில் புகுவதோ அர்த்தமற்றது, அவசியமற்றது என்ருர் புத்தர்.

அப்பாலேத்தத்துவக் கேள்விகள் போட்டவர்களுக்கு, எவ்வித பதிலும் அவர் கொடுத்தாரில்லே. அவருக்குப் பிரதானமாக இருந்தவை ஒழுக்கப் பிரச்னேகளே. இதற்கு அவர் முக்கியத்துவம் கொடுத்தது எப்படி அவரைக் கடவுளே வெறுக்கும் தன்மைக்குக் கொண்டு சென்றது என்பதனே இங்குச் சற்றுப் பார்ப்போம்.

எங்கு பார்த்தாலும் மக்கள் பல இன்னல்களுக்கும், சொல்லொணுக் கஷ்டங்களுக்கும் இரையாயிருப்பதைப் புத்தர் பார்த்தார். எனவே காசிமா நகரில் ஆற்றிய விளக்கப் பேருரையில் அவர் கூறினுர்:-

"பிறவி துன்பமாகும். மூப்பு (வயோதிகம்) துன்பமாகும். பிணி துன்பமாகும். இறப்பு துன்பமாகும். நாம் காதலித்தவரோடு பிணக்கப்படுவது துன்பமாகும். நாம் விரும்புகிறவர்களிடமிருந்து பிரிக்கப்படுவது துன்பமாகும். நாம் விரும்புவதை அடையாதிருப்பது துன்பமாகும். சுருங்கக் கூறின், ஐந்து ஆசைகளால் இவ்வுலகில் ஒட்டிக் கொண்டிருப்பது துன்பமாகும்."

ஆகவே, வியாதி, வயோதிகம், மரணம் இவை அனைத்தும் மக்களுக்கு எல்லையில்லாத் தொல்லைகளை ஏற்படுத்துவதைக் கண்டு அவரால் சகிக்க முடியவில்லை. ஆகவெ, அவர் எண்ணமெல்லாம் —உலகில் துன்பங்கள் ஏன் ஏற்படுகின்றன? இவைகளை எவ்வாறு போக்க இயலும்? என்பனவே.

புத்தர் போதித்த கோட்பாடுகள் நான்காகும் :- இவை மேலான வாய்மைகள் என்று கருதப்படுகின்றன.

முதலாவதாக, உலகமனைத்தும் உள்ள உண்மை துன்பமேயாகும். மிச்சமுள்ள மூன்று உண்மைகளையும், புத்தர் அதே விளக்கப் பேருரையில் கூறுகிறார் :-

"ஓ! துறவிகளே! எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் இந்த உண்மைதான். உயிரின் மீது உள்ள ஆசையின் காரணமாக எத்தனையோ பிறவி எடுக்க வேண்டியதாகிறது. காமக் குரோதங்கள் தோன்றுகின்றன. சந்தோஷமாக வாழ வேண்டும் என்ற தாகம், உயிர் மோகம், அதிகார மோகம் அனைத்தும் துன்பங்களுக்கு வழி வகுக்கின்றன.

"ஆகவே, ஓ! துறவிகளே! துன்பங்களைத் தொலைக்க, ஆசையும் பாசமும் அடியோடு களைந்து எறியப்பட்டால்,

அவைகளுக்கு எள்ளளவும் இடம் தராமலிருந்தால், துன்பங்கள் அறவே ஒழியும்.

"ஓ! துறவிகளே! இதுதான் தொல்லைகளைத் தொலைக்க ஒரே வழியாகும்—வாய்மையும் இதுவே! இதை அடைய எட்டுப் பாதைகள் உண்டு, இவ்வெட்டையும் நாம் பின் பற்ற வேண்டும். இவ்வெட்டும் —நற்காட்சி, நற்கருத்து, நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி என்பன.

இவ்வெட்டு வழிகளைப் பின்பற்றினுல், துக்க சாக ரம் என்பதைக் கடந்து 'நிர்வாண'த்தை அடைய முடியும்"

இவை அனைத்தும் கூறிய புத்தர், எங்கும் கடவுளைப் பறறி ஒரு வார்த்தை சொல்லவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இது தற்செயலாக ஏற்பட்டதா? இல்லை! புத்தருக்கு ஓர் விஷயம் தெளிவாக இருந்தது. கடவுள் என்று ஒரு பொருள் இல்லை என்பதேயாகும்.

கபிலர் செல்வாக்கும் சாங்கிய தத்துவத்தின் செல்வாக் கும் பெரிய அளவு புத்தர் மீது இருந்ததின் காரணமாக, கடவுள் நம்பிக்கை என்பது அவருக்கு அறவே இல்லை என்பதுதான் உண்மை.

கடவுளைப் பற்றிய கருத்துகள் அனைத்துமே அப்பாலைத் தத்துவத்தைச் சேர்ந்தவை; புத்தருக்கு அப்பாலைத்தத்துவம் என்ருலே வெறுப்பை ஊட்டியது என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் கோடிட்டுக் காண்பிக் கின்றனர்.

மனிதன் வாழ்வாங்கு இவ்வுலகில் வாழ என்ன அவசியமோ அதைப்பற்றி மட்டுமே புத்தர் பேசினுர். கடவுள் உண்டு என்றும் கூறவில்லை. கடவுள் இல்லை

என்றும் அவர் கூறினர் இல்லை. ஆனால், கடவுள் பக்தியோ அல்லது நம்பிக்கையோ அவருக்கு இருந்திருந்தால் அவர் சீடர்களிடம் அதைக் கூறி இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் கடவுளைப் பற்றி அவர் எதுவும் கூறியதே இல்லை.

ஆனால் கபிலரைப் புத்தர் பின்பற்றினர் என்பது உண்மை. கபிலருக்கோ கடவுள் என்பது கற்பனையே தவிர வேறு ஒன்றுமில்லை.

"பௌத்த சமயத்தை ஒரு தத்துவார்த்த முறை என்று எடுத்துக் கொண்டால், அதில் எல்லாம் வல்ல ஈசன் அல்லது கடவுள் என்பதற்கு இடமே இல்லை" என்று மேலைநாட்டுத் தத்துவ சரித்திர ஆசிரியர் ஒருவர் கூறுகிறார்.

இந்திய தத்துவ சாத்திரத்தின் மிகப் பெரியப் பிரச்னை ஒன்று—இப் பிரச்னை தத்துவ ஞானிகளை இரு முகாம் களாகப்பிரித்தது.

இவ்வுலகிலுள்ள எல்லா மக்களின் கருமங்களையும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள படித்தான் செய்தல் முடியும், இவைகளைக் கடவுள் அல்லது தேவர்கள் நிர்ண யிக்கின்றனர். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பது ஒரு சாரார் அதாவது கடவுள் நம்பிக்கையுள்ள வர்கள் கூறி வருகின்றனர். இவர்களை எண்ணமுதல் வாதிகள் என்றும் அழைக்கலாம்.

இதற்கு நேர்மாருக, கடவுள் என்று ஒரு பொருள் இல்லை, மனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளவும் முடியும் என்று மற்ருெரு சாரார் கூறுகின்றனர். இவர் களை நாத்திகர் என்ருே பொருள்முதல்வாதிகளென்ருே கூறலாம். இவை முன்னமே பல இடங்களில் விளக்கப் பட்டுள்ளன.

இந்திய தத்துவ ஞானத்தைப் பொறுத்த அளவு இவ்விரு சாராரும் ஆதிமுதல் இருந்து வந்துள்ளனர். இந்திய தத்துவம் முழுவதுமே கடவுளைத் தாங்கிப் பிடிக்கிறது என்று கூறவே முடியாது.

புத்தருக்கு மனித இன்னல்கள் பிரத்யட்ச உண்மையாக விளங்கின. இவ்வின்னல்கள் அனைத்தும் அறியாமையினுல் ஏற்படுகின்றன. இந்த அறியாமையைப் போக்க வேண்டுமென்ருல் ஏற்கெனவே கூறியுள்ள பாதைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது புத்தரின் உபதேசமாகும்.

ஆகவே புத்தரைப் பொறுத்தவரையில் அவர் கடவுளைத் தொழவேண்டு மென்ரோ அல்லது யாகங்கள் செய்து கடவுளைத் திருப்தி செய்ய வேண்டும் என்ரோ எப்பொழுதுமே கூறவில்லை.

ஆனுல் "புத்தசரித்திரம்" என்ற நூலை இயற்றி அஸ்வகோஷர் புத்தர் எப்பொழுதுமே கடவுள் நம்பிக்கை கொண்டவர் அல்லர் அவர் கடவுள் நம்பிக்கையுள்ள ஆஸ்திக தத்துவத்தை எதிர்த்தார் என்று பின்வருமாறு குறிப்பிடுகின்ருர் :

"இவ்வுலகை ஈசன் ஏற்படுத்தி இருந்தால், உலகத்தில் மாற்றங்கள் ஏற்பட இயலாது, அழிவு என்பதற்கு இடமிராது, துயரம், துன்பம் என்பவைகளுக்கே இடமிருக்க முடியாது. ஏனெனில், நல்லதும் கெட்டதும், நல்லொழுக்கமும் தீயொழுக்கமும் அனைத்தும் அவனிடமிருந்தே வந்தவைகளாகும்.

"துயரமும் இன்பமும் அன்பும் வெறுப்பும் எல்லா மனிதர்களிடமும் இருப்பதால், இவை அனைத்தையும் கடவுள் ஏற்படுத்தினுர் என்றிருந்தால் இவை அனைத்திற்குமே இருப்பிடம் கடவுளே ஆவார்; அப்படியானுல் கடவுளை மாசிலாமணி என்று எவ்வாறு கூறமுடியும்?

"ஈஸ்வரன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தான் என்றால், இறுதியில் அவன் விருப்பத்திற்கு எல்லா மனிதர்களும் அடிபணிய வேண்டுமாதலால், நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும் என்பதற்கு அவசியமென்ன?

"நல்லது என்பதும் கெட்டது என்பதும் இருக்க முடியாது. காரணம் அத்தனையும் அவனே சிருஷ்டித்ததால். இவை அவனிடமும் இருக்கவேண்டும்.

"ஆனால், துயரமும் துன்பமும் வேறுகாரணத்தால் ஏற்படுகின்றன என்றிருக்குமேயாயின் கடவுள் இவ்வுலகை ஏற்படுத்தவில்லை என்பது தான் பொருள், அப்படியானால் இவ்வுலகில் காண்பதனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டவை அல்ல என்றல்லவா பொருளாகும்?

"கடவுள் தான் இவ்வுலகத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று வைத்துக் கொண்டால், அவர் ஏதோ நோக்குடன் அல்லது நோக்கற்று இவ்வுலகைச் சிருஷ்டித்திருக்க வெண்டும். அவர் நோக்குடன் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்றால் அவர் தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளச் சிருஷ்டித்தார் என்றுதான் கூற வேண்டும். அப்படியானால் கடவுள் எல்லா விதத்திலும் சிறந்தவர், பூரணத்துவமடைந்தவர் என்று சொல்ல முடியாது. இதற்குப் பதிலாக அவர் எந்த நோக்கமுமின்றி இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்றால், ஒன்று அவர் பைத்தியக்காரனாக இருக்க வேண்டும் அல்லது பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தையாக இருக்கவேண்டும்.

"இது மட்டுமன்றி, கடவுள் தான் எல்லாவற்றிற்கும் கர்த்தாவாயின் அவரைப் பூசை செய்துவரக் கூடிய, இன்னல்கள் வராமலிருக்க ஈசனைத் தொழவேண்டிய, அவசியம் என்ன? எது வந்தாலும் அவன் செயல் அல்லவா? அவன் செயலைமாற்ற அவசியம் ஏற்பட்டபோது அவனைத் தொழுவதா?

"இது மட்டுமன்றி ஒரு கடவுள் போதாது என்று பல கடவுள்களைத் தொழுவானேன்? பகுத்தறிவின் துணை கொண்டு பார்த்தால் கடவுள் கற்பனையே தவிர உண்மை அன்று என்பது தெளிவாகின்றது. இவ்வாறு முன்னுக்குப் பின் முரணுள்ளவைகளை அம்பலப்படுத்த வேண்டும்'

ஆஸ்திகர்கள், கடவுள் நம்பிக்கை மேலோங்கியதனால் கடவுள்தான் உலகையும் உயிர்களையும் படைத்து, காத்து, அழிப்பவர் என்று கூறிவந்தனரே தவிர, கோவையான தத்துவத்தை அவர்கள் படைக்கவில்லை. ஆகவே, பகுத்தறிவின் அடிப்படையில் கடவுள் நம்பிக்கை அர்த்தமற்றது என்று புத்தர் விளக்கினார், அன்று, அதுவே போதுமானதாக இருந்தது.

எனவே, பௌத்தம் கடவுள் இல்லை, கடவுள் என்பது மனிதனின் கற்பனையே என்று தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளது.

பௌத்த மதமும் தத்துவமும், இல்லாத பொருளாகிய கடவுளை ஏற்பதில்லை என்பதனை நாகார்ஜுனர் ஆணித்தரமாக மிகத் தெளிவாக "மஹாயான சூத்திரம்" என்ற நூலில் எடுத்துரைக்கிறார். இந்த நூல் அவர் சிஷ்யரால் எழுதப்பட்டது என்று கூறப்படுகிறது. நாகார்ஜுனர் அறவுரைகள் அவர் மாணவரால் எழுதிக் கொள்ளப்பட்டு நூல் உருவில் வெளிவந்திருக்க வேண்டும் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

கடவுள் இல்லை என்பதைக் கீழ்க்கண்ட முறையில் மேற்கூறிய நூல் விளக்குகின்றது.

> "சிலர் கடவுள் என்பவர் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்றும் கூறுகிறார்கள். அவரை நாமும் விமர்சனரீதியாகப் பரீட்சித்துப் பார்ப்போம்!"

"சிருஷ்டிகர்த்தா என்பவர் சிருஷ்டிக்கின்றார். நாம் உணரக்கூடிய காரியத்தைச் செய்பவர் சிருஷ்டிகர்த்தா என்று கூறுகிறோம்.

'இதைக்கீழ்க் கண்ட முறையில் தர்க்கம் செய்யலாம்.

'சிருஷ்டிகர்த்தா நாம் உணரக்கூடிய உள் பொருளைச் சிருஷ்டிக்கலாம், அல்லது அப்படி ஒரு இல்பொருள் என்று நாம் உணரக்கூடியதையும் சிருஷ்டிக்கலாம்.

'முதன்முதலாக, அவர்நாம் உணரக்கூடிய பொருளைச் சிருஷ்டித்தார் என்று கூறுவதில் அர்த்தமில்லை உதாரணமாக, மனிதன் உள்பொருள், என்பதை நாம் உணர்வோம். உள்ள மனிதனை மனிதனை மேலும் சிருஷ்டிப்பது என்பதற்கு அர்த்தமில்லை.

'ஆனால், இல்லாததோர் பொருளைக் கடவுள் சிருஷ்டித்தார் என்று வாதாடலாம். இதற்கு நாம் பதில் தருவோம். இல்லாத பொருள்களைச் சிருஷ்டிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். உதாரணமாக, மணலிலிருந்து எண்ணெய் பிழிந்தார், ஆமை முதுகிலிருந்து ரோமத்தை எடுத்தார் (இவைகளைக் கடவுள் செய்தார்) என்றால் இவற்றைச் செய்ய முடியாது. ஏனெனில் மணலிலிருந்து வந்த எண்ணெயை நாம்பார்க்கவில்லை. ஏன? அது இல்லை என்பதுதான் உண்மை, கடவுளும் இதே ரகத்தைச் சேர்ந்தவர்—அதாவது அவர் இல்லை என்பதே.

'இல்லாததோர் பொருளை இருக்கவைக்கும் சக்தி வாய்ந்தவர் கடவுள் என்று வைத்துக் கொள்ளுவோம்.

இதையும் அவர் செய்ய முடியாது. ஏனெனில் இல்லாதது எப்படி இருப்பதாகும்? ஆகவே இப்படி முரண்பட்ட கருத்துகள்—பகல், இரவு; வெளிச்சம், இருட்டு; வாழ்வு சாவு; இவை எப்படி இடம் மாறும்? வெளிச்சமுள்ள இடத்தில் இருள் இருக்க முடியாது, இருளடைந்த இடத்தில் வெளிச்சத்திற்கு இடம் எங்கே? உயிர் வாழ்வது என்ருல் சாகாதிருப்பது என்பது பொருள். ஒருவன் செத்தான் என்ருல் உயிர் இல்லாமற்போனுன் என்பதேயாகும். ஆகவே, இல்லாததற்கும் இருப்பனவற்றுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாததால் இல்லாமையிலிருந்து இருப்பனவற்றைக் கடவுள் சிருஷ்டித்திருக்க முடியாது.

"இது மட்டுமன்றி வேறுபல ஆட்சேபனைகளும் எழுகின்றன.

"சிருஷ்டிகர்த்தா, இல்லாததை இருக்கும் படிச் சிருஷ்டித்தவர் என்ருல் அச்செயல் அவர் பிறந்த பின்னரா அதற்கு முன்னரா?

"தானே பிறக்காமல் அதாவது இல்லாமல் தனக்கு அப்பாற் பட்டதைச் சிருஷ்டித்திருக்க முடியாது. ஏன்? காரணம் அவரே பிறக்கவில்லை என்ருல், மலடியின் பிள்ளை மண்ணை வெட்டமுடியுமா? கடவுளும் இந்நிலையில் தான் இருக்கிருர். அவரே பிறக்காதபோது, அவருக்கு அப்பாற்பட்டதை அவர் எப்படிச் சிருஷ்டிக்க முடியும்?

"இப்பொழுது வேறு சிலவற்றைப் பிரிவு ஆராய்ச்சி செய்வோம். அவர் பிறந்த பின் இவ்வுல கைச் சிருஷ்டித்தார் என்று வைத்துக் கொள்ளுவோம். ஆனால் அவர் எங்கிருந்து பிறந்தார்? அவர் அவரிட

மிருந்தே பிறந்தாரா? அல்லது வேறு எதிலிருந்தோ பிறந்தாரா? அல்லது இரண்டும் கலந்து பிறந்தாரா? தன்னுள் இருந்தும் தனக்கு அப்பாற்பட்டதி லிருந்தும் பிறந்தாரா?

"இவைகளில் முதல் கூறியதை எடுத்துக் கொண்டால், அதாவது, அவர் அவரிடமிருந்தே பிறந்தார் என்ருல் காரணமும், காரியமும் அவராகவே இருக்க முடியாது. வாள் எவ்வளவோ கூர்மையாக இருந்தாலும் தன்னையே வெட்டமுடியாது. நாட்டிய மாடக் கூடிய ஒருவர் எவ்வளவு நிபுணராயினும் தலைமேல் நின்றுகொண்டு நாட்டியமாட முடியாது. இது மட்டுமன்றி உற்பத்திப் பொருள், உற்பத்திக் கருவியாகவே இருக்க முடியாது. தகப்பனே பிள்ளை என்று வாதாடினுல் இந்த வாதத்திற்கு நாம் என்செய்வது?

"கடவுள் வேறு எதிலிருந்தோ தோன்றினுர் என்று வைத்துக் கொள்ளுவோம். இதுவும் அர்த்த மற்றது, ஏனெனில் கடவுளே இல்லாதபோது வேறு என்னதான் இருந்திருக்க முடியும்?

"கடவுள் பாரம்பரியத்தில் தோன்றினுர் என்று வைத்துக் கொள்ளுவோம். அதாவது, பல கட்டங் களுக்குப் பிறகு கடவுளாகத் தோன்றினுர் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானுல் "அநாதி"— அதாவது ஆதியும் அந்தமும் இல்லாத கடவுளுக்கு முன் ஏதேதோ இருந்தன என்று பொருளாகும். ஆதியே இல்லாததொன்றுக்கு முடிவும் இல்லையாத லால், அது தொடர்ந்து இருக்கிறது என்று கூறமுடி யாது. வித்தே இல்லை என்ருல், செடி எங்கே, செடி மரமாவது எங்கே, மரம் பூப்பது எங்கே, மரம்

காய்ப்பது எங்கே, மரம் பழுத்தல் எங்கே? இதே முறையில், கடவுள் என்பது ஒன்று இல்லை என்பது தெளிவு. எனவே,. எவ்விதம் பார்த்தாலும் சரி, இவ்வுலகைச் சிருஷ்டித்த கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கூறுவது சுத்த அபத்தமாகும்"

ஆகவே, கடவுள் கற்பனையே தவிர வேறு ஒன்றுமில்லை என்று நாகார்ஜுனர் விளக்கிக் கூறுகிறார்.

இன்று நாத்திகர்கள் நாகார்ஜுனர் வாதாடுவது போல் வாதாடுவதில்லை என்பதில் சந்தேகமில்லை. பெரியார் கூறிய காரணங்கள் விஞ்ஞான ரீதியாக உள்ளவை. ஆனால், இங்கு நாம் கூற விரும்புவது பௌத்த மதமும் தத்துவமும் கடவுள் நம்பிக்கையை முழுக்க முழுக்க எதிர்த்தன என்பது மட்டுமே.

புத்தர் உலகம் நிரந்தரமாக மாறிக் கொண்டே இருக்கிறது என்று மட்டுமல்லாமல் உலகத்தையும் அதில் நடைபெறக் கூடியவற்றையும் எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதையும் தம் சீடர்களுக்கு விளக்கினார்.

"இவ்வுலகம், உண்டு, இல்லை என்று இருவகைக் கூறுள்ளது. ஆனால் உண்மையை அறிவைக் கொண்டு பார்த்தால், இவ்வுலகில் இல்லை என்பதற்கு இடமில்லை. அறிவைக் கொண்டு உண்மையை இவ்வுலகில் பார்க்குமிடத்தில், உண்டு என்று கூற இடமில்லை".

இதன் பொருள் என்ன? ஆதியும் அந்தமும் இல்லாப் பொருள் இல்லை, எல்லாம் மாறி மாறிக் கொண்டே இருக்கின்றன—பழையன கழிவதும் புதியன தோன்றுவதும் இயற்கையின் விதியேயாகும் என்பதே.

கம்யூனிஸ்டு இயக்கத் தந்தைகள் இருவரில் ஒருவராகிய எங்கெல்ஸ் கூறுகிறார் :-

"...இயற்கையில் அனைத்தும், மிகச் சிறியதிலிருந்து பெரியது வரை...அதன் இருத்தல் சதா தோன்றலும், மறைதலும், ஓய்வின்றி மாறுதலும் விடாமல் அசைவும், ம்ாற்றமும் கொண்டதாய் உள்ளது".

கம்யூனிஸ்டு தத்துவக் கொள்கையில் முக்கியமானது பொருள்முதல்வாதம் அல்லது 'டைலக்டிகல் மெடீரியரிஸம்" என்பது. பௌத்த தத்துவ ஞானிகள் அறவுரைகளில் பொருள்முதல்வாதக் கருத்துகள் பொதிந்திருப்பதைப் பார்க்கலாம்.

நாகார்ஜுனர் இப் பிரபஞ்சம அனைத்தும் 'சூன்யம்'—அதாவது ஒன்றுமே இல்லை என்ற கருத்தைக் கொண்டவர். ஆகவே, கடவுள் இப் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று கூறி வந்த ஆஸ்திக தத்துவத்தை அவர் தம் கோணத்திலிருந்து எப்படிக் கடவுள் இல்லை என்பதை விளக்கினார்.

நாகார்ஜுனருக்குப் பின்வந்த பௌத்த தத்துவ ஞானிகள் கடவுள் இல்லை என்பதனைத் தத்துவார்த்த ரீதியாக எடுத்துரைத்தனர்.

'சாந்திதேவர்' என்ற தத்துவஞானி அவருடைய பிரதித்தி பெற்ற 'போதிசாரியாவதாரம்' என்ற நூலில் கூறுகிறார்:

> 'ஆஸ்திகர்கள் நாம் கடவுளை அறிய முடியாது, அவர் மிகப் பெரியவர் என்கிறார்கள். இதன் பொருள் என்ன? அவர் கல்யாண குணங்களையும் நாம் அறிய முடியாது, ஏனெனில் நமது புத்திக்கு அவை எட்டாதவை என்பதே அல்லவா? ஆகவே, அவர் இருத்தலையும் நாம் அறியோம். இவ்வுலகை அவர் சிருஷ்டிக்கும் தன்மையையும் அவருக்கு நாம் அளிக்க முடியாது. (ஆகவே, ஆஸ்திகர்கள் தங்கள் கருத்தாகிய கடவுளை

விட்டு விடவேண்டும், அல்லது இனிமேலாவது கடவுள் இருக்கிறார் என்றும், அவர் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்றும் கூறக் கூடாது.'

'இது மட்டுமன்றி, கடவுளின் குணங்களை நாம் அறிய முடியாது, ஆனால் அவர் செய்கைகளை நாம் அறிய முடியும் என்கின்றனர் ஆஸ்திகர்கள். இதன் பொருள் என்ன? கடவுளுக்குப் பல குணங்களையும், சக்தியையும் ஆஸ்திகர்கள் மறுக்கின்றனர் என்பதே. நியாய-வைசேடிக ஆஸ்திகர்கள் ஆன்மாவும், தனிமங்களும் என்றுமுள்ளவை—அவைகளைக் கடவுள் சிருஷ்டிக்கவில்லை என்கிறார்கள். நமது மூளையில் ஒரு பொருளைப் பற்றிய ஞானம் ஏற்படுகிறது என்றால் அப்பொருளைக் கொண்டுதான் ஏற்படுகிறதே ஒழிய கடவுளால் அல்ல. அவர் அவர்களின் கன்மத்தால் இன்பமும் துன்பமும் ஏற்படுகிறதே ஒழிய கடவுளால் அல்ல. (ஆகவே, ஆஸ்திகர்கள் கடவுளுக்கு பல கல்யாண குணங்களைச் சூட்டுகிறார்களே தவிர, அவருக்கு அளிக்கும் பணியோ அவர் குணங்களை இழிவு படுத்துவதேயாகும்.)

'இது மட்டுமன்றி, கடவுள்தான் விரும்பாமலே ஒரு காரியத்தில் ஈடுபடுகிறார் என்றால், அவர் வேறு யாருக்கோ பணிந்திருக்கிறார் என்றுதான் ஆகும். அப்படியானால் அவர் சுதந்திரமாக உள்ளார் என்று கூறமுடியாது. அப்படி வேறு யாருக்கும் அவர் கீழ்ப்பட்டவர் என்றில்லை என்றால் ஒரே சமயத்தில் சிருஷ்டித்தல், இருத்தல், அழித்தல் என்று மூன்றையும் ஒருங்கே இவ்வுலகத்திற்கு ஏன் செய்யக் கூடாது? ஒரு நிரந்தர, மாற்ற முடியாக் காரணம் எல்லா விளைவுகளையும் ஒரே சமயத்தில் செய்ய வேண்டும்.'

சாந்திதேவர் அன்றிருந்த நியாய-வைசேடிக ஆஸ்திகர்களைத் தாக்குகிறார் என்பது தெளிவு. இவர்கள் அன்று கூறி வந்தது, கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவர், சர்வமயம் என்றெல்லாம்கூறிவிட்டு, ஆன்மாவும் அணுவும் எப்பொழுதுமே இருந்து வந்தவை என்றார்கள். அப்படியானால் கடவுள் இவைகளை ஏற்படுத்தவில்லை என்பதே. அதே போல், உலகில் துயரமும் துன்பமும் கடவுள் ஏற்படுத்தியவையல்ல, அவர் அவர்களின் கன்மத்தால் ஏற்பட்டவை என்றனர். இக் கருத்துகளைத்தான் சாந்திதேவர் எதிர்க்கின்றார்.

நியாயவைசேடிகர்களும் வேதாந்திகளும்தான் இந்திய தத்துவ ஞானிகளில் விடாப் பிடியாக ஆஸ்திகத்தை வலியுறுத்தி வந்தனர். இவர்களில் வேதாந்திகளோ வேதங்கள் கூறுவதால் கடவுள் உண்டு என்று கூறிவிட்டு மனநிறைவு அடைந்தனர். ஆனால் நியாய வைசேடிகர்கள் ஒருபடி மேல் சென்று, கடவுள் உண்டு என்பதைப்பல்வேறு முறையில் ஊகிக்க முடியும் என்று அவர்கள் ஊகங்களை வலியுறுத்தி வந்தனர். ஆனால் அவர்கள் வேதாந்திகள் கூறியது போலக் கடவுளைத் தாம் திரை நீக்கிக் காட்டியுள்ளனர் என்று கூறவில்லை.

ஆகவே, இந்திய தத்துவ ஞானிகள் இடையே கடவுள் உண்டா இல்லையா என்ற வாதம் பிற்காலத்தில் வந்த நியாய வைசேடிகர்களுக்கும் நாத்திகர்களுக்கும் இடையே தான் நடைபெற்றது.

பௌத்த-சமண-பூர்வ மீமாம்சக-தத்துவ ஞானிகள் அனைவருமே நாத்திகர்கள். கடவுள் உண்டு என்பதையோ இவ்வுலகைக் கடவுள் சிருஷ்டித்தார் என்பதையோ அவர்கள் ஏற்க மறுத்தனர்; இவ்விரண்டு கருத்துகளும் எவ்வாறு தவறுடையன என்ற வாதம் அவர்கள் தத்துவ ஞானத்தில் மிக முக்கிய இடம் பெறுகின்றது.

பிற்காலத்தில் தோன்றிய நியாயவைசேடிகர்கள் கடவுள் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் ஆனால் அதிலுள்ள எல்லாவற்றையும் அவர் சிருஷ்டிக்கவில்லை—அவர் அறிவு காரணம் என்றுதான் சொல்ல முடியும்; அணுக்களை, ஆன்மாவை, வெற்றிடத்தை அவர் சிருஷ்டிக்கவில்லை என்று வாதாடினர். அதாவது, மிக கெட்டிக்காரத் தனத்தோடு, விஞ்ஞானத்தையும், இறையியலையும் சேர்த்து ஓர் அவியலாக்கினர்.

9. சமண தத்துவத்தின் நாத்திகம்

சமண மதம் இன்றைக்கும் இந்தியாவில் உயிருள்ள மதமாக இருந்து வருகிறது. பௌத்த மதத்தைவிட சமண மதம் பழைமையானது என்று தத்துவ சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். சமண மதத்தின் அருட் போதகர் 'மஹாவீரர்' என்பவர்; அவர் புத்தர் காலத்தில், புத்தருக்கு மூத்தவராக உயிர்வாழ்ந்து வந்தவர். ஆனால் சமணர்கள் இருபத்துமூன்று "தீர்தங்காரர்கள்" மஹாவீரருக்கு முன் இருந்தார்கள் என்றும், மஹாவீரர் இருபத்து நாலாவது தீர்த்தங்கரர் என்றும் கருதுகின்றனர்.

சமணமதம் கலப்பில்லாத நாத்திகமேயாகும்.

சமண தத்துவப்படி இப்பிரபஞ்சத்தில் எல்லாவற்றையும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்— ஜீவன்கள், அஜீவன்கள், என. அஜீவன்கள் என்பவை— காலம், ஆகாசம் புற்கலம், தர்மம், அதர்மம் ஆகும். இவை அஸ்திகாயங்கள் எனப்படும். தர்மம் அசைவுக்குக் காரணம் என்றும், அதர்மம், அசைவற்ற நிலைக்குக் காரணம் என்றும் பிரபஞ்சமும் உயிர்களும் அணுக் கூட்டங்களால் ஆனவை என்றும் சமணம் கருதுகிறது. ஒழுக்கம், தீயொழுக்கம், அடாது

செய்தல் முதலியன அனைத்தும் ஜீவன்களுடன் கலந்து அவற்றைக் கஷ்டப்படுத்துகின்றன என்றும், இவைகளை ஒழித்து ஜீவன் முக்திபெறவேண்டும் என்று சமண தத்துவம் கூறுகிறது.

சமணத்தில் கடவுளுக்கு வேலையும் இல்லை; இடமும் இல்லை.

"குணரத்ன" சமண தத்துவ ஞானிகளில் புகழ் பெற்றவர். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

> அவர் கூறுகிறார் : "மனித அறிவைக் கொண்டு பார்க்குமிடத்தில் கடவுள் கற்பனையே தவிர, உண்டு என்பதற்கு உள்ளபடி எவ்வித ஆதாரமும் இல்லை" ஆனால், நியாயவைசேடிகர்கள் மனித அறிவைக் கொண்டு கடவுள் உண்டு என்பதனை உணரமுடியும், ஏனெனில் ஊகம் இதை நிரூபிக்கின்றது என்கின்றனர்.
>
> "கடவுள் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்பது தவறான ஊகமாகும். ஏனெனில் கடவுள் காரணம், உலகம் காரியம் என்றால், எந்தக் காரியமும் சிலகாலம் இருக்கும், சிலகாலம் இராது. அப்படி இவ்வுலகத்தைப் பற்றிக் கூறமுடியுமா? உலகம் உள்ளபடியே உண்டு என்பதுதான் அறிவுள்ள அனைவரின் அநுபவமாகும். ஆகவே ஊகத்தைக் கொண்டு கடவுள் இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்று கூறுவது முற்றிலும் தவறு.
>
> "கடவுளைக்காணமுடியாது ஏனெனில் அவருக்குப் பூத உடலில்லை என்று ஆஸ்திகர்கள் கூறுகிறார்கள். அப்படியானால், ஆன்மா போன்றவர். ஆன்மாவுக்கு பூத உடலில்லை என்றால் நல்லதும் செய்ய இயலாது. கெட்டதும் செய்ய இயலாது. ஆகவே

ஆன்மாவைப்போல் உள்ள கடவுள் இவ்வுலகைச் சிருஷ்டித்திருக்க முடியாது."

மேலும் குணரத்தின கூறுகிறார் :

"கடவுள் இவ்வுலகை ஏற்படுத்தியிருக்க முடியாது, காரணம் அவரிடம் எவ்வித கருவியும் கிடையாது : குயவனிடம் பானை செய்யும் சக்கரம் போல்..."

"கடவுள் இவ்வுலகைச் சிருஷ்டித்திருக்க முடியாது, ஏனெனில் அவர் சர்வம்யாமி—வெற்றிடத்திலும் அவர் உள்ளார்"

"கடவுள் இவ்வுலகை ஏற்படுத்தியிருக்க முடியாது, ஏனெனில், அவர் ஏகாந்தர், வெற்றிடம் போல".

"ஆதியும் அந்தமும் இல்லாக் கடவுள் என்று ஆஸ்திகர்கள் கூறுவது முற்றிலும் தவறானது. ஏனெனில் உலகத்தைச் சிருஷ்டிப்பதும், அதை அழிப்பதும் அவர் திருப்பணியாக இருந்தால் இந்தக் குணங்கள் அவரையே பாதிக்கும். ஆகவே ஆதியும் அந்தமும் இல்லாமலிருக்க முடியாது. எனவே, இவ்வுலகத்துக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்பது தான் பொருள்" என்கிறார் குணரத்தின.

இந்திய தத்துவ ஞானம், இன்று இவ்வுலகில் பெரும்பாலோர் நினைப்பது போல ஒரே கருத்துடையது அல்ல; அதாவது கடவுள் உண்டு, எல்லாம் ஈசன் செயல் என்பனவற்றை எல்லாத் தத்துவங்களும் ஏற்றுக் கொண்டன அல்ல. ஆரம்ப கட்டத்திலிருந்து ஆஸ்திகர்களும் நாத்திகர்களும் இருந்து வந்துள்ளனர் என்பது தெளிவு.

10. உபநிஷதமும்—கடவுளும்

உபநிஷதத்தில் கடவுள்—'பிரமம்' என்பது ஆன்மா விற்குச் சமனாக்கப்பட்டுள்ளது. 'பிரமம்' தான் இறுதி உண்மை என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. இறுதி உண்மையை உணரத்தான் இம்மானிடம் பிறவி என்கின்றன.

உபநிஷத்தின் மகாவாக்கியங்கள் மூன்று : அவை யாவன.

'தத் துவம் அசி'
(நீதான் அது)
'அகம் பிரம அஸ்மி'
(நான் பிரமம்)
ஸோகம் அஸ்மி
(நானே அவன்)

எனவே உபநிஷதங்களின் தத்துவார்த்த கண்ணோட்டம் இறுதி உண்மை காண்டல். ஆன்மாவுக்கும் பிரமத்துக்கும் உள்ள உறவையும் பிரமத்தின் பரிணாம வளர்ச்சியையும் உபநிஷதங்கள் விளக்குகின்றன. எனவே, இதன் அர்த்தமென்ன? இப்பூவுலகம் உண்மை அல்ல என்பதே. முக்கிய உபநிஷதுகள் பதின்மூன்று என லாம். இவைகளில் சாந்தோக்கிய உபநிஷதம், பிரக தாரண்யக உபநிஷதம் மிகப் புகழ் பெற்றவையாகும். கதா, ஈசா, கேன, முண்டகம் என்பவையும் மிக முக்கியமானவை என்றும் வேதாந்திகள் கூறு கின்றனர்.

உபநிஷது என்ருலே, "சத்யஸ்ய சத்தியம்", "வாய்மையின் வாய்மை" என்று பொருளாகும் என்று சுவாமி நிகிலானந்தர் கூறுகிருர்.

உபநிஷதுகள் உண்மையின் உண்மையை எடுத்துரைக்கின்றன என்பார்கள்.

உபநிஷதுகள் பிரதானமாக 'பிரமம்' என்பதைப் பற்றி விவாதிக்கின்றன.

பிரமம் இரு கோணங்களைக் கொண்டது—ஒன்று பரப்பிரமம் மற்ருென்று அபரபிரமம், ஒன்று உயர்ந்தது மற்ருென்று தாழ்ந்தது.

பிரஹதாரண்யக உபநிஷது இவ்விரு வடிவங்களையும்,

"கழிவு நீக்காததும், நுட்பமானதும், இறப்பதும், இறவாமலிருப்பதும். எல்லைக்கடங்கியதும், எல்லையற்றதும், குறிப்பிடத்தக்கதும், குறிப்பிட இயலாததும்" பிரமமாகும் என்கின்றது. சங்கரர் பிரமம் என்பதற்குப் பின்வருமாறு இலக்கணங் கூறுகிருர்:

"பிரமத்தை இரு வடிவங்களில் காணலாம். முதலில் பல குணங்களால் நாமமும் வடிவமும் எண்ணற்ற பரிணும வளர்ச்சியடைவதால், குறிப்பிட்ட நிலையில் காணலாம். அடுத்தபடியாக, இதற்கு நேர் மாருக, அதாவது எவ்வித குறிப்பிட்ட நிலையுமின்றி இருப்பதைக் காணலாம்... ஒருவர் வேறு எதையும் பார்க்கவில்லை, வேறு எதையும் கேட்கவில்லை, வேறு எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை, என்ருல் அதுதான் ஆதியும், அந்தமும் இல்லாததாகும். ஒருவர் வேறு எதையோ பார்க்கிருர், வேறு எதையோ கேட்கின்ருர், வேறு எதையோ புரிந்து கொள்ளுகிருர் என்ருல் அதுதான் முடிவுடையதாகும்.

ஆதியும் அந்தமும் இல்லாதது அழியாததாகும். முடிவுடையது அழிவு உடையதாகும். இதுதான் பிரமம்—கடவுள்.

ராமானுஜர் கூறுவதாவது:

"எவ்வித குறைபாடுமின்றி கருணையே வடிவமாகக் கொண்டுள்ளதுதான் பிரமம்."

ஆகவே ஆதிசங்கரர் பிரம்மம் இலக்கணங்களுக்கு அடங்காத பரம்பொருள் என்கிறார், ராமானுஜரோ எல்லா மேலான குணங்களுக்கும் இருப்பிடம் என்கிறார். நிர்குண பிரமம், நிருபாதிக பிரமம், அறிவைக் கொண்டு உணரக் கூடிய பிரமம், சச்சிதானந்த பிரமம், என்று பிரித்து, பிரமம் உணர்வாகவும், பிரமம் ஆனந்தக் கடலாகவும் உள்ளதாக, இருப்பதாகக் கருதி, ஆனால் அனைத்துமே ஒரே பிரமம்தான் என்று உபநிஷதுகள் கூறுகின்றன என்று தத்துவாசிரியர்கள் கூறுகிறார்கள்.

கதா உபநிஷத்தில் நசிகேதன் யமனைக் கேட்கின்றார்,

'மனிதன் இறந்தால், அவன் அமரனாகி விட்டான் என்று சிலரும, அதுதான் முடிவு என்று சிலரும் கூறுகின்றனர். இந்த விஷயத்தை நீங்கள் விளக்க வேண்டும், இதுதான் என் மூன்றாவது வரம்." இதற்கு யமன் பதிலளிக்கிறார்.

'இந்த விஷயத்தில் தேவர்களுக்கு ஒரு காலத்தில் சந்தேக மிருந்தது. ஆன்மா மிக சூட்சுமப் பொருள், அதைப் புரிந்து கொள்ளுவது அவ்வளவு லேசானதல்ல.",

"வேறு என்னவரம் வேண்டுமானாலும்கேள், அதை நான் தருவேன், உலகத்தை ஆளவைப்பேன், பெண்களும்

சந்ததிகளைக் கொடுப்பேன், எது வேண்டுமானாலும் கேள்!" என்கிறார் யமன்.

'எனக்கு வேறு எதுவும் வேண்டாம். நான் கேட்ட கேள்விக்கு உண்மையை விளக்கிச் சொன்னால் அதுவே போதும்!' என்கிறார் நசிகேதன்.

என்ன சொல்லியும் நசிகேதன் அசையாமலிருப்பதைக் கண்ட யமன் கூறுகிறார்.

> 'கீழானவர்கள் ஆன்மாவைப் பற்றிக் கூறினால், அதைப புரிந்து கொள்ள முடியாது. ஆனால், ஆன்மாவுடன் இரண்டறக் கலந்தவர் ஒருவர் கூறினால், எந்தவித சந்தேகமும் ஏற்பட இடமிராது. ஆன்மா மிகமிக நுட்பமானது. அதை வாதப் பிரதிவாதத்தால் உணரமுடியாது.'

இவ்வளவும் சொல்லியபிறகு யமன் 'பிரமம்' அல்லது 'ஆன்மா' என்பதை 'ஓம்' என்ற சப்தத்தால் குறித்தார் என்று கதா உபநிஷதம் கூறுகிறது

சகுண பிரமத்தைத் தொழுபவர் இறந்த பின்னர் பிரமலோகத்திற்குச் செல்வார்கள். ஆனால் பரம் பொருளை உணர்ந்தவர்கள் இறந்தபின் பரம்பொருளுடன் ஏகமாய் விடுவார்கள். அவர்களுக்குப் பிறப்பு, இறப்பு என்பது இராது என்றார் யமன்.

ஆகவே, பிரமம் (கடவுள்) ஆன்மா இரண்டும் ஒன்றே என்பதனைக் கதா உபநிஷது தெளிவு படுத்துகிறது.

கேன உபநிஷதமும் பிரமத்தைப் பற்றியதே. இதையும் சுருக்கமாக இங்குப் பார்ப்போம்.

'சொற்களால் சொல்ல முடியாது, சொற்களைச் சொல்ல வைப்பதுதான் பிரமம், மானிடர் தொழுவது அல்ல.

'எண்ணத்தால் எட்ட முடியாது. ஆனால் எண்ணத்தை உணர வைப்பது—அதுதான் பிரமம்—மானிடர் தொழுவது அல்ல'.

'பிரமத்தை உணராதவன் அதை உணருகின்றான் பிரமத்தை உணர்ந்தவன் உணர்ந்தவனாக மாட்டான். அதை உணர்ந்தவர்கள் அதை உணர முடியாது, உணராதவர்கள்தான் உணர முடியும்.'

இந்த உபநிஷதை நன்கு உணர்ந்தவன் எல்லாப் பாபங்களையும் உதறித் தள்ளி, எல்லையற்ற பரம்பொருளை அடைகின்றான், என்று கதா உபநிஷது முடிவடைகிறது.

முண்டக உபநிஷதம் பிரமத்தைப் பற்றிக் கூறுவதைப் பார்ப்போம்,

'தேவர்களில் முதல்வனான பிரம்மன், இப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து, தன் மூத்த மகனான அதர்வனுக்குப் பிரமத்தைப் பற்றிய அறிவை ஊட்டினார்'.

'பிரமத்தைப் பற்றிய ஞானத்தைப் பிரம்மா அதர்வனுக்கு ஊட்ட, அதர்வன் பண்டைக் காலத்தில் அங்கிருக்குச் சொல்ல, அங்கிர் பாரத்வாஜ பொதுக்குடி மரபுக் குழுவைச் சேர்ந்தவராகிய சத்யவாஹாவிற்குக் கற்பிக்க, அவர் அங்கிரஸ்சுக்குக் கற்பித்தார்.'

'பிரமம் பரிசுத்தத்தால் விரிவடைகிறது. இதிலிருந்து, ஆதிப் பொருள் ஏற்படுகிறது, பொருளிலிருந்து 'பிராணன்' (உயிர்) ஏற்படுகிறது, உயிரிலிருந்து எண்ணம் தோன்றுகிறது, எண்ணத்திலிருந்து தனி

மங்கள் ஏற்படுகின்றன, தனிமங்களிலிருந்து உலகங்கள் ஏற்படுகின்றன, அவைகளிலிருந்து காரியங்கள், காரியங்களிலிருந்து அவைகளின் அழியாக் கனிகள்.' இங்குக் கவனிக்க வேண்டியது 'காரியங்கள்' என்ற சொல். சுவாமி நிகிலானந்தர் விளக்க உரைப்படி, காரியங்கள் என்பதற்குப் பொருள்.

'அவரவர்களின் குல வாழ்க்கையும் ஏற்பட்டுள்ள பணிகளும்."

ஆகவே, குலமும், ஜாதியும் உலகில் அவரவர்கள் செய்ய வேண்டிய வேலையை நிர்ணயிக்கின்றன.

தைத்திரிய உபநிஷதம் கூறுவதைப் பார்ப்போம்.

'பிரமம் இல்லை என்று ஒருவன் கூறினால் அவனே இல்லையாகிறான். பிரமன் உண்டு என்பதை அவன் உணர்ந்தால், இவ்வாறு உணரக் கூடியவர்கள் பிரமம் உண்டு என்பதை உணர்வார்கள்'.

அளவை இயலுக்கோ பகுத்தறிவுக்கோ எப்படி இது பொருந்தும் என்பதை விளக்கவும் வேண்டுமா!

'பிரமம் மட்டுமே உண்மை. அது மட்டுமே உள்ளபடியே உள்ளது. அறியாமையினால் காணக்கூடியவை மாறிக்கொண்டிருக்கும். நாமமும், வடிவமும், உண்மையில் ஒன்றுமே இல்லை, அவை என்றும் அழியாத, எவ்வித மாற்றத்திற்கும் இரையாகாத பிரமமேயாகும்.'

'அந்த அழியாத பிரமம்தான் முன்னேயும் அப்பிரமம்தான் பின்னேயும் அப் பிரமம்தான் வலப் பக்கத்திலும், அந்தப் பிரமம்தான் இடது பக்கத்திலும் உள்ளது. பிரமம்தான் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளது; இப்பிரபஞ்சமே அந்தத் தலை சிறந்த பிரமமாகும்.' என்று முண்டக உபநிஷதம் கூறுகிறது.

மீண்டும் தைத்திரிய உபநிஷத்துக்குச் செல்லுவோம்.

'வருணன்' மகன் 'பிருகு' தன் தகப்பனிடம் சென்று கேட்டான் 'போற்றத் தக்க ஐயா! பிரமத்தைப் பற்றி எனக்குக் கற்பியுங்கள்.' என்று. வருணன் மகனுக்குக கூறினர் :

'உணவு, உயிர்மூச்சு, கண், காது, எண்ணம், பேச்சு இவை அனைத்தும் எதிலிருந்து பிறக்கின்றனவோ, இவை கரைந்த பின் எதில் கலந்து மறைகின்றனவோ—அதை உணர முற்படு. அதுதான் பிரமம்.'

இதற்குப் பிறகு உணவு பிரமம் என்பதை உணர்ந்த பின் மகன் தந்தையைக் கேட்டான் :

'போற்றத் தக்க ஐயா! பிரமத்தைப் பற்றி எனக்குக் கற்பியுங்கள். 'உயிர் மூச்சு, பிரமம்' என்ருர். இதை உணர்ந்தன்,

"போற்றத் தக்க ஐயா! பிரமத்தைப்பற்றி எனக்குக் கற்பியுங்கள்" என்ருன் மகன்.

இவ்வாறு படிப்படியாக பிரமம் எண்ணம் என்றும், பிரமன் அறிவு என்றும், பிரம்மம் பேரின்பம் என்றும், தைத்திரிய உபநிஷதம் கூறுகிறது. சாந்தோக்கிய உபநிஷதம் கூறுவதாவது; "ஒரு மனிதன் நித்திரையில் ஐம்புலன்களும் வேலை செய்யாமல் இருக்க, அவன் எந்தச் சொப்பனமும் காணுமலிருந்தால், அதுதான் அவனுடைய உள்ளுயிர், ஆன்மாவாகும். இது அழிவற்றது, நிர்பய மானது, இதுதான் பிரமம்.'

இனி பிரமத்தைப் பற்றிய மிகப் புகழ்பெற்ற நூலாகிய 'பிரம சூத்திரம்' என்ன கூறுகிறது என்பதனை ஓர் அளவு புரிந்து கொண்டால் இந்திய தததுவ ஞானத்

தில் கடவுள் என்ன பாத்திரத்தை வகிக்கின்ருர் என்பது தெளிவாகும். ஆகவே இப்பொழுது 'பிரம சூத்திர'த்திற்குச் செல்லுவோம்.

11. பிரம சூத்திரம்

இந்திய சமய சாத்திரங்கள் மூன்று முக்கியமான அடித்தளங்கள் மீது கட்டப்பட்டுள்ளன—அவை உபநிஷதங்கள், பகவத்கீதை, பிரம சூத்திரம், இவை 'பிரஸ்தான திரயம்' எனப்படும்.

பிரம சூத்திரம் நான்கு அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் நான்கு பாகங்கள் உண்டு. இவை மேலும் பல பகுதிகளாகப் பிரிந்துள்ளன. சமஸ்கிருதத்தில் சூத்திர வடிவங்களாக அமைந்துள்ள.

உபநிஷத்துகளில் உள்ள தத்துவத்தை முறைப்படுத்தித்தருகிறது. பிரம சூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுதினவர்கள் அனைவருமே, பிரம சூத்திரம் உபநிஷத்துகளின் இரசம், சாரம் என்பதைத் தெளிவாகச் சொல்கின்றனர்.

'பிரம சூத்திரத்தைப் 'பாதராயணர்' என்பவர் சுமார் கி. மு. இரண்டாம் நூற்ருண்டில் எழுதி இருக்க வேண்டும் என்பர் (ராதா கிருஷ்ணன்). சிலர் கி. மு. நான்காம் நூற்ருண்டு என்பர்; மற்றும் சிலர் பல நூற்ருண்டுகள் பிந்தியது என்பர். காலத்தைப் பற்றிய சர்ச்சை இன்னும் முடிவடையவில்லை.

உபநிஷதங்களுக்கு எப்படிப் பலதரப்பட்ட வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பாதராயணர் பிரம சூத்திரத்தில் எடுத்துரைக்கிருர்.

முக்கியமாக "பேதாபேத" உறவு என்பதைப் பல தத்துவ ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதாவது,

ஆன்மா என்பது பிரமத்துக்குச்சரி சமமும் அல்ல சரிசமனற்றதும் அல்ல என்பதே. இவ்விரண்டிற்கும் உள்ள உறவு நெருப்புக்கும் பொறிக்கும் உள்ள உறவேயாகும்.

"பிரம சூத்திரத்தின் வியாக்கியான கர்த்தாக்களும் இந்தப் பேதாபேதக் கோட்பாட்டை ஏற்றுக் கொள் கிறார்கள். இதன் அடிப்படையில்தான் அவர்கள் விளக்க உரைகளும் அமைந்துள்ளன. இவர்கள் அனைவருமே இப் பிரபஞ்சம் உள்ளபடியே உண்மையாகத்தான் இருக் கின்றது என்று கூறுவதோடு, இது கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டது என்றும் கூறுகிறார்கள். தனிப்பட்ட ஆன்மாக்கள் கடவுளின் தோற்றங்கள் என்றும், கடவுள் என்ற பரமாத்மா ஒருவர் இருக்கிறார் என்றும் கூறுகிறார்கள்.

பலர் பலவித விளக்க உரை தந்துள்ள போதிலும், மூவர் தத்துவ உரைகள்தான் பிரதானமாக இன்று இந்திய உபகண்டத்தில் காணப்படும் இந்து சமயமாக விளங்குகின்றன.

சங்கராச்சாரியார் (கி. பி. 788-820) இராமானுஜா சாரியர் (கி. பி. 1127) மாத்துவாச்சாரியார் (கி. பி. 1238) மூவரும் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்க உரை தந்தது மட்டு மன்றி, அவரவர்களின் தத்துவத்தின் அடிப்படையில் மடங்களை ஏற்படுத்தி, அவைகளின் மூலம் இந்து மதத்தை யும், அதன் வழிபாடுகளையும் தீவிரமாகப் பரப்பிவரச் செய்துள்ளனர்.

சங்கராச்சாரியார்

சங்கரர் சிவ அவதாரம் என்று கூறப்படுகிறது. அவர் பிரமசாரி. சமஸ்கிருதத்தில் பெரிய பாண்டித்யம் பெற்றவர். வேதங்களையும், உபநிஷதங்களையும், பிரம

சூத்திரத்தையும் நன்கு பயின்று, விளக்க உரைகள் எழுதியது மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும், இமயம் முதல் குமரி வரை பல இடங்களுக்குச் சென்று, தர்க்கம் செய்து, வாதப் பிரதிவாதத்தில் வென்று பேரும் புகழும் பெற்றார்.

அவர் நிறுவிய மடங்களில் மிகப் பிரசித்தி பெற்றவை, துவாரகை, பூரி, பத்ரி, சிருங்கேரி, காஞ்சி காமகோடி. ஒவ்வொரு மடத்திற்கும் இன்று ஒவ்வொரு சங்கராச்சாரி யார் உண்டு.

சங்கரர், தெய்வீக வாழ்க்கையை அறிவின் அஸ்திவாரத் தின் மீது அமைக்க முயல்கிறார். ஆகவே, எவன் ஒருவன் எந்த நோக்கையும் பூரணமாக விசாரித்து ஒரு நிலை எடுக்க வில்லையோ அவன் பலத்த நஷ்டமடைவான் என்கிறார் சங்கரர்.

உபநிஷதுகளைக் கோவையாகப் படித்தால் அவை அத்வைத கண்ணோட்டத்தைத் தெளிவுபடுத்துகின்றன வென்றும், வேறு எந்தக் கண்ணோட்டமும் பொருந்தாது என்றும் சங்கரர் கூறுகிறார்.

அறிவு பூர்வமாய் உண்மையை உணர்ந்தால் மட்டும் போதாது, அறிவின் இறுதிக் கட்டம் ஆன்மீகக் கொள் கையை அடைவதே என்கிறார் சங்கரர்.

இவ்வுலகைச் சிருஷ்டித்ததும், பேணிக் காப்பாற்றி வருவதும், அழிப்பதும் பிரமம் : அது பல பெயர்களுடன், பல வடிவங்களுடன் உள்ளது, என்கிறார்.

இவ்வுலகம் வேறு ஒன்றிலிருந்து பிரமத்தால் சிருஷ் டிக்கப்பட்டது. இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் பார்க்கு மிடத்தில், கட்டுப்பாடும் முறையும் அடங்கியதாகக் காண்ப தால் அறிவில்லாத இடத்திலிருந்து ஏற்பட்டிருக்க

முடியாது. பிரமம்தான் அறிவின் தலையூற்றாகும். பிரமம்தான் உடனடி அறிவாகும். அது தனித் தன்மையாகவும், நாம் உணரும் எல்லாப் பொருள்கள் மூலமாகவும் பிரகாசிக்கின்றது. அது இல்லை என்று நாம் மறுக்கும் சமயத்திலேயே அது உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகை நாம் பார்க்கும்போது' பிரமம் ஈசுவரனாகத் தோன்றுகிறது. மாயை அல்லது சிருஷ்டிக்கும் சக்தியுடன் பிரமம் சேர்ந்தால் ஈசுவரனாக உலகைப் படைப்பதும், அதை ரட்சிப்பதும் தன் பணியாகக் கொண்டுள்ளது. பிரமம் இவ்வுலகின் பௌதிக காரணமும், நிரண்பட்ட காரணமுமாகக் காட்சி அளிக்கிறது. காரண காரியத்துக்கிடையே எவ்வித வித்தியாசமும் இல்லை.

சங்கரர் கூற்றின்படி இறுதி உண்மை கலப்பில்லா அறிவேயாகும். அதற்கு வடிவம் இல்லை. பிரமத்துக்கு எவ்வித குணங்களும் இல்லை. என்ன என்ன குணங்கள் பிரமத்துக்கு அளிக்கப்படுகின்றனவோ, அவை இல்லை என்பதையும் கூறமுடியும். அறிவுடையோன், அறிவால் உணரப்பட்டது, அறிவு பிரம்மத்தின் மீது சுமத்தப்படுகின்றன. உண்மையை உணர்ந்தால், இப்பேதா பேதங்கள் மறையும்; உண்மை வெளிப்படும்; உண்மை, ஆதியும் அந்தமும் இல்லாதது என்று வேதசாத்திரங்கள் கூறுகின்றன. இவை பிரமத்தின் குணங்கள் அல்ல, ஏனெனில் அவையே பிரமம்.

உள்ளுயிர் தூய உணர்வாகும், பூத உடலுடன் சம்பந்தப்பட்டதல்ல, எல்லையற்றது, ஆதியும் அந்தமும் இல்லாதது, என்கிறார் சங்கரர்.

இவ்வுலகம் தானாகவே உள்ளதல்ல, அது பிரமத்திடமிருந்து தோன்றிற்று. ஆகவே, பிரமத்தைவிட புறஇயல்

மெய்ம்மையில் குறைந்ததேயாகும். தன்னுணர்வுக்கும் பொருளுக்கும் உள்ள உறவை விளக்குவது கடினமே. எனினும் தன் உணர்வுப் பொருள்களுக்குச் சம்பந்தப் பட்டதே.

இவ்வுலகம் சில காலம் இருப்பதால் அது உண்மையே. ஆனால் அது இல்லாத காலமும் இருப்பதால், அது தோற்றமே எனல் வேண்டும். மாயை உண்மையுமல்ல, உண்மை அல்லாததுமல்ல.

மனிதன் ஒரு தோற்றம், பிரமம்தான் உண்மை. இவ்வுலகம் பிரமத்தின் திருவிளையாடல். பிரமத்தின் ஆசை பற்பலவாக உள்ளது என்கிறார் சங்கரர்.

இராமானுஜர்

இராமானுஜர் கி. பி. 1017 முதல் 1127 வரை வாழ்ந்தவர். அவர் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கை நடத்தி, பின்னர் துறவு பூண்டவர். ஆதி சங்கரர் போல இராமானுஜரும் பல மடங்களை நிறுவினார்.

பாதராயணரின் பிரம்ம சூத்திரத்திற்கு இராமானுஜர் விளக்க உரை எழுதினார். ஆழ்வார்களின் பக்தி முறையினால் அவர் ஈர்க்கப்பட்டதால் அவருடைய விளக்க உரையில் இதன் செல்வாக்கைப் பார்க்கலாம்.

தாமிரவருணி, வைகை, பாலாறு, காவேரி, மகாநதி (பெரியாறு) ஆற்றங்கரைகளில் விஷ்ணுவின் பக்தர்கள் தோன்றுவார்கள் என்று பாகவத புராணம் கூறியுள்ளவாறு ஆழ்வார்கள் தோன்றினர் என்று கருதப்படுகிறது. பல்லவ அரசர்கள் ஆண்ட காலமான கி. பி. நான்காம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. ஏழு, எட்டு நூற்றாண்டுகள்

வரை ஆழ்வார்கள் செல்வாக்கு மிகப் பெரிய அளவு வளர்ந்திருந்தது. ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள் பாடிய பக்திப் பாடல்கள் திரட்டு "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" என்பது. வைணவர்களுக்கு இப் பிரபந்தம் தெய்வவாக்கு.

கடவுள் கருணைக் கடல் என்றும் அவர் அருளுவதனைத்தும் பக்தர்கள் தரத்தை ஒட்டியது அல்ல என்றும் ஆனால் நல்லவர்களுக்கு நல்லது செய்வார் என்றும் ஆழ்வார்கள் கூறுகிறார்கள்.

சங்கரர் கருத்துகள் பெரும்பாலானவற்றை ஏற்று இராமானுஜர் கடவுள் கொள்கையை மிகத் திறமையாக வளர்த்துள்ளார். சங்கரர். இராமானுஜர் இருவருமே இந்திய தத்துவார்த்தக் கருத்தோட்ட மரபில் இரு கருத்துகளைப் பிரதிபலிக்கின்றனர். சங்கரர் அத்வைதத்தையும் இராமானுஜர் விசிஷ்டாத்வைதத்தையும் உருவாக்கினர்.

பிரம சூத்திர விளக்க உரையில் சங்கரர் கூறுகிறார்: "தனிமையான ஆன்மா உள்ளபடியே உண்டு என்று கூற முடியாது, அது பிரமத்துக்குச் சரிசமம் என்று கூறும் போதுதான் அது உண்டு எனக் கூற முடியும். ஆனால், எங்களைப் போலச் சிலர் தனி ஆன்மா உள்ளபடியே உண்டு என்ற கருத்தைக் கொண்டுள்ளோம்."

இராமானுஜர் கூறுகிறார்:

"வேதங்கள் வேறு எதன் மீதும் ஆதாரப்பட்டதாக இல்லாவிடினும், புலனுகா விஷயங்களைப் பற்றிக் கூறினும், ஆய்வாராய்ச்சி முறைக்கு உட்பட வேண்டும்; ஏனெனில், அறிவு எம் முறையில் ஏற்பட்டாலும், இறுதி முடிவிற்கு நாம் வர வேண்டுமாயின் ஆய்வாராய்ச்சி முறையே சாலச் சிறந்ததாகும். எல்லா அறிவு முறைகளும் ஆய்வாராய்ச்சி முறையின் அஸ்திவராத்தின் மீதுதான் எழுகின்றன."

இராமானுஜர் பிரமம சர்வவியாபகமானது என்று கொள்வார்.

பிரமம் இறுதி உண்மை என்ற நிலையில் எவ்வித குணங்களுக்கும், இலக்கணத்துக்கும் அடங்காதது என்று சங்கரர் கூறுவதை இராமானுஜர் எதிர்க்கின்றார். அவ்வாறு இறுதி உண்மையை நிரூபிக்க யாராலும் முடியாது, ஏனெனில் உண்மையை உணரும் அறிவு இலக்கணமுடைய பொருளே என்பார் இராமானுஜர்.

நமது அறிவனைத்தும் ஒரு பொருளை ஓட்டியே உள்ளது. நாம் மாயை அல்லது திரிபுக் காட்சி என்று கூறுவதிலும் கூட உண்மையின் வித்து உண்டு.

நாம் காணும் கனவும் கடவுளால் ஏற்படுத்தப் பட்டதே.

பிரமத்துக்கும், ஈஸ்வரனுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. பிரமம்தான் ஈஸ்வரன், அவன்தான் நாராயணன், அவன்தான் விஷ்ணு என்கிறார் இராமானுஜர்.

இறைவனிடத்தில் உயிர்கள் சரணாகதி அடைதல் வேண்டும், அதுவே முத்திக்குவழி என்பார் இராமானுஜர் விதிக்கப்பட்ட கடமைகளை மனிதன் முறையாகச் செய்து இறைவனையே எண்ணித் தியானித்த வண்ணமும் உபாசித்தவண்ணமும் இருப்பது சரணாகதி; இதனைப் பிரபத்தி என்றும் சொல்வர்.

இராமானுஜர் எந்த நிலையிலும் ஆன்மா பிரமனுடன் ஏகமாய் விடாது, அது முக்தியடைந்தபின்னரும் தனித் தன்மை வாய்ந்ததே என்று கூறுகின்றார்.

மாத்வர்

'பிரம சூத்திரத்தை விளக்கி ஆதிசங்கரரும், இராமானுஜரும அத்வைத விசிஷ்டாத்வைத வேதாங்

தத்தை நிலைநாட்டினர். இதற்கு நேர் முரணான துவைத தத்துவத்தை மாத்வர் வலியுறுத்தினார். இந்திய தத்துவ ஞானிகளில் சிலரிடையே மாத்வர் "வாயுபகவான்" அவதார மென்றும், அவர் அவதரித்தது அத்வைத வேதாந்தத்தை ஒழித்து, கடவுள் நம்பிக்கையை வளர்த்து உலகத்தைக் காப்பதற்காகவே என்றும் சொல்லப்படுகிறது. அத்வைத வேதாந்தம், பௌத்தம் போல் நாஸ்திக வாதம் என்றும் அது ஒளிந்த பௌத்தம் (பிரசன்ன பௌத்தம்) என்றும் மாத்வர் கூறினார்.

மாத்வர் கி.பி. 1197 முதல் 1273 வரை வாழ்ந்தார். அவர் பிரமசாரியாகவே சன்னியாசம் கொண்டார்.

சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்றவர். பிரம சூத்ரத்திற்குப் பாஷ்யம் எழுதினார். எல்லாம் வல்ல ஈசன் விஷ்ணு அல்லது நாராயணன் என்று கூறினார்.

பிரம சூத்திரம் எழுதப்பட்டது ஒரே கருத்துடன் என்றும், அது அத்வைதத்தை அம்பலப்படுத்தவே என்றும் மாத்வர் கூறினார்.

பிரமம் இவ்வுலகைச் சிருஷ்டித்தது என்பதனை வேதங்கள் மூலமாகத்தான் உணர முடியும், வேதங்கள் யாராலும் எழுதப்பட்டவை அல்ல, அவை அனைத்துமே தெய்வவாக்காகும் என்று மாத்வர் கூறுகிறார்.

நமது ஐம்புலன்களைக் கொண்டோ அல்லது ஊகத்தின் மூலமோ கடவுளின் கல்யாண குணங்களை உணர முடியாது. வேதங்கள் மூலமாகத்தான் உணர முடியும்.

மாத்வாசாரியாரின் விளக்கம் பின்வருமாறு :

"உலகத்தைப் படைத்தவர் விஷ்ணு அல்லது நாராயணன். பிரமம் பரிபூரண குணம் படைத்தவர்.

அவர் குணங்கள் ஒவ்வொன்றும் எல்லையற்றது அவர், எட்டு காரியங்களாகிய — சிருஷ்டித்தல், ரட்சித்தல் அழித்தல், பரிபாலனம் செய்தல், அறிவு, அறியாமை பந்தம், முக்தி—முதலியவைகளுக்குச் சிருஷ்டிகர்த்தா.

"விஷ்ணு சர்வம் நிறைந்தவர். பிரமம் எல்லாக் குணங்களின் எல்லையற்ற கடல்."

சங்கரர் தத்துவம், புத்தமதம் முகமூடியுடன் வந்த தத்துவமே என்கிறார் மாத்வர்.

கடவுள் மனிதர்கள் போல்உடலுடன் உள்ளவர் என்பது மாத்வரின் கருத்து. இவ்வுலகமும் உள்ளபடி உள்ளதே. வேதங்கள் இவ்வுலகம் ஒரு தோற்றம் என்றோ மாயை என்றோ கூறவில்லை என்கிறார் மாத்வர்.

ஆன்மா பிரமத்துடன் இறுதியில் சேருகிறது என்று கூறுவது சுத்தப் பொய் என்கிறார் மாத்வர்.

இவ்வுலகமும், தனி ஆன்மாக்களும் உள்ளபடியே உள்ளன என்றாலும், பிரம்மத்தை விட்டுச் சுதந்திர மாக இருக்க முடியாது. அவை ஆதியும் அந்தமும் இல்லா தவை என்ற போதிலும், பிரமத்தின் கட்டளைக் கடங்கித் தான் இருக்கின்றன.

முக்தியடைந்த ஆன்மாக்களும், நரகலோகத்திற்குச் சென்றவர்களும், இவ்வுலகில் மீண்டும் பிறப்பதில்லை. பக்திதான் ஒரே மார்க்கம் கடவுளை அடைய.

கடவுளைத் தொழுவது என்பது இருவகையானது. ஒன்று வேதங்களைப் படிப்பது, மற்றொன்று தியானம் செய்வது. இதுதான் மாத்வாசாரியாரின் தத்துவமாகும்.

இந்திய தத்துவ சாத்திரப்படி இவ்வுலகம் நிரந்தர தொடர்ச்சியான சம்பவம் என்றும், எதுவும் அப்படியே

இருப்பதில்லை என்றும் தெளிவாகின்றது. சம்பவங்கள் தொடர்ந்து வருவதும் மறைவதும், பழையன கழிந்து, புதியன மலர்வதும், புதியன பழையனவாக மாறிக் கழிவதும், புதியன தோன்றுவதும் தான் உலகம். இதைத் தான் பௌத்த மதமும் கூறுகின்றது.

மாயா உலகம் என்று இந்திய தத்துவம் கூறுகிறது என்றால், அது சாஸ்வதமல்ல, இன்றிருப்பது நாளை இராது என்பது தான் பொருள்.

இவ்வுலகம் வெறும் பொட்டல் காடு அல்ல. இவ்வுலகம் துன்பம் மட்டுமே கொண்டதும் அல்ல. மனித வாழ்வு ஏதோ தற்செயலாக ஏற்பட்ட குருட்டுத்தனமான சம்பவங்களின் விளைவல்ல. சுய உணர்வு கொண்ட ஆன்மாவிற்கும், உள்ளபடி உள்ளவை அனைத்திற்கும் இடையே ஒரு உறவு உண்டு. அறிவெழுச்சி பெற்ற எண்ணங்கள் மாற்றும் சக்தி பெற்றவையே.

இவ்வுலகம் பிரமத்துக்கு அப்பாற்பட்டதல்ல. இவ்வுலகமே எல்லாம் என்று எண்ணுவது மாய வலையில் சிக்குவதேயாகும்.

பிரமம் துவைதம் (இரண்டு) அல்ல. காணப்படும் அனைத்துமே துவைதமாகும், எதார்த்தப் பிரபஞ்சத்தில் மூன்று உண்டு—நாமம், வடிவம், செயல். இம்மூன்றும ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றன. உண்மையில் இம் மூன்றும் ஒன்றே.

இப்பிரபஞ்சம் அனைத்தும் வெறும் தோற்றம்—வெறும் மாயை என்று கூற ஆதாரமே இல்லை.

அப்படித் தோற்றமாகவும், மாயையாகவும் இருந்தால் இதைச் சிருஷ்டித்தது ஏதோ தனிப் பொருள் அல்ல. மாறாக, அது மஹேஸ்வரனே.

ஈஸ்வரன் என்பது சிருஷ்டிக்கும் சக்தி வாய்ந்த பிரமமேயாகும்.

12. பகவத் கீதை

பகவத்கீதை, நம் நாட்டில் இந்து மதத்தைப் பின்பற்றுவோர்களால் தெய்வீக நூல்களில் தலைசிறந்தது என்றும், அதன்படி நடப்பதே இந்து தர்மசாத்திரப்படி நடப்பதாகும் என்றும், கருதப்படுகிறது. கீதைக்கு எண்ணற்றவர்கள் விளக்க உரை எழுதியுள்ளனர். அவரவர்களின் தத்துவார்த்த எண்ணங்கள் என்னவோ அவைக்கு ஒத்தாற்போல் கீதையை வியாக்கியானம் செய்துள்ளனர்.

சங்கரர் பாஷ்யம் இன்று நமக்குத் தெரிந்தவரை முதல் விளக்க உரையாக இருக்கின்றது. ஆனால் சங்கரர் அவருக்கு முன்னோர்கள் விளக்க உரைகளை விமர்சனம் செய்து, அவற்றுள் உள்ள தத்துவார்த்தக் கொள்கைகளைத் தவறு என்று எடுத்துக் காட்டுவதால், ஆதிசங்கரருக்கு முன் கீதாபாஷ்யங்கள் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

சங்கரர் தம் பாஷ்யத்தில் பிரதானமாக ஒரு விஷயத்தை வலியுறுத்துகிறார். உண்மையான அறிவு வேதக்கடமைகளுடன் சேர்க்க முடியாது என்றும் மனிதன் வேதக் கடமைகளான, தவம், யாகம், தானம், முதலியவைகளின் மூலம் உண்மையான அறிவைப் பெற்ற பின்னரும் பிரமம் சர்வமயம் என்பதை உணர்ந்த பின்னரும் அக்கடமைகளையே அறியாமையினால் தொடர்ந்து செய்து வருகிறான் என்றால், அச்செயல்கள் உண்மையான அறிவுக்கு முரண்பட்டதேயாகும் என்றும் சொல்லுகிறார்.

ஆகவே சங்கரர், கீதை பிரதானமாக இந்த விஷயத்தையே வலியுறுத்துகிறது என்று கூறுகிறார்.

இவ்வாறு சங்கரர் கூறும்போது அவருக்கு முன் எழுதப்பட்ட கீதாரகஸ்யங்களில் உள்ள தவருன கருத்துகளை விமர்சிக்கிருர்.

அறிவை அடைந்த ஞானி முக்தி பெறுகிருனே தவிர, இதற்கு அவன் அறிவே காரணம் வேதக் கடமைகள், அல்ல என்று சங்கரர் கூறும்போது, கீதையின் சாரமும் இதுவே என்கிருர். இதன் மூலம் சங்கரர் வேதாந்த தத்துவ ஞானத்தை வலியுறுத்துவதும் அல்லாமல் கீதையும் இதைத்தான் கூறுகிறது என்கிருர்.

வேதாந்த தத்துவசாத்திரத்தை எதிர்ப்பவர்கள் சங்கரர் கூறுவது முற்றிலும் தவறு என்று வியாக்யானம் செய்கின்றனர். அறிவுபடைத்த கிருஷ்ண பரமாத்மாவே தானே சுமத்திக்கொண்டதன் கடமைகளைச் செய்ததானது எல்லோரும் அவரவர் கடமைகளைச் செய்யவேண்டும் என்பதனை எடுத்துக் காட்டவே ஒழிய வேறு ஒன்றுமில்லை என்று சங்கரர் கூறியதை வியாக்கியானம் செய்கின்றனர்.

இராமானுஜர் குரு 'யமுனைச் சாரியார்' என்பவர். அவர் கி. பி. 906 ல் பிறந்தவர். அவர் கீதையின் சாரம் என்று சில சமஸ்கிருத கவிதைகளை எழுதினுர். அவர் கூறுவதாவது : "கீதையின் முக்கிய நோக்கம் பிரமம் நாராயணன் எனக் காட்டுவது; அவனைப் பக்தியின் மூலம் தான் அடைய முடியும், பக்தி என்ருலேயே அவரவர் குலக்கடமைகளைச் செய்வது. பிரமம் பற்றிய அறிவே உண்மை அறிவு; வைராக்கியமாக உலக இன்பங்களை வெறுப்பது". இராமானுஜரும், அவர் பாதையிலேயே சென்று ஒருமைக் கொள்கை ஆஸ்திகத்தை வலியுறுத்துகிருர். இராமானுஜர் கூறுவதாவது:

'தெய்வீக நூல்கள் வலியுறுத்துவதனுலும், தெய்வீக நூல்கள் கடவுளின் ஆக்ஞைகளானபடியாலும், அவ

ரவர் குலக்கடமைகளைச் செய்ய வேண்டும் என்று தெய்வீக நூல்கள் கூறுகிறபடியாலும் இது தவிர்க்க முடியாதது என்று கீதை கோடிட்டுக் காண்பிக்கின்றதனாலும் கர்ம யோகம் ஞானயோகத்ததவிடச் சிறந்தது'

மாத்வாச்சாரியாரும் பகவத் கீதைக்குப் பாஷ்யம்— விளக்க உரை எழுதியுள்ளார். முக்திபெற வேண்டும் என்றால், பக்தியின் மூலமும், அன்பின் மூலமும்தான் பெற முடியும் என்பது இவர் கருத்து. இந்த விளக்க உரையில் "கீதையில் முதன்முதலாக 'அவ்யக்தா' என்ற சமஸ்கிருதச் சொல் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆன்மாவானது 'அவ்யக்தா'—அதாவது, பிரத்யட்சமாகாதது. சிந்திக்க முடியாதது, எவ்வித மாற்றமும் அடையாதது. ஆதியும் அந்தமும் அற்றது என்று கூறப்படுகிறது. உபநிஷத்துகளும், வேதங்களும ஆன்மாவைப் பற்றி இவ்வாறு கூறவில்லை. ஆன்மா நிரந்தர உணர்வு பெற்றது. என்று உபநிஷதங்களும், வேதங்களும் கூறுகின்றன. கீதையில் 'பிரமம்' என்பதற்கு மூன்று அர்த்தங்கள் உண்டு. ஒரு இடத்தில் 'பிரமம்' 'பிரக்ருதி' எனப்படுகிறது, மற்றொரு இடத்தில் 'கடவுள்' எனவும் மீண்டும் ஓர் இடத்தில்,. 'வேதங்கள்' எனவும் பொருள்படுகிறது". இது சங்கரர் கருததுகளுக்கு முரண்படுகின்றது.

குருக்ஷேத்திர யுத்தத்தில் கடவுளே கிருஷ்ணனாக அவதரித்து அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம் 'கீதை' என்று மகாபாரதம் கூறுகிறது. பாண்டவ வீரன் அர்ஜுனன் குருக்ஷேத்திர யுத்த களத்தில் நின்று கொண்டு "என் உறவினர், சொந்தக்காரர்களை எப்படிக் கொல்வேன்", என்று சோர்வடைந்து, தன் கையில் ஏந்திய காண்டிபம் என்ற வில்லை எறிந்தானும். இதைக் கண்ட கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்கத் தொடங்கினர்.

"உன் அஞ்ஞானத்தினுல் எப்படிக் கொல்லுவது என்று கேட்கிருய். ஆன்மாவை யாராலும் கொலல இயலாது, அது அழியாப் பொருளாகும். அதுமட்டுமன்றி சாதாரணமாகப் பார்த்தாலும் நீ க்ஷத்திரியனுனபடியால் யுத்தகளத்தில் போராட வேண்டியது உன் கடமையாகும்" என்கிருர் கிருஷ்ணபகவான்.

ஆகவே, கீதையின் அடிப்படைத் தத்துவம் அவரவர் குலக்கடமைகளைச் செய்ய வேண்டும் என்பது. தன் வேலை எவ்வளவு கீழ்த்தரமானதானுலும் சரி, மேல் ஜாதிக்காரன் வேலையைத்தான் திறப்படச் செய்ய முடியும் என்றிருந் தாலும் சரி, தன் குலவேலை, எவ்வளவு இழிவாயினும் செய்ய வேண்டும். தன் குலவேலையை விட்டு வேறு வேலை செய்வது தீமையைத் தான் தரும். பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூததிரன் என்பவர்களுக்கு அவரவர்கள் இயற்கைக் குணங்களை ஒட்டித்தான் குலவேலைகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. எனவே, ஐம்புலன்களையும் அடக்கிக் கொள்ளுதல், எண்ணதளைக் கட்டுப்படுத்தல், சகித்தல், பொறுமை, சுத்தமாயிருத்தல, உலக ஞானம், தத்துவார்த்த அறிவு, இவை அனைத்தும் ஒரு பிராம்மணனுடைய இயற்கைக் குணங்களாகும். பேராண்மை, தைரியம், சகிப்புத் தன்மை, திறமை, யுத்தகளத்திலிருந்து ஓடா திருத்தல், பரிசளித்தல், பிரபுத்தன்மை—இவை அனைத்தும் க்ஷதகிரியனின் இயறகைக் கடமைகளாகும். இதேபோல், வைசியன், சூத்திரன் இயற்கைக் கடமைகள் உள்ளன, வேளாண்மையைக் கவனிப்பதும், ஆடுமாடுகளைப் பராமரிப்பதும், வியாபாரம் செய்வதும் சூத்திரன் இயற்கைக் கடமைகளாகும். ஒருவன மிக உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்ருல் தன் குலவேலகளை முறையாகச் செய்ய வேண்டும். கடவுள் உலகெங்கும் வியாபித்துள்ளவர் : அவரவர்கள் வேலைகளைச் செய்ய இயக்கிவைக்கின்ருர்.

ஒருவன் முக்தி பெறவேண்டு மென்றால், கடவுளைத் தியானம் செய்வதும், தன்குல வேலைகளைச் செய்வதும் அவன் திருப்பணிகளாக இருக்க வேண்டும்.

"ஒருவன் தன் குலக் கடமைகளைச் செய்வானேயானால் அவன் எந்தப் பாவத்தையும் செய்தவனாகான். தன் குலக் கடமைகளைப் பாவம் செய்தாயினும், தவறு செய்தாயினும், செய்து முடிக்க; ஏனெனில், "எல்லா நெருப்பிலும் புகை உண்டு, நமது, எல்லா வேலைகளிலும் கொஞ்சம் தவறு இருக்கத்தான் செய்கிறது." இவை அனைத்தையும் கூறி அர்ஜுனன் தன் க்ஷத்திரிய குலக் கடமைகளைச் செய்தாக வேண்டும் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா, "உன் பகைவர் களைக் கொன்றால், அரசாள்வாய், நீ கொல்லப்பட்டால், க்ஷத்திரியக் குலக் கடமைகளை நீ நிறைவேற்றியதின் பொருட்டு, சுவர்கத்துக்குச் செல்லுவாய்" என்கிறார் கிருஷ்ண பகவான்.

கடவுள் தான் நான்கு வருணங்களையும் ஏற்படுத்தினார் என்று கீதை கூறுகிறது. எனவே, அவரவர்களின் குலக் கடமைகளை, எந்தவித லாபமும் நஷ்டமும் எதிர்பாராமல், செய்வார்களேயானால், அதாவது, 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்றருந்தால், அதுவே அவர்களைச் சுவர்க லோகத்திற்கு எடுத்துச் செல்லும் என்பதேயாகும்.

பழைய சாத்திர நூல்களில் முதன் முதலாக உள்ள பொருள்கள் இல்லாமற் போய்விடுவதில்லை என்றும், இலலாததொன்றிலிருந்து இருக்கும் பொருள்கள் தோன்ற வில்லை என்றும கீதை கூறுகிறது.

கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார்:

"என்னைவிடப் பெரியது ஒன்றுமில்லை. முத்துக்கள் மாலையில் உள்ளதுபோல் எல்லாம் என்னுள் அடங்கி

யுள்ளன. நீரிலுள்ள நீர்மை நானே, சூர்ய சந்திர ஒளியும் நானே, மனிதருள் பௌருஷமும் நானே, நிலத்தின் நறுமணமும் நானே, சூரியனின் வெப்பமும் நானே, அறிஞர்களின் அறிவும் நானே, வீரரின் பேராண்மையும் நானே, பலசாலிகளின் பலமும் நானே, ஒழுக்கத்தின் பாதையில் செல்லும் எல்லா விருப்பங்களும் நானே..."

இந்திய தத்துவ ஞானத்திலேயும், குறிப்பாக இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இடையேயும் கீதை அழியா இடம் பெற்றுள்ளது.

ஆனால் கீதையைப்பற்றி சுவாமி விவேகானந்தர் எழுதியுள்ள சில கருத்துகளை இங்குத் தருவது உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறோம்.

"கீதையைப் பற்றிய கருத்துகள்" என்ற நூலில் விவேகானந்தர் கூறுவதாவது :

கீதை என்ற நூல் மகாபாரதத்தில் ஒரு பகுதியாகும். கீதையைச் சரிவர புரிந்து கொள்ள மிக மிக முக்கியமான பலவற்றை உணர வேண்டும்.

முதன் முதலாக உள்ளபடியே மகாபாரதத்தின் ஒரு பகுதியாக கீதை அதாவது வேத-வியாசர் எழுதியதா அல்லது அதில் புகுத்தப்பட்டதா; இரண்டாவதாக கிருஷ்ணன் என்பவர் சரித்திர ரீதியாக உயிர் வாழ்ந்த ஒருவரா; மூன்றாவதாக கீதையில் கூறப்படுவது போல் குருக்ஷேத்திர யுத்தம் உள்ளபடியே நடந்ததா; நான்காவதாக அர்ஜுனனும் ஏனையவர்களும் உள்ளபடி உயிர் வாழ்ந்தவர்கள் தாமா என்பன.

கீதையைச் சங்கராச்சாரியார் எழுதி மகாபாரதத்தில் புகுத்தினார் என்று சிலர் கூறுகிறார்கள் என்கிறார் விவேகானந்தர்.

கீதை கிருஷ்ணன் ஒரு வேளை மன்னனாக இருந்திருக்கலாம். அந்தக் காலத்தில் மன்னர்கள்தான் பிரம ஞானத்தைப் பரப்பினவர்கள். எது எப்படி இருந்த போதிலும் சரி, யார் கீதையை வெளியிட்டிருந்தாலும் சரி, மகாபாரதத்திலுள்ள தத்துவார்த்தக் கொள்கைகளைத்தான் கீதையும் கூறுகிறது. ஆகவே மகாபாரத காலத்தில் யாரோ ஒருவர் கிளம்பி பிரம ஞானத்தைப் பரப்பி இருக்கலாம் என்று ஊகிக்கலாம். குருக்ஷேத்திர யுத்தம் நடைபெற்றது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. யுத்த களத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனுடன் எல்லையற்ற விவாதத்தில் இறங்கினார் என்றால் இதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? அவர்கள் அப்படியே உரையாடினார்கள் என்று வைத்துக் கொண்டால், பக்கத்தில் ஒரு சுருக்கெழுத்தாளரை வைத்துக் கொண்டா என்ற பிரச்சினை எழுகிறது என்கிறார் விவேகானந்தர்.

குருக்ஷேத்திர யுத்தம் என்பது உருவகக் கதையாக இருக்கலாம் என்கிறார் அவர்.

அர்ஜுனன் ஏனைய பெயர்களும் பயன்படுத்தப் பட்டுள்ளனவே தவிர இவர்கள் இருந்தனரென்றோ குருக்ஷேத்திரத்தில் யுத்தம் செய்தனர் என்றோ கூறுவதற்கு எவ்வித சான்றுமில்லை என்கிறார் விவேகானந்தர்.

13. சார்வாகர் பொருள் முதல்வாதம்

சர்வ சாதாரணமாக இந்திய தத்துவ ஞானம் அனைத்துமே ஆன்மீகக், எண்ணமுதல்வாதம் என்ற கருத்து உலகெங்கும் பரவியுள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது என்பதனை ஆங்காங்கு எடுத்துச் சொல்லி

வந்தோம். நாத்திகத்திற்கும் பொருள்முதல்வாதத்திற்கும் எண்ணற்ற சான்றுகள் உள்ளன என்பதுதான் உண்மையாகும்.

ஆனால், அறிவின் கோட்பாட்டைப் பற்றியும், பொருளைப் பற்றியும், உணர்வைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும், மனித வாழ்க்கையின் லட்சியத்தைப் பற்றியும், மூல முதல் இயல்பைப் பற்றியும், பந்தங்களிலிருந்து விடுதலை பெறுவதைப் பற்றியும், முன்னுக்குப் பின் முரணில்லாமல் தத்துவ ஞானிகளில் ஒரு சாரார் பொருள்முதல் வாதத்தை வலியுறுத்தி வந்துள்ளனர். இவர்கள் சார்வாக தத்துவத்தைப் பின்பற்றுவோர் என்று கூறப்படுகின்றனர்.

சார்வாகர் என்று ஒரு தத்துவஞானி உண்மையிலேயே வாழ்ந்தாரா? அவர் எந்தக் காலத்தைச் சேர்நதவர்? என்று தெளிவாகக் கூற எந்தவித ஆதாரமும் இல்லை, சார்வாகர் என்பதற்கு இனிய நாவினர் என்று பொருள். பிரகஸ்பதி இத் தத்துவததின் கர்த்தா எனவும் கூறுவர்.

மகாபாரதத்தில் சார்வாகர் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டவ சகோதரர்கள் வெற்றி வாகையுடன் குருக்ஷேத்திரத்திலிருந்து திரும்பி வரும் காலத்தில், ஆயிரக் கணக்கான பிராமணர்கள் பாண்டவ சகோதரர்களைச் சூழ்ந்து கொண்டு யுதிஷ்டிரரை ஆசிர்வதிக்க நகர வாசலில் கூடி இருந்தனர். அப்பொழுது அவர்களில் ஒருவர் சார்வாகர். பிராமணர்களைத் தளளிக் கொண்டு முன் சென்று, மன்னனைப் பார்த்துச் சொன்னார்.

> 'உங்களுடைய உறவினரைக் கொன்றதற்கு இந்தப் பிராமணர்கள் கூட்டம் உங்களைச் சபிக்கின்றது. உங்கள் மக்களையும், உங்கள் பெரியோர்களையும் கொன்று, நீங்கள் அடைந்த லாபம்தான் என்ன? நீங்கள் சாக வேண்டும்!' என்று

கூடியிருந்த பிராமணர்கள் இந்தச் சம்பவத்தைக் கண்டு திடுக்கிட்டனர். யுதிஷ்டிரர் மிகவும் நொந்து போய் சாக விரும்பினாராம். அப்பொழுது, கூடியிருந்த பிராமணர்கள் அவரைப் பார்த்து, 'சார்வாகர் எங்கள் பிரதிநிதி அல்ல, அவர் மாறு வேடத்தில் வந்துள்ள அசுரர், துரியோதனன் உளவாளி. உண்மையான பிராமணர்கள் எல்லோரும் மன்னனைப் போற்றிப் புகழ்கின்றனர்' என்றனர்.

சார்வாகரைப் பிடித்து, கட்டிப் போட்டு, நெருப்பு வைத்துக் கொளுத்தினர் என்பது வரலாறு.

இந்தச் சார்வாகர் பொருள்முதல் வாதியா இல்லையா என்பதற்கு எவ்வித சான்றுமில்லை.

ஆனால் சார்வாகம் என்ற பதத்தைப் பொருள் முதல் வாதிகளைக் குறிக்க உபயோகப்படுத்தி இருப்பதாகத்தான் கருத வேண்டும். சார்வாகம் உலகாயதம் எனவும் நாஸ்திகம் எனவும் சுட்டப்படுகிறது.

சார்வாகம் என்று அழைக்கப்படும் தத்துவம் என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம்.

ரிக்கு வேதத்தில், 'பிரமனஸ்பதி' பொருள்தான் இறுதி உண்மை என்று கூறுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிரஹஸ்பதி என்ற வடிவம் இவருக்கு அளிக்கப் பட்டது. சார்வாகர்கள் பிரஹஸ்பதியைப் பின்பற்று வோர், அவர்கள் லோகாயத வாதிகள் என்றும் அழைக்கப் பட்டனர். பிரகஸ்பதி என்ற பெயர் மறைந்து விட்டது, ஆனால் சார்வாகர்கள் என்பது நிலைத்து நின்றது.

இந்திய தத்துவ ஞானிகள் இடையே ஒவ்வொரு கட்டத்திலும் சார்வாகர் எண்ணங்களைப் பிரதிபலித்த

வர்கள் உண்டு. இந்தத் தத்துவம் எல்லா எண்ணம் முதல் வாதிகளுக்கும் பெரும் தொல்லையாக இருந்தது. ஆஸ்திக தத்துவ ஞானிகள் தங்கள் தத்துவத்தில் பெரும் பகுதியை இதற்கு மறுப்பளிப்பதற்கு, ஒதுக்கி யுள்ளனர்.

இந்தத் தத்துவத்தின்படி நமது ஐம்புலன்களால் உணரக் கூடியதுதான் அறிவியல் கோட்பாடாகும். நமது புலனுணர்வுதான் உள்ளதை உள்ளபடி எடுத்துக் காட்டு கின்றது. மற்றதெல்லாம் ஊகம்தான், சான்றுகளைக் கொண்டும் உள்ளதைக் கண்டுபிடிக்க முடியாது, ஏனெனில அதுவும் ஊகமேயாகும்.

வேதங்கள் எண்ணற்ற சந்தேகங்கள், முரண்பாடுகள் அர்த்தமற்றவைகளைக் கொண்டுள்ளன. ஒரு வேதத்தின் நடைமுறை மற்றொரு வேதத்தின் நடைமுறையை நிர்மூல மாக்குகிறது. வேதங்கள் கூறும் பலன்களை அடையவே முடியாது.

நெருப்பு இல்லாமல் புகை கிடையாது என்பதைச் சார்வாகர்கள் எடுத்துக் கொண்டு நாம் பிறப்பதற்கு முன்னரும் இது உண்மையே, நாம் இறந்த பின்னரும் இது உண்மையாகத்தான் இருக்குமாதலால் காரண காரியம் என்றெல்லாம் சொல்லி உலகத்தைக் கடவுள் சிருஷ்டித்திருக்க வேண்டும் என்று கூறுவதைக் கடுமையாக எதிர்த்தனர்.

இப்பிரபஞ்சம் தனிமங்களைக் கொண்டு தற்செயலாக ஏற்பட்டிருக்க வேண்டும்; இயற்கைதான் எல்லா வற்றிற்கும் காரணம் என்கின்றனர் சில சார்வாகர்கள்.

சார்வாகர்கள், நான்கு தனிமங்கள் இருக்கின்றன வென்றும், அவை, மண், நீர், காற்று, தீ என்றும், இவை அழியாப் பொருள்கள் என்றும் கூறுகின்றனர்.

பொருளிலிருந்து உயிர் தோன்றியது என்றனர்.

தன்னுணர்வு உடலின் ஒரு குணமாகும், அது தனித் தன்மை வாய்ந்தது அன்று. ஆன்மா என்றொன்றில்லை, உடலேதான் ஆன்மாவாகும். மனிதன் இறந்தான் என்றால் தன்னுணர்வும் பூதஉடலுடன் மறைகின்றது. மண்ணோடு மண்ணாகின்றான் அல்லது சாம்பலாகின்றான். மறுபிறவி, ஆன்மா ஒரு உடலைவிட்டு மற்றொன்றுக்குக் கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்பதெல்லாம் வெறும் கற்பனையே.

சமயம் இயற்கையிகந்தவைகளின் மீது ஆதாரப் பட்டது. ஊகம் என்பதில்லை என்றால் இயற்கையிகந் ததும் ஒன்றுமில்லை என்பதே. சர்வம் ஈசன் செயல் என்றால், எல்லாம் வல்ல ஈசன் ஏன் வெளிப்படையாகத் தாம் இருப்பதைப் புலனாக்கக் கூடாது? நாம செய்த கன்மத்தை நாம் அனுபவிக்க வேண்டும் என்றால் கடவுளுக்கு அவசியம் என்ன? கடவுள் அல்ல இவ்வுலகை ஆள்வது, பிரத்யட்சமாக நாம பார்க்கும் அரசர்களே. ஆன்மா என்பதே ஒன்றில்லை என்றால் அது முக்தி அடைகிறது என்பதின் பொருள் என்ன? முக்தி என்றால் இன்பமு மில்லாத துன்பமுமில்லாத நிலை என்கிறார்கள்—இது அர்த்த மற்றது. சுவர்கலோகம், நரகலோகம் என்பதனைத் தும் கற்பனையே. உள்ளபடியே அப்படி எதுவும் இல்லை. அவைகளைக் கண்டவர்களும் இல்லை, காணப்போகிறவர் களும் இல்லை.

இந்திய தத்துவ ஞானிகள் இவ்வுலகக் கஷ்டங்களி லிருந்து தப்பித்து ஓட ஏதேதோ கற்பனை செய்துள்ளனர், என்று சார்வாகர்கள் என்று கூறப்படும் இந்திய பொருள் முதல்வாதிகள் அக்காலத்திலேயே கூறியுள்ளனர்.

14. சைவ சித்தாந்தம்

தமிழக சைவ சிந்தாந்தம் பெரிய அளவு வளர்ச்சி பெற்று இந்திய தத்துவ ஞானத்தில் முக்கியமானதோர் இடம் பெற்றுள்ளது. கி. பி. எட்டாவது நூற்றாண்டில் சங்கரர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய பாஷ்யத்தில சைவ சிந்தாந்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சித்தாந்திகளின் தத்துவம் மஹேஸ்வரனால் அருளப்பட்டது என்று சங்கரர் கூறுகிறார்.

மெய்கண்டதேவர், "சிவஞானபோதம்" என்ற நூலை இயற்றினார். இவர் தென் ஆற்காடு மாவட்டத்தில் பிறந்தவர். ராஜராஜ சோழன் (கி. பி. 1216-48) காலத்தைச் சேர்ந்தவர்.

ஸ்ரீகாந்தர் கி. பி. 1270 அல்லது சமகாலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று தத்துவ சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஸ்ரீகாந்தர் பிரம்ம சூத்திரத்திற்கு ஒரு பாஷ்யம் எழுதியவர். ஸ்ரீகாந்தரும் சைவசிந்தாந்தத்தின் முன்னோடி என்று கூறலாம்.

சைவசித்தாந்திகள் வேதங்களை ஏற்காதவர்கள், ஆகமங்களை முழுதும் ஏற்பவர்கள், ஆனால் கடவுள் நம்பிக்கை உண்டு.

திருமூலர், "வேதங்களைப்போலவே ஆகமங்களும் கடவுளால் இயற்றப்பட்டவைகளே; வேதங்கள் பொதுப் படையானவை, ஆகமங்களோ சிறப்பானவை; சிலர் இவை வெவ்வேறு என்ற போதிலும், எல்லாம வல்ல ஈசனுக்கு வித்தியாசங்கள் இல்லை."

சங்க காலத்தில் சிவ வழிபாடு நடைபெற்றதனை இலக்கியங்களில் காணலாம்.

அறுபத்திமூன்று நாயன்மார்கள் சிவபக்தியையும், சிவ பூசையையும் பெருமைப்படுத்தினர். அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனர். மாணிக்கவாசகர், ஆகிய நால்வரும் சமய குரவர் எனப்பட்டனர் தென்னகத்தில் இன்றைக்கும் சைவசிந்தாந்தசமய ஆசாரியர்களாகப் பூசிக்கப் படுகின்றனர். அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனர் பாடல்களைத் "தேவாரம்" என்றும், மாணிக்க வாசகர் பாடல்களைத் 'திருவாசகம்' என்றும் கூறுகிறோம்.

சைவசித்தாந்த தத்துவ வகைகள் மூன்றுகும் — பதி (கடவுள்), பசு (ஆன்மா). பாசம் (பந்தம்) என்பன. சித்தாந்த தத்துவப்படி கடவுள்தான் எல்லாவற்றையும் விட ஆகச் சிறந்த உண்மையாகும். மெய்கண்டதேவர் கூறுகிறார்:

> "எவ்வாறு எல்லாப் பொருள்களையும் காலக் கேட்டில் மாறவைக்துங்கால், தான் மாறுமல் நிலைத்து நிற்கின்றதோ, அவ்வாறே, இவ்வுலகைப் படைத்து, பாதுகாத்து, அழிக்கும் சக்திவாய்ந்த பரம்பொருள், தன் உணர்வினுல் ஆதியும் அந்தமுமில்லாத தாக இருக்கின்றது. உலகில் ஏற்படும் மாற்றமனைத் திற்கும் மாரு அடிப்படையாயுள்ளது இப்பரம் பொருளே. இவ்வுலகம் அதன் இயல்பொருளே."

சைவ சித்தாந்த நூல்களில் கடவுள் 'அரன்' என்றும் ,சிவன்' என்றும், அழைக்கப்படுகிறார்.

சைவசித்தாந்த சிவன் திருமூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு. ருத்ரன் மூவரையும் விடச் சிறந்தவர். இந்திய தத்துவ பதங்களில, சர்வ சாதாரணமாக, ஈஸ்வரன் மஹேஸ்வரன் என்பன சிவனைத்தான் குறிக்கின்றன;

சிவன் விஸ்வரூபத்தைக் கொண்டவன். அதே சமயத்தில் இப்பிரபஞ்சத்தைவிட மிஞ்சியுள்ளவன்.

சர்வம் சிவமயம்! அவனே இப்பிரபஞ்சம். இப்பிரபஞ் சத்தை ஏற்படுத்தினவனும் அவனே. அவன் ரூபமும் உடையவன், ரூபமில்லாதவன்.

அவன் அஷ்டமூர்த்தி. அதாவது எட்டுவடிவங்களையும் உள்ளவன். நிலம், நீர், வளி, தீ, காற்று, கதிர், மதி, புலனறிவுடைய மனிதன் இவை அனைத்தும் சிவனே! என்று அப்பர் கூறுகிறார். சிவனைப் பார்க்கவும முடியாது, எண்ணத்திற்கும் அப்பாற்பட்டவர் என்கிறார் மெய்கண்ட தேவர். ஆகச்சிறந்த சிவன் ஆணாகவும், பெண்ணாகவும் வந்த போதிலும் நெருப்பு, ஈதர், இறுதிக் காரணம் அனைத் திற்குமே அப்பாற்பட்ட, வடிவமற்ற, பெயரற்ற, எவ்வித அடையாளமுமற்ற பொருள் என்கிறார் மாணிக்கவாசகர்.

சைவசித்தாந்திகள் அவதாரங்களில் நம்புவதில்லை, சிவன் அவதாரமே எடுத்ததில்லை.

இப்பிரபஞ்சம் உள்பொருள்; வெறும் தோற்றம் (மாயை) அல்ல. மாயை ஒரு பொருள்; அதுவே சக்தி. கடவுள் அறிவு உருவினன். பிரபஞ்சப் அறிவற்றது. அறிவினனான கடவுள் சக்தி என்ற ஆற்றலின் துணை கொண்டு அறிவற்ற இப்பிரபஞ்சத்தையும் உயிர்களையும் படைத்தான். அவன் எல்லாவற்றையும் தோற்றுவித்து, காத்து, தன்னுள் அடக்குவான்; உயிர்களுக்கு முற்பிறவி, பிற்பிறவி உண்டு; வினை உண்டு, அது தொடர்ந்து வருவது என்கின்றது சைவசித்தாந்தம்.

ஆன்மாக்கள் பல; அவை மாயையுடன் கலப்பதால் குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்து உழல்கின்றன; ஆன்மா முக்தியடைய வேண்டுமானால், சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு மார்க்கங்களில் ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும்; "விடுபட்ட உயிர் (ஆன்மா) கடவுள் திருவடிகளில் கலக்கும்" என்கின்றது சைவ சித்தாந்தம்.

இல்லற வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்து இன்பம் துய்த்து வரும் காலத்திலேயே இறைவனை இடையறாது சிந்தித்துவருபவர்கள் அரனடிச்சேர்வர் என்பர் சைவ சிந்தாந்திகள். நடைமுறையில் சைவசிந்தாந்திகள் உலகாய தராகவே காட்சியளிப்பதைப் பார்க்கலாம். தமிழகத்தில் உள்ள பெரும்பாலான சைவர்கள் சைவசித்தாந்த மரபைப் பின்பற்றுபவர்களே.

திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் பெரிய சைவமடங்கள் உள்ளன. தீவிர சைவம் வீரசைவம் எனப்படும். இதன் கர்த்தா அண்டை நாட்டில் பிறந்த பஸவேசர். வீரசைவமும் ஒரு காலத்தில் தமிழகத்தில் செழித்தோங்கியது. வீரசைவ மடங்களும் தமிழகத்தில் பல உண்டு.

பிற்போக்கு, நிலப் பிரபுத்வம் இவற்றின் நிலைக்களன் இம்மடங்கள்.

15. மனுதர்ம சாத்திரம்

மனுதர்ம சாத்திரம் வருணங்களின் (ஜாதிகளின்) கடமைகள் தெய்வீகத்தன்மை வாய்ந்தவை என்றும், அவரவர்கள் பிறந்த ஜாதி எதுவோ, அந்த ஜாதியின் கடமைகளைச் செய்தல் கடவுளின் ஆக்ஞை என்றும் வற்புறுத்துகிறது.

மனுதர்ம சாத்திரம் இந்து சமூதாய அமைப்பை— பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என்னும் பிரிவைப் பேணிக்காக்கின்றது.

க்ஷத்திரிய மன்னனுக்குப் பிராமணன் புரோகிதனாக வும் யோசனை சொல்லக்கூடியவனாகவும் அமைந்தான்.

"உலகத்தைப் படைத்த பின், பிரஜாபதி, வைசியர் களுக்கும் பிராமணர்களுக்கும் பசுக்களைக் கொடுத்தார்.

மன்னனுக்குப்படைத்த எல்லா ஜீவராசிகளையும் கொடுத்தார்," என்று மனுகூறுகிறார்.

மேலும்,

"பிராமணர்கள் இல்லாமல் க்ஷத்திரியர்கள் வாழ, முன்னேற்றம் பெறமுடியாது; க்ஷத்திரியர்கள் இல்லாமல் பிராமணன் அழிந்து போவான்; பிராமணனும் க்ஷத்திரியனும் இரண்டறக் கலந்து நின்றால் இவ்வுலகத்தில் மட்டுமல்ல, அடுத்த உலகத்திலும், அவர்கள் நல்வாழ்வு வாழ்வார்கள்" என்று மனுசாத்திரம் கூறுகிறது.

இதன் பொருள் என்ன? பிராமணர்கள், க்ஷத்திரியர் ஆட்சியை வேதங்கள் மூலமாக நியாயப்படுத்தி, அவரவர்கள் ஜாதிக்கடமைகளைச் செய்ய வேண்டும், மன்னனை எதிர்க்கக்கூடாது, அப்படி எதிர்த்தால் நரகத்துக்குத் செல்வார்கள் என்று கூறி சமுதாயக் கொடுமைகள் எல்லாவற்றையும் நியாயப்படுத்துவதே பிராமண ஜாதிக் கடமை என்பது.

மன்னனுக்கு 'மகுடம்' புனையும் காலத்தில் மந்திரங்களை ஓதி பிராம்மண புரோகிதர் கீழ்க்கண்டவாறு கூற வேண்டுமென மனு கூறுகிறார் :

'மகாஜனங்களே! இதோ உங்கள் மன்னன். பிரபஞ்சத்தை ஆளக் கடவுளும், இந்நாட்டை ஆள இம் மன்னனும் ஏற்பட்டுள்ளனர் என்று வேதங்கள் கூறுகின்றன.' ஆனால், பிராமணர்களுக்குச் சோமபானமே அரசனாகும் என்று மனுதர்ம சாத்திரம் கூறுகிறது. பிராமணர்கள் மாமிசம் உண்பதும் தவறல்ல என்றும் இது சொல்லுகிறது. முடிசூட்டிய மன்னனாட்சியை உறுதிப்படுத்தவும் பிராம்மணர் சோமபானம் அருந்துவதையும் மாமிசம் உண்பதையும் நியாயப்படுத்தவும் சாத்திரங்கள் உதவுவதைப் பார்க்கலாம்.

16. பொய்த் தோற்றமும் புறஇயல் மெய்ம்மையும்

இதுவரை இந்திய தத்துவ ஞானிகள் கூறியவற்றை ஓர் அளவு பார்த்ததில், நாத்திகம் எவ்வளவு ஆழமாக இந்திய தததுவத்தில் வேரூன்றி இருக்கின்றது என்பது தெளிவு. அந்த நாத்திகத்திற்தம் இன்று நாம் பின் பற்றும் நாத்திகத்திற்கும் அதாவது பொருள்முதல் வாதத் திற்கும் பெரியதோர் வேற்றுமை உண்டு என்பதில் ஐய மில்லை. இவ்வேற்றுமைகள் யாவை என்பதை இங்கு விளக்குவோம்.

இந்திய தத்துவ ஞானிகள் அறிவு அளவை, அறிவு இயல் அடிப்படையில் கடவுள் என்பது ஊகம, அல்லது நம்பிக்கை என்றுதான் கூறுகிறார்கள்.

தத்துவமும் சமயமும் இரண்டறக் கலந்து, நாளடை வில் சமயம் தத்துவத்தையே விழுங்குவதுபோல் இன்று காட்சி அளிப்பதே இதற்குக் காரணம்.

தத்துவம் என்பது அறிவியல் கோட்பாடு. சமயம் அல்லது மதம் என்பது கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்வதோடு அவரைத் தொழுவதையும, தொழும் முறை யையும் வலியுறுத்துவது. சமயம், மூடநம்பிக்கைகள் அர்த்த மற்ற சடங்குகள் அனைத்தையும் புகுத்தியுள்ளது.

உதாரணமாக, சங்கரர், சுவாமி விவேகானந்தர் இருவரிடமும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

கேள்வி: 'அப்படியானல் கோயில்களுக்குப் போவது, அங்குக் கடவுளைத் தொழுவது தவறு என்பதல்லவா உங்கள் கருத்து?

சுவாமி விவேகானந்தர் பதில் :-

"வேதாந்திக்குக் கோவிலில் வேலை இல்லை. ஆனால் பக்குவமடைந்தவர்களுக்குத்தான் கோவில் தேவை இல்லை. சாதாரண ஜனங்கள் கடவுளைப் பற்றி நினைக்க, அவரைத் தொழ, கோவில் ஒரு கருவியாகத் தான் இருக்கின்றது. ஆகவே வளர்ச்சியடையாத மக்கள் கோயிலுக்குப் போனால் அது தவறு என்று கூறமாட்டேன்.

இதே கேள்விக்குச் சங்கரரும் இதே பதில் அளித்துள்ளார்.

தத்துவஞானி கார்ல் மார்க்ஸ் கூறுகிறார் :-

"தத்துவஞானிகள் உலகத்தை வியாக்யானம் செய்துள்ளனர். ஆனால் நமது பணி உலகத்தை மாற்றி அமைப்பதாகும்.

"எண்ணங்கள், கருத்தோட்டங்கள், தன்னுணர்வு அந்தந்தக் காலகட்டத்தில் இருந்து வந்த, இருந்து வரும் மனித சமுதாய உற்பத்தி முறைகளையும், இதனால் மனிதர்களுக்கிடையே ஏற்படும் உறவுகளையும், சுருங்கக் கூறின், வாழ்வின் மொழியை ஒட்டித் தான் இருக்கின்றன...மானிட எண்ணங்கள், கருத் தோட்டங்கள் முதலியன மனிதர்களால் ஏற்படு கின்றன. இம் மனிதர்கள் அன்றைய சமுதாய உற் பத்திச் சக்திகள் எந்த அளவுக்கு வளர்ந்து வந்துள்ள னவோ அந்த அளவிற்கு ஒத்தாற்போல் எண்ணங்களை யும், கருத்தோட்டங்களையும் பிரதிபலிக்கின்றனர்.... எனவே, ஒழுக்கம், சமயம், அப்பாலைத்தத்துவம், மூளை யில் தோன்றும் ஏனைய கொள்கைகளின் வடிவங்கள், தன்னுணர்வின் வடிவங்கள் அனைத்துமே சுதந்திரத்தை இழக்கின்றன. அவைகளுக்குத் தனித்த சரித்திரமும் இல்லை. தனித்த வளர்ச்சியுமில்லை; மனித சமுதாய வளர்ச்சிதான் அவைகளின் வளர்ச்சியாகும். தன்னு

ணர்வு அல்ல வாழ்க்கையை நிர்ணயிப்பது. வாழ்க்கை தான் தன்னுணர்வை நிர்ணயிப்பது......எனவே, மனித சமுதாய வளர்ச்சிதான் எல்லாச் சரித்திரத்திற்கும் அஸ்திவாரமாகும். அதுதான் மனிதர்கள் மூளையில் ஏற்படும் எல்லாப் புனைகருத்துகளுக்கும், தன்னுணர்வின் எல்லா வடிவங்களுக்கும், சமயத்திற்கும், தத்துவதிற்கும், ஒழுங்கிற்கும், இத்தியாதி பல்வேறு விஷயங்களுக்கும் காரணமாக உள்ளது.... ஆகவே, இதிலிருந்து எழக் கூடியது என்னவெனில், தன்னுணர்வின் எல்லா வடிவங்களையும் விளைவுகளையும், தத்துவ விமர்சனத்தின் மூலமாகவும், 'உன்னை நீயே உணர் !' என்பதாலும் தீர்த்துவிட முடியாது. மாறாக, சமுதாய அமைப்பைத் தகர்த்தெறிந்து, இவ்வாறு தத்துவ மோசடிக்காரர்களைப் பேணிக்காக்கும் சமுதாயத்தை மாற்றி, அமைப்பதின் மூலம்தான் இது இயலும்.'

மனிதன் சமுதாயத்தைச் சமைத்தானே ஒழிய, சமயம் மனிதனை ஏற்படுத்தவில்லை என்பதுதான் பொருள்.

கடவுள் என்ற கற்பனையை மனித உள்ளத்தில் சிறு வயதிலேயே திணித்து, அதிலிருந்து வேறு எண்ணங்கள் ஏற்படாமல் இருக்கச் செய்கிறது சமயம். சமயம் இன்றுள்ள சமுதாய அமைப்பைப் பேணிக் காக்கின்றது. சமுதாயப் பொருளாதார அமைப்பின் வெளித்தோற்றமே சமுதாய சமய அமைப்பாகும். கடவுள் என்ற கருத்து குறிப்பிட்ட சமுதாய அமைப்பில் தோன்றிற்று. அதை, குறிப்பிட்ட சமுதாய அமைப்பில், இயல்பாகவே மனிதன் விட்டுவிடுவான், கடவுள் நம்பிக்கை என்பதற்கு அவசியமே ஏற்படாது என்பதற்கு மனித சரித்திரமே சான்றாகும்.

"சமயம், அல்லது மதம் மனிதனின் அபினி," என்கிறார் காரல் மார்க்ஸ். இதன் பொருள் என்ன?

எவ்வாறு அபினி அருந்தியவன் போதையில் இருக்கின்றானோ, இவ்வுலகில் நடைபெறும் சம்பவங்களுக்கு அப்பால் நிற்கின்றானோ அவ்வாறே சமய போதத்திலுள்ளவன் இவ்வுலகிலுள்ள எல்லாவற்றிற்கும் கடவுள் காரணமானபடியால், அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்றபடியால், அவரவர்கள் கன்மங்களை அநுபவிப்பதே ஈசனுக்கு நாம் செய்யும் உதவி என்று நினைக்கின்றான். ஆகவே, சமுதாயத்திலுள்ள அநீதிகளைப் போக்குவது தன் கடமையல்ல என்று கருதுகிறான்.

சமுதாயக் கொடுமைகள் ஒழிய வேண்டும், புதியதோர் சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற கருத்தே அவன் உணர்ந்த சமயத்திற்கு முரண்பட்டதாகும்.

ஆகவேதான், பகுத்தறிவு சமயத்தைச் சாடுகின்றது. பகுத்தறிவு மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்றால், வர்க்க பேதமற்ற, சுரண்டலற்ற சமுதாயம் ஏற்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் சமுதாயத்தில் கடவுளுக்கும், சமயத்திற்கும், சமய குருக்களுக்கும் எவ்வித இடமுமில்லை. இவை அனைத்தும் தேவையற்றதாய் விடுகின்றன.

மனிதன் அத்தனை மனிதப் பண்பாட்டுடனும் வாழ்வாங்கு வாழப் புதிய சமுதாயம் வழிகோலும்.

17. பெரியாரும்—தோழர் டாங்கேவும்

இந்திய தத்துவத்தைப் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் நன்கு பயின்றவர் என்பதில் ஐயமில்லை. சமய சாத்திரங்களின் மூடநம்பிக்கைகளையும் அர்த்தமற்ற

சடங்குகளையும் விடாது எதிர்த்ததற்குக் காரணம் அவை அனைத்தும் மக்களை மாக்களாக்கி வைத்திருக்கின்றன, மனிதப் பண்பாட்டையே இழிவுபடுத்துகின்றன என்பதை அவர் நன்கு உணர்ந்ததேயாம்.

இந்திய தத்துவங்களுக்கு மூலங்களாகிய வேதங்களும், உபநிஷத்துகளும் வருணாசிரம தருமத்தை வலியுறுத்துகின்றன.

வருணங்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப்பில் ஏற்பட்டன.

கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒப்பற்ற தலைவரும், தத்துவ ஞானத்தில் மிகச் சிறந்தவருமான தோழர் எஸ். ஏ. டாங்கே, வருணங்கள் இந்திய தத்துவ சாத்திரங்களில் எப்படி எப்போது ஏற்பட்டன என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்:-

"சமுதாயத்தில் வேலைப் பிரிவினை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால், அவசியத்தால் ஏற்படுகின்றது. இந்த அல்லது அந்த வேத ரிஷியோ கடவுளோ அறிவினால் ஏற்படுத்தினர் என்பது மெய் அல்ல....

"நமக்குக் கிடைக்கும் தகவல் வேத ஆசிரியர்கள் உலக உற்பத்தியைப் பற்றிக் கூறும் கதைகளே. அவ்வப்போது இருந்த சமுதாயப் பிரச்னைகளை அவ்வப்போது வந்த வேதக் கடவுள்—பிரமம் அல்லது பிரஜாபதி திர்த்து வைத்துள்ளார். ஆதியில் சமுதாயத்தில் எந்த வேலைப் பிரிவினையும் கிடையாது, ஆகவே வருணங்கள் கிடையாது. பிற்பட்ட கால நிலையிலதான் வருணங்கள் தோன்றி வடிவம் பெற்றன. இது உலகப் படைப்பின் பகுதியாக கூறப்படுகிறது.

"ஆரிய சமுதாயத்தில் ஆரம்பத்தில் மூன்று வருணங்கள்தான் இருந்தன. ஆகவே, உலகம் சிருஷ்டிக்கப்பட்ட கதைகளில் சிலவற்றில் மூன்று, சிலவற்றில் நான்கு வருணங்களைக் கடவுள் சிருஷ்டித்தார் என்கின்றன. ஆனால் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவது ஒன்றுண்டு-ஆரம்பத்தில் எந்த வருணமும் கிடையாது, அல்லது ஒரே ஒரு வருணம்தான் இருந்தது, பிறகு மூன்றாயிற்று, அதற்குப் பிறகு நான்காவது சேர்க்கப்பட்டது, நான்காவது உண்மையில் ஒரு வர்க்கம் அன்று, ஏற்கெனவே இருந்த சமுதாயத்திலிருந்து கிளம்பியதன்று, என்பதே.

"சதபாத பிராமணம் (II, 1-4-11) மக்களைப் படைத்த பிரஜாபதி எதைப் படைத்தார் என்று கூறுகிறது. ஆதியில் ஒன்று மில்லாத இடத்தில் வெவ்வேறு மும்மூர்த்திகளைப் படைக்கிறார், முதல் மூன்று— பூ, பூவா, ஸ்வா; பிறகு, பூமி, ஆகாயம்; இவ்விரண்டிற் இடையே காற்று. அதற்குப் பிறகு பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், அதாவது மூன்று வருணங்கள். நான்காவதாக மூன்று தான் அல்லது ஆன்மா, பிரஜைகள், மாடுகள். இந்தக் கதையில் வேதத்தில் கூறும் மும்மூர்த்திகள் காணோம், ஆகவே தைத்திரிய பிராம்மணம் (III, 12-9-12) வேறு ஒரு கதையைச் சொல்லுகிறது. ஆரம்பத்தில் பிரமம் ஒன்றுதான்... உலகம் தோன்றியதே அவர் சிருஷ்டியாகும். பிறகு ஒவ்வொரு வேதமும், ஒவ்வொரு வருணத்தைக் கொடுத்தது என்கின்றது. இதன்படி, ஆதிமுதல் தோன்றிய வேதம் ரிக்கு வேதமாகும். இது வைசியர்களை உற்பத்தி செய்தது. பிறகு தோன்றிய சாமவேதம்தான் பிராம்மணர்களையும், பின்னர் தோன்றிய 'யஜுர்வேதம்' க்ஷத்திரியர்களையும்

உற்பத்தி செய்தன. இவ்விரு வேதங்களும் நான்காவது வருணமாகிய சூத்திரர்களைப் பற்றிக் கூறவே இல்லை. தைத்ரீய சம்ஹிதை மூன்ருவது கதை. யஜுர் வேதத்தில் (VII, 1-1-4) மேலும் இவ்வருணங்கள் பிரிக்கப்பட்டுள்ளன, பிரஜாபதி படைப்பதை விரும்பியதின் காரணத்தால், வாயிலிருந்தும், மார்பு கரங்களிலிருந்தும், இடுப்பிலிருந்தும், பாதங்களிலிருந்தும் நான்குவருணங்களும் தோன்றின. ஆனல் இந்தக் கதையின் சிறப்பு என்னவென்ருல் ஒவ்வொரு வருணமும், தனக்கென்று ஒரு குலதேவதை ஓர் ஓசையொழுக்கு, ஒரு விலங்கு இவற்றுடன் பிறந்ததாம். ஆனல் முதல் மூன்று வருணங்களுக்குக் குல தேவதைகள் உண்டு, நான்காவதாகிய சூத்திரர்கள். அடிமைகளுக்குக் குலதேவதை இல்லை. ஆனல் அவர்களுக்கு மற்றுமுள்ள தனைத்தும் உண்டு—ஓசையொழுக்கும், விலங்கும், ஸ்டோமாவும் உண்டு. இந்த ஜந்துக்கள் அளிக்கப்பட்டது எவ்வாறு என்ருல்—பிராமணர்களுக்கு ஆடு, க்ஷத்திரியர்களுக்குச் செம்மறி ஆடு, வைசியர்களுக்குப் பசு, சூத்திரர்களுக்குக் குதிரை.

'இந்தக் கதைகளில் சிறப்பான பொது அம்சம் என்ன?

'மனிதன். மிருகங்கள், உலகம் என்பதில் ஒரே குழப்பமடைந்திருந்த ஆரிய சரித்திர ஆசிரியர் தாம் ஒரு விஷயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்துள்ளார். அதாவது, ஆதியில் பிரம்மன் ஒருவனே. பிறகு மூன்று அல்லது நான்கு வருணங்கள் ஏற்பட்டன என்றும், முதல் மூன்று வருணங்களும் அதே கண—கோத்திரத்தைச் சேர்ந்த சமுதாயம் என்றும், ஆகவே அவர்களுக்குக் குலதேவதை

உண்டு என்றும். ஆனால் நான்காவது வருணமாகிய, சூத்திரர்களுக்கு அது இல்லை என்றும், அவர்கள் வென்று கைக் கொள்ளப்பட்ட அடிமைகளானபடியால் அவர்களுக்கு அது இல்லை என்றும், ஜந்துக்களும், செல்வமும் வருணவளர்ச்சியுடன் செல்ல வேண்டியவை என்றும், வருணங்கள் வேதசாத்திரங்கள் மூலம் தெளிவு படுத்தப்பட்டன என்றும் ஆரிய ஆசிரியர் கூறுகிறார். அக்கால எழுத்தாளர்கள் செய்த முயற்சி எல்லாம் என்னவெனில், மனித வளர்ச்சிக்கும், உலகவளர்ச்சிககும் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே. ஆனால் அவர்களின் அசுரமுயற்சிகள் அனைத்தும் உண்மையான விஞ்ஞான சரித்திர உறவுகளைக் கண்டுபிடிக்க உதவவில்லை.'

'சதபாத பிராமணம் (XIV-4-2-22) இந்த விஷயத்தை மேலும் தெளிவாகக் கூறுகிறது. ஆதியில் பிரமம் ஒன்றே எவ்வித பிரிவுமின்றி இருந்தது. இந்தப் பிரமம் உபநிஷத்துகளில் கூறப்படும் பிரமம் அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், பிரிவற்ற ஒன்று எவ்வித வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இடம்தராது. ஆகவே, அது பிரிவு அடைய முற்பட்டு, இந்திரன், வருணன் என்றெல்லாம் புதிய வடிவங்களை எடுத்தது. அப்படிச் செய்தும் அது வளர இயலாததால், கணக்கடவுள். குலதெய்வம் என்றெல்லாம் ஏற்பட்டன.

... ...

'ரிக்வேத காலத்தில் அடிமைத்தனம் ஒரு வியாபார வடிவத்தை அடையவில்லை. ஆனால் விரைவில் அது அவ்வடிவத்தை அடைந்தது. ரிக் வேதத்தை இயற்றியவர்கள் இந்தப் புதிய கண்டு பிடிபபைக்

கண்டு களித்தனர்.... இறந்த காலத்தில் வென்று கைக்கொள்ளப்பட்ட அடிமைகள் கொல்லப்பட்டனர். ஆனால் நிகழ்காலத்தில், உயிர்ப்பிச்சை அளிக்கப் பட்டவர்கள் தங்கள் எஜமானர்களைப் போற்றிப் புகழ்ந்து, அவர்களுக்குத் தாசர்களாக இருந்து, எல்லை யற்ற சுரண்டலுக்கு இரையாயினர். அடிமை தன் உயிரைப் பெற்றான், ஆரியன் சொத்தையும், செல்வத் தையும் பெற்றான்.... ...

"நிலத்தைச்சாகுபடி செய்தல், கைத்தொழில்கள், பண்டமாற்றம், தனிச்சொத்துடைமை, வருணங்கள் புதிய நிகழ்ச்சிகளுக்கு இட்டுச்சென்றன வர்க்கப் போராட்டமும், வர்க்க அரசும். பழைய சாத்திர பிரம்மா அடியோடு கொலை செய்யப்பட்டான். மகாபாரதம் இதைச் சுட்டிக் காண்பிக்கின்றது.

'பிரம்மா நநாஷ் ஹா!' என்கிறார் தோழர் டாங்கே.

வேதக்கடவுளே இல்லை, 'நநாஷ் ஹா' என்று மகாபாரதமே கூறியுள்ளது. பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் 'கடவுள், இல்லை! இல்லை! இல்லவே இல்லை!' என்ற உண்மையை எடுத்துச் சொன்னார்.

கடவுள் இல்லை என்பதைப் பௌத்தரும், சமணரும் மட்டுமல்லாமல், ஏறத்தாழ எல்லாப் புகழ் பெற்ற இந்திய தத்துவ ஞானிகளும் கூறாமலே கூறியுள் ளனர்.

சங்கரர் சுவர்கமும் இல்லை, நரகமும் இல்லை; கடவுள் என்ற பொருளுக்கு ஆதியில் எந்த வடிவமும் இல்லை; பிரபஞ்சம் அனைத்தும் கடவுளே என்கிறார்.

இராமானுஜருக்குக் கடவுள் தூணிலும் உள்ளார், துரும்பிலும் உள்ளார்.

ஆகவே, சாதாரண மக்கள் நினைப்பதுபோல் மனித வடிவத்திலோ, அல்லது வேறு ஒரு குறிப்பிட்ட வடிவத்திலோ கடவுள் உள்ளார் என்பதில்லை என்று ஆய்ந்து பார்த்தால் தத்துவ நூல்களிதிருந்து புரிந்து கொள்ளலாம்.

கசடறக் கற்ற சிந்தனையாளரான பெரியார் ஈ.வே.ரா. கடவுள் இல்லை என்றால் பகுத்தறிவு படைத்தவர்களுக்கு மட்டும் இல்லை என்பதல்ல, உண்மையில் அப்படி ஒன்று இல்லை என்பதே அதன் பொருள்.

எனவே, ஆஸ்திகர்களும் பிற்போக்கு முகாமும் கடுமையாக எதிர்த்தபோதிலும், தூற்றியபோதிலும் பெரியார் ஈ.வே.ரா. புத்தர், மகாவீரர் கபிலர், கணாதர், சங்கரர், இராமானுஜர், மாத்வர், சுவாமி விவேகானந்தர் போன்ற தத்துவ ஞானிகள், சிந்தனையாளர்கள் வரிசையைச் சேர்ந்தவராகத் திகழ்கின்றார்.

அவர் நாத்திக மரபைச் சேர்ந்த பழுத்த அறிவாளர்.

பெரியார் ஈ. வே. ரா. பழுத்த தத்துவ அறிவாளர் மட்டுமன்று. இருபதாவது நூற்றாண்டின் இந்திய பகுத்தறிவின் சிகரம்.

அவர் திருப்பெயர் மக்களிடை நிலைத்து நிற்கும்.